கல்வியில் வேண்டும் புரட்சி

காந்தியடிகள்

ஆதாரக் கல்வி பற்றி எழுதிய கட்டுரைகளின் தொகுதி

மு. அருணாசலம்
மொழிபெயர்த்தது.

தமிழ்நாட்டு ஆதாரக் கல்விச் சங்கம்
கிழமூங்கிலடி – சிதம்பரம்.

1949]

விலை ரூ. 1–8–0

முதற் பதிப்பு 1—7—1947
இரண்டாம் பதிப்பு 15—10—1949
மூன்றாம் பதிப்பு 28—11—1950

பாண்டியன் அச்சகம், தாம்பரம்.'50

பதிப்புரை

இரண்டாம் பதிப்பு.

இரண்டாம் பதிப்பு முதற்பதிப்பை ஒட்டியே பிரசுரித்திருக்கிறோம். முதற்பதிப்பில் 'கல்வியும் மது விலக்கும்' என்கிற தலைப்பில் இருந்த இரண்டாவது கட்டுரை இப்பதிப்பில் நீக்கப் பெற்றிருக்கிறது. பழைய கல்வித் திட்டத்துக்கும் மது வருமானத்துக்கும் இருந்த இணைப்பு பற்றியும், மதுவிலக்கு அனுஷ்டானத்தினால் கல்வி வசதி குறையவேண்டியதில்லை என்ற தன் கொள்கை பற்றியும் காந்தியடிகள் அக்கட்டுரையில் விளக்கியிருந்தார். மதுவிலக்கு ஊர்ஜிதமாகி யிருக்கும் இக்காலத்தில் இப்பிரசினையைப் பற்றி எவ்வித விளக்கமும் தேவையில்லை என்று அக்கட்டுரையை நீக்கி யிருக்கிறோம். பொருள் அகராதியும் அவசியமில்லை என்கிற காரணத்தால் நீக்கியிருக்கிறோம்.

கீழமூங்கிலடி, சிதம்பரம்
15—10—49. } தமிழ்நாட்டு ஆதாரக் கல்விச்சங்கம்.

முதற் பதிப்பு.

காங்கிரஸ் மந்திரிசபை ஆட்சி நடத்துகிற மாகாணங்களில் இன்று ஆதாரக் கல்வி என்ற புது முறைக் கல்வியை விரிவாக அமுலுக்குக்கொண்டு வருவதற்கான ஏற்பாடுகள் நடந்து வருகின்றன. இம் முறைக்குரிய ஆசிரியர் பயிற்சிப்பாடசாலைகளும் ஆங்காங்குப் புதிதாக நடைபெறுகின்றன. வர்தாக் கல்வித் திட்டம் அல்லது சேவாக்கிராமக் கல்வித் திட்டம் என்று வழங்குகிற இக் கல்வித் திட்டத்தை, காந்தியடிகள் 1937 – 38 ஆம் வருஷங்களில் தம் ஹரிஜன் பத்திரிகையில் முதன் முதலாக எடுத்துச் சொன்னார். அவர் எழுதிய கட்டுரைகளைத் தொகுத்து, சேவாக்கிராமம் ஹிந்துஸ்தானி தாலிமி சங்கத்தார் (அகில இந்திய கல்விச் சங்கத்தார்) 1938–ல் ஆங்கிலத்தில் வெளியிட்டார்கள். அத்தொகுப்பின் தமிழ் மொழிபெயர்ப்பே இச்சிறு புத்தகம்.

ஆதாரக் கல்வி என்று இப்போது வழங்குகிற இக் கல்விமுறையின் அடிப்படையான தத்துவம், வெறும் ஏட்டுப் படிப்பு என்று சொல்லத்தக்க இன்றுள்ள வாழ்க்கைத் தொடர்பற்ற கல்வி முறைக்குப் பதிலாக இந்திய ஏழை மக்களின் வாழ்க்கையில் ஜீவாதாரமான தேவைகளுக்கு உதவுவதாயுள்ள ஒரு தொழிலை நிலைக் களனாக வைத்து, அதன் மூலமாயும், குழந்தை வாழும் இயற்கைச் சூழ்நிலை மூலமாயும், சமூகச் சூழ்நிலை மூல மாயும், வாழ்க்கைக்குத் தேவையான அறிவைத் தந்து குழந்தையின் உடல் உள்ளம் உயிர் ஆகிய மூன்றும் ஒருங்கே விளக்கம் பெறும்படி செய்வது என்பதாகும். "நமது கல்வி முறையில் பெரும் புரட்சி வேண்டும். கை மூலமாய் மூளையைப் பயிற்ற வேண்டும். நான் ஒரு கவிஞனாய்ப் பிறந்திருந்தேனானால், இந்த ஐந்து விரல் களால் என்ன சாதிக்க முடியும் என்பது பற்றிக் கவிதை யாகப் பொழிந்து தள்ளிவிடுவேன்" என்கிறார் காந்தி யடிகள்.

இப் புத்தகத்தின் இறுதியில் ஸ்ரீ கிஷோரிலால் மஷ்ருவாலா இக் கல்விமுறை பற்றி எழுதிய ஒரு சிறு கட்டுரையும் சேர்க்கப் பெற்றுள்ளது. 1937–ல் காந்தி யடிகள் முதன் முதலாகத் தம் கருத்துக்களை எடுத்துக் கூறியபின், பத்து ஆண்டுகள் கழிந்துவிட்டன. எனவே, இக்கல்வி முறையும் பல மாறுதல்களைப் பெற்றிருக் கிறது. எனினும், இப் புத்தகத்திற் காணும் விவரங் களில் சொற்ப மாறுதல் ஏற்பட்டிருக்குமேயன்றி, மூலத் தத்துவத்தில் மாறுதல் இல்லை.

இப்புத்தகம் தமிழ்நாட்டு ஆதாரக் கல்விச் சங்கத் தின் முதல் வெளியீடாகும். இதைத் தொடர்ந்து பல புத்தகங்கள் விரைவில் வெளிவரும்.

சி.முமுங்கிலடி, சிதம்பரம்
1—7—1947

தமிழ்நாட்டு ஆதாரக் கல்விச் சங்கம்.

பொருளடக்கம்.

கல்வியில் வேண்டும் புரட்சி

கல்வி

கல்விக்கு இன்று அதிகம் பணச்செலவு ஆகிறது. இந்தப் பணத்தை மது வருமானத்தின் மூலம் அரசாங்கம் பெறுகிறது. மதுவிலக்கை அமுலுக்குக் கொண்டுவந்தால் அரசாங்கத்தின் மது வருமானம் போய்விடும் என்பது தெளிவு. நமது போதாதகாலம், எவ்விதம் கல்வி போதிப்பது என்ற பிரசினையையும் மது விலக்கையும் சேர்த்துக் குழப்பிக் கொண்டிருக்கிறோம்.

புதிதாக வரி விதிப்பதற்கு வழிகளும் முறைகளும் இருக்கின்றன என்பது உண்மை. செல்வமுடையவர்களுக்குப் போதுமான அளவு இன்னும் வரி விதித்தாகவில்லை. தனி மனிதர் அளவற்ற செல்வம் படைத்திருப்பது, எந்த நாட்டிலுமே சமுதாயத்துக்குப் பெருந் துரோகமாகும்; அதிலும், வறுமை மிக்க நம் இந்திய நாட்டில், அதை நம் மக்கட் சமுதாயத்துக்கே இழைக்கும் பெருந் துரோகமாய்க் கருதவேண்டும். ஆதலால், குறித்த ஓர் அளவுக்குமேல் பெருஞ்செல்வம் படைத்தவர்களுக்கு உச்ச வரி எவ்வளவு விதிக்கலாமோ அவ்வளவையும் ஒருபோதும் விதித்துவிட முடியாது. இங்கிலாந்து தேசத்தில், குறித்த ஒரு தொகைக்குமேல் வருமானமுள்ளவர்களுக்கு, வருமானத்தில் 70 சத வீதம் வரையில் வரி விதிக்கிறார்களென்று அறிகிறேன். இந்தியாவில் இதைவிட அதிக

விதப்படி ஏன் வரி விதிக்கக்கூடாது? ஏன் மரண வரி விதிக்கக்கூடாது? கோடீசுவரர்களின் புதல்வர்கள், உரிய வயது வந்ததும், தங்கள் பெற்றோரின் திரண்ட செல்வத்துக்கு வாரிசாகிறார்கள்; இவ்விதம் வாரிசு முறையில் செல்வம் பெறுவதே அவர்களுக்குப் பெரும் நஷ்டம் என்பது உறுதி. இதனால் தேசம் இருவகையில் நஷ்டமடைகிறது. ஏனெனில் அத்திரண்ட செல்வமானது, கிரமமாய்த் தேசத்துக்கே உரியது. அன்றியும் செல்வம் என்ற பெருஞ்சுமை ஏற்றியதன் பயனாக, புதல்வர்களின் முழுச் செயல் திறமையும் வெளிப் பட்டுப் பிரகாசமடைய வழியில்லாது போகிறது; இது தேசத்துக்கு நேரும் இரண்டாவது நஷ்டம்.

தவிர, நம் இந்திய சமுதாயம் கல்வித் துறையில் மிகவும் கீழான நிலையிலுள்ளது; நமது கல்வித் திட்ட மானது பணத்தைக்கொண்டுமட்டும் நிறைவேறுவதா யிருக்கும் பட்சத்தில், இது சம்பந்தமாய் நமது சமுதாயத்துக்கு நாம் செய்யவேண்டிய கடமையை இந்தத் தலைமுறையில் குறித்த ஒரு கால அளவுக்குள் நிறைவேற்றிவிடலாம் என்று எதிர்பார்க்க இயலாது. இதுபற்றித்தான் நம்கல்வி முறையானது தனக்காகும் செலவைத் தானே வகித்துக்கொள்வதா யிருக்க வேண்டும் என்ற கருத்தைத் துணிந்து வெளியிடு கிறேன்: இப்படிச் சொல்வதால், நிர்மாணத் திறன் உடையவன் என்று எனக்கிருந்த பெயர் கெட்டாலும் குற்றமில்லை. கல்வி என்று சொல்லும்போது குழந்தையினிடத்திலும் வயது வந்த மனிதனிடத்தி லும், உடல் உள்ளம் உயிர் ஆகிய மூன்றிலும் உள்ள சிறந்த அம்சங்கள் யாவும் மலர்ந்து விளக்கம் பெறச்

செய்வதையே நான் குறிப்பிடுகிறேன். வெறும் எழுத்தறிவு என்பது கல்வியின் நோக்கமுமன்று, கல்விக்கு இது தொடக்கமுமன்று. ஆணுக்கும் பெண்ணுக்கும் கல்வி பயிற்றக்கூடிய பல முறைகளில் எழுத்தறிவும் ஒன்று; அவ்வளவேதான். எழுத்தறிவே கல்வியாகிவிடாது. ஆதலால், நான் ஒரு குழந்தைக்குக் கல்வி பயிற்றுவதென்றால், முதலாவதாக, பயனுள்ள ஒரு கைத்தொழிலை அதற்குக் கற்பித்து, கல்விப் பயிற்சி தொடங்கிய நேரம்முதல் ஏதேனும் பொருள் உற்பத்தி செய்ய வல்லதாக அக்குழந்தையை ஆக்கவே நான் முயல்வேன். இந்த விதம் முயல்வதால், ஒவ்வொரு பாடசாலையும் தன் செலவைத் தானே வகிக்க வல்லதாக ஆக்க முடியும்; ஆனால், இதன் பொருட்டு, பாடசாலையில் உற்பத்தியாகும் பொருள்களை அரசாங்கத்தார் எடுத்துக்கொள்வது அவசியம்.

இத்தகைய கல்வி முறையில் உள்ளமும் உயிரும் மிகச் சிறந்த வளர்ச்சி பெறுதல் சாத்தியம் என்பது என் முடிவான கருத்து. ஆனால், ஒரு கைத்தொழில் கற்பிக்கும்போது, அறிவைப் பயிற்றாது யந்திரம் போலக்கற்பிப்பதுதான் இன்று வழக்கமாயிருக்கிறது. இதுமட்டும் போதாது. அறிவியலை ஒட்டியே கைத்தொழிலைக் கற்பிக்கவேண்டும்: அதாவது, கற்பிக்கும் போது ஒவ்வொரு படியிலும், இது என்ன, இது ஏன், இது எப்படி என்பதைக் குழந்தை செவ்வையாக உணர்தல் வேண்டும். இதைச் சற்றேறு தயக்கத்தோடு நான் சொல்வதாக எண்ணக்கூடாது; நிறைந்த அனுபவத்தின்மேல் தான் தைரியமாய் இவ்விதம் சொல்லுகிறேன். தொண்டர்களுக்கு நூல் நூற்கக்

கற்பிக்கு மிடங்களிலெல்லாம், இந்த வழியையே முழுமையும் பின்பற்றுகிறார்கள். செருப்புத் தைக்கவும் நூல் நூற்கவுங்கூட இந்த வழியை யொட்டி நான் கற்பித்திருக்கிறேன்; சிறந்த பலன் ஏற்பட்டிருக்கிறது. இப்படிக் கற்பிப்பதால், சரித்திர அறிவோ பூகோளப்பாட அறிவோ ஏற்படாமல் போய்விடாது. எனினும், இப்படிப்பட்ட பொது அறிவுக்குரிய செய்திகளை வாய்மொழியாகக் கற்பிப்பதே நலம் என்று நான் கண்டிருக்கிறேன். வாய்மொழியாய்க் கற்பிப்பதன் மூலம், புத்தகத்தைப் படிப்பதாலும் எழுதுவதாலும் அறிவதைவிடப் பத்துமடங்கு அதிகமான அறிவைப் புகட்ட முடிகிறது. குழந்தையானவன், தவிடு எது அரிசி எது என்று பாகுபடுத்த அறிந்து, தனக்குரிய தனித்த மனப்போக்கைச் சிறிதளவேனும் விருத்தி செய்துகொண்ட பிறகு, நெடுங்கணக்காகிய எழுத்தடையாளத்தை அவனுக்குக் கற்பிக்கலாம். நான் கூறும் இந்த ஆலோசனை மிகவும் புரட்சிகரமானது; ஆனால், இது அளவற்ற வீண் பிரயாசையைத் தவிர்க்கிறது: சிறுவன் பல ஆண்டுகளில் கற்கக்கூடியதை ஒரே ஆண்டில் கற்க இது துணை செய்கிறது. எல்லா விதத்திலும் இது சிக்கனமானது என்பது தெளிவு. சிறுவன் கைத்தொழில்களைப் பயிலும்போதே கணிதத்தையும் கற்றுக்கொள்ளுகிறான் என்பது சொல்லவேண்டியதில்லை.

ஆரம்பக் கல்வியே மிகவும் முக்கியமானதென்று நான் கருதுகிறேன். இக் கல்வியானது, இன்றைய மெட்ரிகுலேஷன் படிப்புக்குச் சமமாயிருக்கவேண்டுமென்பது என் அபிப்பிராயம். இக் கல்வியில்

ஆங்கிலமே இடம் பெறுது. கல்லூரிகளில் படித்தோர் நம்நாட்டில் சில லட்சம்பேர் இருப்பார்கள். இவர்கள் கற்றவையெல்லாம் திடீரென்று ஒரு நாள் மறந்துவிடுகிறார்கள் என்று வைத்துக்கொள்வோம். இப்படி இவர்களுக்கு ஏற்படும் மறதியால் விளைகிற நஷ்டமானது, நாற்பது கோடித் தொகையினரான நம் நாட்டு மக்களைச் சூழ்ந்துள்ள அஞ்ஞானமென்ற பேரிருளால் நம் நாட்டுக்கு விளைந்திருக்கும் நஷ்டத்தோடு ஒப்பிட்டுப் பார்க்கும்போது, ஒன்றுமேயில்லை என்னலாம். கோடிக் கணக்கான நாட்டுப்புற மக்களிடையுள்ள அறியாமை மிகவும் பெரிது; எழுத்துப் படிப்பின்மை எவ்வளவுஎன்று கணிப்பதனுல்மட்டும், அவ்வறியாமை எவ்வளவு என்று சரியானபடி கணித்துவிட முடியாது.

கல்லூரிப் படிப்பைப் புரட்சிகரமான முறையில் அடியோடு மாற்றியமைத்து, நம் நாட்டுக்கும் சமுதாயத்துக்கும் என்ன தேவையோ அதற்கேற்றபடி அப் படிப்பை அமைக்க வேண்டுமென்பது என் விருப்பம். இயந்திரக்கலை என்ஜினியர்கள், பிறவகைக் கலை என்ஜினியர்கள் முதலியோருக்குரிய கலாசாலைப் பட்டங்கள் புது முறையிலும் இருக்கவே செய்யும். இவ்வென்ஜினியர்கள் பெருந் தொழில் நிலையங்களைச் சார்ந்திருப்பார்கள். இத்தொழில் நிலையங்கள் தங்களுக்குத்தேவையான பட்டதாரிகளுக்குப் பயிற்சியளிப்பதற்குப் பிடிக்கும்செலவை ஏற்றுக்கொள்ளும். உதாரணமாக டாடா இயந்திர நிலையத்தார், என்ஜினியர்களுக்குப் பயிற்சியளிப்பதற்கான கல்லூரியொன்றை நடத்துவார்கள். அக் கல்லூரியானது

அரசாங்கத்தார் மேற்பார்வைக் குட்பட்டு நடந்து வரும். ஆலை முதலாளிகள் சங்கங்கள் ஒன்றுகூடி, தங்கள் தொழிலுக்குத் தேவையாகும் பட்டதாரிகளுக்குப் பயிற்சியளிப்பதற்குரிய கல்லூரியொன்றைத் தாங்களே நடத்தி வரும். இவ்விதமே மற்றெல்லாத் தொழில் நிலையங்களும் செய்யும். வர்த்தகத் தொழிலினர் தனியான கல்லூரி நடத்துவார்கள். மிச்சமிருப்பவை, சரித்திரம் பொருளாதாரம் தத்துவ சாஸ்திரம் போன்ற பொதுப்பாட வகைகள், வைத்தியம், பயிர்த் தொழில் என்பன. பொதுப் பாடவகை பற்றிய கல்லூரிகள் பல இன்று தங்கள் செலவைத் தாங்களே வகித்து வருகின்றன. ஆதலால், அரசாங்கத்தார் தாங்கள் பொதுப்பாட வகைபற்றிய கல்லூரி நடத்துவதை நிறுத்தவேண்டும். வைத்தியக் கல்லூரிகள், அங்கீகரிக்கப்பெற்ற மருத்துவச்சாலைகளின் ஆதரவில் நடைபெறும். பணம் படைத்தவர்களுடைய ஆதரவு மருத்துவச்சாலைகளுக்கு மிகுதியாக உண்டு. ஆதலால், இவர்கள் தாங்களாகவே பண உதவி செய்து வைத்தியக் கல்லூரிகளை நடத்துவார்கள் என்று எதிர்பார்க்கலாம். விவசாயக் கல்லூரி என்ற பெயர் விவசாயக் கல்லூரிகளுக்குப் பொருந்தவேண்டுமானுல், அவை தங்கள்செலவைத் தாங்களே வகித்துத்தான் ஆகவேண்டும். விவசாயக் கல்லூரியில் படித்துப் பட்டம்பெற்ருேர் சிலரை நான் அறிவேன். அவர்கள் படிப்பின் தன்மை எனக்கு மிக்க வருத்தம் தருகிறது. அப்படிப்பு வெறும் ஏட்டுச் சுரைக்காயாயிருக்கிறது. வேலையைச்செய்து பெறவேண்டிய அனுபவம் அவர்களிடம் இல்லை. நம் நாட்டின் தேவைக்கேற்ற முறையில் அமைந்து, தங்கள் செலவைத் தாங்களே வகித்து

வருகிற விவசாயப் பண்ணைகளில் இவர்கள் தொழில் பழகியிருந்தார்களானால், படித்துப் பட்டம் பெற்ற பிறகு தங்களை வேலைக்கு வைத்துக்கொண்டோர் செலவில் இப்படிப் புதிதாக அனுபவம் பெற வேண்டிய நிலைமை இவர்களுக்கு ஏற்பட்டிராது.

மேலே நான் கூறிய புதுமுறை, விசித்திரமான வெறுங் கற்பனையன்று, நம் உள்ளத்தில் குடிகொண்டிருக்கிற சோம்பலை உதறித் தள்ளிவிட்டோமானால், எவ்விதம் கல்வி போதிப்பது என்ற பிரசினையைத் தீர்ப்பதற்கு இதுவே மிகவும் நியாயமான வழி. செயல் முறையில் சாத்தியமான வழி என்பது விளங்கும்: இக் கல்விப் பிரசினையே இன்று காங்கிரஸ் மந்திரிகள் தீர்க்கவேண்டிய பிரசினை: எனவே, இது காங்கிரஸ் மகா சபை தீர்க்கவேண்டிய பிரசினையாகிறது. மந்திரிகள் நன்றாய் ஆலோசித்து, கல்வி பற்றிய கொள்கையை, உருவாக்கிப் பின் அதை உறுதியாய்க் கடைப்பிடிக்கட்டும். இன்றுள்ள அதிகார வர்க்கத்தார் மந்திரிகளின் ஆணையை நிறைவேற்றுவார்களென்று பிரிட்டிஷ் அரசாங்கம் அடிக்கடி சொல்லி வந்திருக்கிறது: இதற்கிணங்க, அவ் வர்க்கத்தார் மந்திரிகளின் கொள்கையைச் செயல் முறையில் நிறைவேற்றித் தங்களுக்குக் கொடுக்கும் ஊதியம் வீணல்ல என்பதைச் செய்து காட்டுவார்களாக.

இவ்விதம் கல்வி போதிப்பதற்கு, தக்க உபாத்தியாயர்கள் எங்கே கிடைப்பார்கள் என்பது முக்கியமான கேள்வி. படித்த ஆடவரும் பெண்டிரும் மக்களுக்குக் கல்வி போதிக்கும் சேவையில் கட்டாயமாய்

ஈடுபடும்படி சட்டமியற்றவேண்டுமென்று கே.டி.ஷா. என்ற பேராசிரியர் கூறினார். இந்த யோசனை எனக்குப் பிடித்திருக்கிறது. இவர்கள் என்ன போதிக்கத் தகுதியுடையவர்களா யிருக்கிறார்களோ அதைப் போதிக்கும் வேலையில் இவர்கள் ஈடுபட வேண்டுமென்று சட்டமூலம் நிர்ப்பந்தம் ஏற்பட வேண்டும். குறித்த காலம், அதாவது சுமார் ஐந்து வருஷ காலம், இவர்கள் கல்வி போதனையில் ஈடுபடலாம். இந்நாட்டின் செல்வநிலைக்குப் பொருத்தமான முறையில், வாழ்க்கை நடத்த என்ன வசதி தேவையா யிருக்குமோ அதற்கு மேற்படாத ஊதியம் இவர்கள் பெறலாம். உயர்தரக் கல்வி கற்பிக்கும் உபாத்தியாயர்களும் ஆசிரியர்களும் இன்று மிகவும் அதிகமான சம்பளம் கேட்கிறார்கள்; இந்தநிலைமை நீங்கவேண்டும். தவிர, கிராமப் பாடசாலையில் இன்றுள்ள உபாத்தியாயருக்குப் பதிலாக இன்னும் சிறந்த திறமை வாய்ந்த உபாத்தியாயரை நியமிக்கவேண்டும்.

ஹரிஜன், 31—7—1937.

எழுத்தறிவு

கல்வி சம்பந்தமாய் நான் இங்கே தெரிவித்துள்ள கருத்துக்களைப்பற்றிப் பலர் தங்கள் அபிப்பிராயங்களை எனக்கு எழுதியிருக்கிறார்கள். சிறந்த கல்விமானொருவர், எழுத்தறிவைப் பெரிதும் நான் புறக்கணித்து விட்டேனென்று என்னைக் குற்றஞ் சொல்லுகிறார். இதற்குமட்டும் இப்போது விடைகூற விரும்புகிறேன்.

இவ்விதம் இவர் சொல்வதற்கு, நான் எழுதியுள்ளவற்றில் சிறிதும் ஆதாரமில்லை. நான் உத்தேசித்திருக்கும் பாடசாலைகளில் கல்வி பயிலும் சிறுவர்களுக்குப் போதிக்கும் கைத்தொழில் மூலமாகவே எல்லா வகைக் கல்வியும் புகட்டப்பெறும் என்று நான் கூறி வந்திருக்கிறேன். எல்லா வகைக் கல்வியும் என்பதில், எழுத்துப் படிப்பும் அடங்கிவிடுகிறது. நான் கூறும் ஏற்பாட்டின்படி, சிறுவன் எழுத்தின் வரிவடிவத்தைக் கையால் வரையத் தெரிவதன் முன்னமே, தன் கையால் தொழிற் கருவிகளைப் பிடித்து உபயோகிக்கத் தெரிந்திருப்பான்; வாழ்க்கையில் மற்ற வஸ்துக்களை அவன் எப்படி அறிவானோ, அப்படியே எழுத்துக்களாலும் சொற்களாலும் ஆன சித்திர வடிவத்தைக் கண்ணால் பார்த்துப் படிக்க அறிந்திருப்பான்; தன் செவிப் புலனால் வஸ்துக்களின் பெயரையும் வாக்கியங்களின் பொருளையும் உணர்ந்திருப்பான். இவ்வகைப் பயிற்சி முழுமையும், காண்பவற்றையும் அறிபவற்றையும் ஒட்டி, இயல்பாக விளைவதாயிருக்கும்; ஆதலால், இந்நாட்டில் இப்பயிற்சியே

மிக்க விரைவில் ஏற்படுவதும் எளிய செலவில் அடங்குவதும் ஆகும்.

இவ்விதமாக, நான் கூறும் பாடசாலையில் பயிலும் சிறுவன் எழுத அறிவதைவிட அதி சீக்கிரத்தில் படிக்க அறிவான். எனக்குக் கற்பித்த ஆசிரியர்களின் போதனுமுறை காரணமாக, நான் எழுதும் எழுத்தெல்லாம் வெறும் கிறுக்கலா யிருக்கிறது. ஆனுல், மேற்கூறிய சிறுவனுடைய எழுத்து இத்தகைய கிறுக்கலா யிருக்காது; தன் கண்ணுல் காணும் வஸ்துக்களின் உருவத்தை அவன் எவ்வாறு திருத்தமாக வரைவானே அதுபோலவே, எழுத்துக்களின் வரிவடிவத்தையும் அவன் திருத்தமாக வரைவான். நான் கருதியுள்ள இப் பாடசாலைகள் ஏற்பட்டு விடுமானுல், படிப்பது சம்பந்தப்பட்ட வரையில் மிகவும் முன்னேற்ற மடைந்துள்ள வேறெந்தப் பாடசாலைச் சிறுவர்களையும்விட, இப் பாடசாலைச் சிறுவர்கள் அதிக விரைவாய்ப் படிக்க வல்லவர்களா யிருப்பார்களென்று நான் துணிந்து கூறுவேன். மேலும், பெரும்பாலோர் இப்போது எழுதுகிற எழுத்து, திருந்திய வரி வடிவமுடையதாய் அமையவில்லை; வரிவடிவம் சரியாக அமையவேண்டு மென்பதை நாம் ஒப்புக்கொள்வோமானுல், இச் சிறுவர்கள் கற்றவர்களைவிட அதிக விரைவில் எழுதவும் கற்பார்களென்று நான் கூறுவேன். சேகாம் (சேவா கிராமம்) பாடசாலைச் சிறுவர்கள் பழைய முறைப்படி எழுதுகிருர்களென்று சொல்லலாம்; ஆனுல், எனது முறைப்படி பார்த்தால் இவர்கள் கற்பலகையையும் காகிதத்தையும் பாழாக்குகிருர்கள் என்றுதான் சொல்ல நேரும்.

28-8-1937

செலவை வகித்தல்

சென்னையிலுள்ள டாக்டர் லக்ஷ்மிபதி என்ற மருத்துவ அறிஞர், கிருஸ்தவப் பாதிரிமார் சிலர் பாடசாலை நடத்தும் முறையை விரிவாய்க் குறிப்பிட்டுக் காந்தியடிகளுக்கு ஒரு கடிதம் எழுதியிருந்தார். அப் பாடசாலைகளில், காலை நேரத்தில் பாட வகுப்புக்கள் நடைபெறும். மாலையில் பிள்ளைகள் பயிர்த் தொழிலோ, அன்றி வேறு ஏதேனும் கைத் தொழிலோ, செய்வார்கள்; செய்த வேலையின் தகுதிக்கும் அளவுக்கும் ஏற்ப அவர்களுக்குக் கூலியு முண்டு. இதன் மூலம் அப் பாடசாலைகளுக்கான செலவை அவர்கள் ஓரளவுக்குச் சரிக்கட்ட முடிந்தது. இங்குப் படிப்பை முடித்த பிள்ளைகள் பிழைக்க வழி யறியாமல் திண்டாடியதில்லை. பொதுவாய் இவர்கள் மற்றப் பாடசாலைப் பிள்ளைகளைவிடத் திறமையான உடல் நலமும் மன மகிழ்ச்சியும் ஊக்கமும் வாய்ந் திருந்தார்கள். உழவு வேலை அதிகமாயுள்ள பருவங் களில், பாடத்தை நிறுத்திவிட்டு, உழவு வேலையி லேயே முழு நேரமும் இவர்கள் ஈடுபட்டு வந்தார்கள். பட்டணப் பகுதிகளிலும் இம் முறையைக் கடைப் பிடிக்கலாம். எளிய பிள்ளைகளுக்குப் பாடசாலையி லேயே ஒருவேளைச் சாப்பாடும் தரலாம். இவ்விதம் அரை நேரப் பாட வகுப்புடைய பாடசாலைகள் நடத் தினால், மிச்சமுள்ள அரை நேரத்தை உபாத்தியாயர் கள் வயது வந்தோருக்குக் கல்வி பயிற்றுவதில் செல விடலாம். இப் பயிற்சி முறையின் மூலம், சிறுபிள்ளை களுக்கு அவசியமான உடற் பயிற்சி கிடைக்கும்,

கிரமமான உடலோம்புதலே சிறந்த தேச நிர்மாண மாகும். இம் முறையே இந்தியப் பழக்க வழக்கங் களுக்கும் சீதோஷ்ண நிலைக்கும் பெரிதும் ஏற்றதா யிருக்கிறது.

இதுவே டாக்டர் லக்ஷ்மிபதி எழுதிய கடிதத்தின் சாரமாகும். இது பற்றி, காந்தியடிகள் பின்வருமாறு எழுதினர்.

பள்ளிக்கூடத்தில் வகுப்புக்கள் காலை வேளையில் மட்டும் நடந்தால் போதுமென்று இவர் கூறுகிறார். இக் கருத்தைக் கவனிக்கும்படி கல்வியதிகாரிகளைக் கேட்டுக்கொள்ளுகிறேன். பள்ளிக்கூடங்கள் ஏறக் குறைய தங்கள் செலவு முழுமையும் தாங்களே சரிக் கட்டிக்கொள்ள வேண்டு மென்பது அவருடைய யோசனை. அவை தங்கள் செலவு முழுமையும் அல்லது அதில் ஒரு பகுதியைத் தாங்களே செய்து கொண்டு, தங்கள் பிள்ளைகளையும் உருவாக்க வேண்டு மென்றால், தங்கள் செலவைத் தாங்களே வகித்துக் கொள்ளுமென்பது நிச்சயம். இருந்தும், எனது யோசனையைக் கேட்டுக் கல்வித் துறையினர் சிலர் திடுக்கிட்டுப்போனார்கள்; பாவம், அவர்கள் வேறெந்த முறையும் அறிந்திராமையே இதற்குக் காரணம். ஒரு கல்வி முறையானது, தனக்காகும் செலவைத் தானே வகித்துக்கொள்ளக்கூடும் என்ற மாத்திரத்தில், கல்வி யானது அதன் பயன் அனைத்தையும் இழந்துவிடு கிறது என்று இவர்கள் எண்ணுகிறார்கள். இந்த யோசனை ஏதோ பணத்தாசையால் எழுந்தது என்றே இவர்கள் கருதுகிறார்கள். கல்வி சம்பந்தமாக யூதர்

செய்த முயற்சிகளைப்பற்றிய சிறு பிரசுரமொன்றைச் சமீபத்தில் நான் படித்துக்கொண்டிருந்தேன். யூதப் பள்ளிக்கூடங்களில் நடைபெற்ற தொழிற் பயிற்சியைக் குறித்து, அப்பிரசுரத்தின் ஆசிரியர் பின் வருமாறு எழுதுகிறார்.

"இங்ஙனமாக, மெய்வருந்திச் செய்யும் உழைப்புத் தன்னளவில் மிக்க ஏற்றமுடையதென்று அவர்கள் கருதுகிறார்கள். அறிவு தொழிற்படுவதன் பயனாக அவ்வுழைப்பு மிக்க எளிதாகிவிடுகிறது; இனப்பற்று என்ற பெருநோக்கத்துக்கு உதவுவதால், அவ்வுழைப்பு மிக்க மேன்மை பொருந்தியதுமாகிறது."

தக்க ஆசிரியர்கள் மட்டும் அமைவார்களானால், நம் பிள்ளைகள், உழைப்பே ஏற்றமுடையது என்பதைப் பயில்வார்கள்; அறிவு வளர்ச்சியும் உழைப்பும் ஒன்றே என்றும், இரண்டும் வேறல்ல என்றும், அறிவு வளர்ச்சிக்கு உழைப்பே சாதனம் என்றும் எண்ணத் தொடங்குவார்கள்; தாங்கள் பெறும் கல்விப் பயிற்சிக்குத் தங்கள் உழைப்பின் மூலம் ஈடுசெய்வதே ஒரு தேசத்தொண்டு என்று உணரவும் தலைப்படுவார்கள். கைத்தொழில்களைக் கற்பிப்பது, வஸ்துக்களை உற்பத்தி செய்யுந் திறமைக்காக மட்டுமன்று, பிள்ளைகளின் அறிவு வளர்ச்சிக்காகவுந்தான் என்பதே நான் சொல்வதன் முக்கிய கருத்தாகும். ஏழு வயது முதல் பதினான்கு வயது வரையுள்ள பிள்ளைகளுக்குக் கல்வி போதிக்கும் பொறுப்பை அரசாங்கத்தார் ஏற்றுக் கொண்டு, பொருள் உற்பத்திக்கான உழைப்பின்

மூலம் அவர்கள் உடலையும் உள்ளத்தையும் பண்படுத்தத் தொடங்குவார்களானால், அரசாங்கப் பாடசாலைகள் தங்கள் செலவைத் தாங்களே வகிக்கவல்லனவாகும் என்பது நிச்சயம். அங்ஙனம் வகிக்கமுடியாவிட்டால், அரசாங்கப் பாடசாலை என்பதே பெரும் மோசடி என்றும், உபாத்தியாயர்கள் என்ருலே பெரும் முட்டாள்கள் என்றுந்தான் சொல்ல நேரும்.

பள்ளிக்கூடத்தில் படிக்கும் சிறுவன் சிறுமி ஒவ்வொருவரும், வெறும் இயந்திரம்போல் வேலை செய்தால் பயனில்லை; அவ்வத்தொழில் நிபுணர்கள் காட்டும்வழியில் நடைபெறுகிற கூட்டு வேலையில் மிக்க சிரத்தை கொண்டு, அறிவோடு தொழிற்படும் தனி நபராக அவர் வேலை செய்யவேண்டும். அங்ஙனம் செய்வாரேயானுல், அப் பாடத் திட்டத்தில் முதல் வருஷம் ஆனபிறகு, இக் கூட்டு உழைப்பானது, நபர் ஒன்றுக்கு மணிக்கு ஓரணு ஊதிய மதிப்புடையதாகும். தினமொன்றுக்கு நாலுமணி நேர வேலைக்கு நாலணு வீதம், மாதம் இருபத்தாறுநாளில் ஒரு பையன் ரூ. 6-8-0 சம்பாதிக்க முடியும்.

கோடிக்கணக்கான பிள்ளைகளை இப்படி லாபகரமான தொழிலில் ஈடுபடுத்த முடியுமா என்பதுதான் இங்கு எழும் ஒரே கேள்வி. ஒரு வருஷப் பயிற்சியளித்த பிறகு, மணியொன்றுக்கு ஓரணு வரும்படி வரக்கூடிய தொழிலில் நம் பிள்ளைகளின் உழைப்புத் திறனை நாம் நிச்சயமாய் ஈடுபடுத்த முடியும்; முடியாதென்ருல், நம்மிடத்தில் அறிவு சூனியம் என்பது தெளிவு. நாட்டுப்புற மக்கள் நம் நாட்டில் எந்த

இடத்திலும் மணிக்கு ஒரணு வீதம் கூடச் சம்பாதிப்ப தில்லை என்பதை நான் அறிவேன். இது எதனால்? உடையவர்களுக்கும் இல்லாதவர்களுக்கு மிடையில் இன்று இருக்கும் பெருத்த ஏற்றத் தாழ்வை நாம் அப்படியே அங்கீகரித்துவிட்டோம். அதாவது, புத்தி யைச் செலுத்தி உழைக்கும் வேலை உயர்வானது. உடலை வருத்தி உழைக்கும் வேலை இழிவானது என்ற எண்ணம் மலிந்துவிட்டது. பிரிட்டிஷ் அரசாங்கம் நாட்டுப்புறத்தைச் சுரண்டிய இந்த அருந் தொண்டில் நகர மக்களும், ஒருவேளை தங்கள் செயலின் பலனை உணராமலே, சேர்ந்துகொண்டார்கள். இந்த நிலை மையே மேற்கூறிய சம்பாத்தியக் குறைவுக்குக் காரணம்.

ஹரிஜன், 11-9-37

உடல் உழைப்பு

மத்திய மாகாணத்துக் கல்வி மந்திரியாயிருந்த ரவிசங்கர் சுக்லா அவர்கள் ஒரு சமயம் காந்தியடிகளை வந்து பார்த்தார். அம்மாகாணத்துக் கல்வியிலாகாவின் தலைமையதிகாரிகளும் அவருடன் வந்திருந்தார்கள். காந்தியடிகளின் புதுமுறைக் கல்வித்திட்டத்தைப் பரீட்சை செய்து பார்க்க அவர்கள் உத்தேசித்திருந்தார்கள். அவ்விதம் பார்க்குமுன், இன்றைய கல்வி முறையில் புரட்சிகரமான மாறுதல் வேண்டுமென்று அவர் சொல்வதன் உட்கருத்து யாது என்பதை அவர்கள் அவரிடமே நேரில் கேட்டறிய எண்ணினார்கள். அதை அவரும் விளக்கியுரைத்தார்.

"அரசாங்கத்தின் ஆதரவில் பிள்ளைகள் கல்வி பெறுகிறார்கள். இவ்விதம் பெற்றுக்கொள்வதில் ஒரு பகுதியையேனும் அவர்கள் அரசாங்கத்துக்குத் திருப்பித் தரவேண்டும். ஆகவே, இப்படித் திருப்பித் தரும்படி செய்துவிட்டால், அதுவே கல்வி முறையானது தனக்கேற்படும் செலவைத் தானே வகித்துக் கொள்ளச் செய்வதாகும் என்று நான் கருதுகிறேன். நீங்கள் இப்போது சொல்கிற ஆரம்பக் கல்வி இதற்கடுத்ததான கலாசாலைக் கல்வி என்ற இரண்டு பிரிவுகளையும் ஒன்றாக்கிவிடலாம். உயர்தரப் பாடசாலை என்று சொல்லுகிற நமது கலாசாலைகளில் இன்று நமது பிள்ளைகள் என்ன கல்வி பயில்கிறார்கள்? அரைகுறையான ஏதோ சிறிது ஆங்கில அறிவும், கணிதம் சரித்திரம், பூகோளம் ஆகிய பாடங்களில் மேற்போக்

கான ஏதோ சொற்பக் கல்வியுமே பெறுகிருர்கள். இந்தக் கணிதம் முதலான பாடங்களில் சிறுபகுதி முன்னமேயே ஆரம்பவகுப்புக்களில் அவர்கள் தங்கள் தாய் மொழியில் பயின்றிருக்கிருர்கள். எனவே, கற்பிக்கிற பாடங்களை அப்படியே வைத்துக்கொண்டு, இப்பாடத் திட்டத்திலிருந்து ஆங்கிலத்தை மட்டும் அறவே அகற்றிவிட்டால், பிள்ளைகள் இன்று பதினெரு வருஷத்தில் கற்கிற பாடத்திட்டம் அவ்வளவையும் ஏழே வருஷத்தில் கற்கும்படி செய்ய முடியுமென்பது நிச்சயம். மேலும், உழைத்துத் தொழில் செய்யவும் பிள்ளைகளுக்குக் கற்பித்து, அரசாங்கம் கல்விக்காகச் செய்யும் செலவை ஈடுபண்ணும் வகையில் சுமாரான அளவு வருவாய் தரவும் செய்யலாம். இக்கல்விமுறையில் நடுநாயகமாய் விளங்குவது உடல் உழைப்பாகும். நாட்டுப்புற மக்கள் சம்பந்தமாக இந்திய அரசாங்கத்தார் சார்பில் யாதாஸ்து தயாரித்த நிபுணர்களான ஆப்பட், வுட் என்போர் அக்கல்விமுறையில் உடலுழைப்பு முக்கியமான அம்சம் என்பதை அங்கீகரித்திருக்கிருர்கள் என்று அறிகிறேன். சிறந்த கல்வி நிபுணர்கள் என் கருத்தை ஆமோதிப்பது மிக்க மகிழ்ச்சி தருகிறது. இருப்பினும், எந்த நிலையில் உடலுழைப்பு முக்கியமானதென்று நான் கருதுகிறேனே அவ்விதமாக அவர்கள் இதை வற்புறுத்திப் பேசவில்லையென்றே நினைக்கிறேன். உள்ளத்தின் விரிவே தொழிற்பயிற்சி மூலமாய்த்தான் ஏற்படவேண்டுமென்று நான் கூறுகிறேன். தொழிற்பயிற்சியென்பது, பிள்ளைகள் பாடசாலையின் பொருட்காட்சிச் சாலையில் வைக்கத்தக்க வஸ்துக்களைத் தயார் செய்வதோ அல்லது எவ்விதப் பயனும் அற்ற விளை

யாட்டுப் பொம்மைகளைத் தயார்செய்வதோ அன்று. தொழிற்பயிற்சியின் பயனாக, நன்றாய் விற்பனையாகத் தக்க உபயோகமுள்ள வஸ்துக்கள் உற்பத்தியாதல் வேண்டும். ஆலைத் தொழிற்சாலைகள் ஏற்பட்ட புதிதில், சவுக்கடிக்குப் பயந்து, அங்கு வேலைக்கமர்ந்த பிள்ளைகள் இப்படிப்பட்ட வஸ்துக்களைத் தயார் செய்தது வாஸ்தவம்; ஆனால், நம் தொழிற் பயிற்சியில் பிள்ளைகள் இப்படிச் செய்யமாட்டார்கள். வஸ்துக்களைச் செய்வதே அவர்களுக்கு இன்பகரமாயிருக்கும்; அவர்களுடைய புத்தியைத் தூண்டிவிட்டுக் கூர்மைப் படுத்துவதாயு மிருக்கும்."

இவ்விதம் காந்தியடிகள் சொல்லவே, அங்கிருந்த அதிகாரிகளில் ஒருவர், "வஸ்துக்களைத் தயாரிப்பதென்ற தொழிற்பயிற்சி மூலமாகவே கல்வி போதிக்க வேண்டும் என்பதை நான் ஒப்புக்கொள்ளுகிறேன். ஆனால், ஊரில் திறமை வாய்ந்த தொழிலாளிகள் எத்தனையோ பேர் சாமான் தயாரிப்பதில் ஈடுபட்டிருப்பார்கள். எவ்விதத் திறமையும் அனுபவமும் இல்லாத சிறுபிள்ளை அத்தொழிலாளியோடு போட்டி போடுவது சாத்தியமா?" என்று வினவினர்.

"சிறுபிள்ளை, திறமைவாய்ந்த தொழிலாளியோடு போட்டிபோடுகிறநிலைமையே ஏற்படாது. சிறுபிள்ளைகள் தயாரிக்கும் சாமான்களை அரசாங்கம் தானே எடுத்துக்கொண்டு, விற்பனைக்கு ஏற்பாடு செய்யும். தவிர, எப்போது, என்ன தேவையோ அதை அனுசரித்துச் சாமான் தயாரிக்கும்படி பிள்ளைகளை நாம் பழக்கவும் வேண்டும். உதாரணமாக, பாய் நெய்வ

தைப் பாருங்கள். வீட்டில் இவ்வேலை செய்வது பிள்ளைகளுக்குத் தொந்தரவா யிருக்கக்கூடும். ஆனால் இதையே பள்ளிக்கூடத்தில் செய்யும்போது, புத்தி கூர்மையோடு ஆனந்தமாய்ச் செய்கிறார்கள். ஆகவே, பிள்ளைகளுக்கு நீங்கள் அளிக்கிற கல்வி, தனக்காகும் செலவைத் தானே வசூலித்துக்கொள்வதாகவும், பிள்ளைகளுக்கு மகிழ்ச்சியும் அறிவும் ஊட்டுவதாகவும் என்றைக்கு ஆகிறதோ அன்றைக்கே நீங்கள் குறிப்பிட்ட சிக்கல் தீர்ந்துபோகிறது."

"ஆனால், இந்தத் தலைமுறையில் இருக்கிற ஆசிரியர்களை, இந்தப் புதுமுறைக் கல்வியை அனுஷ்டானத்திற்குக் கொண்டுவருவதற்கு முன்னமேயே, நீக்கிவிட வேண்டுமல்லவா?"

"நீக்க வேண்டாம், நீக்கிவிட்டுத்தான் இந்தப் புதுமுறைக் கல்வியைத் தொடங்க வேண்டுமென்பதில்லை. இதை ஒரு வகையாகத் தொடங்கிப் பிள்ளைகளைப் பயிற்றி வரும்போதே, ஆசிரியர்களையும் பழக்கிக் கொள்ளவேண்டும்" என்றார் காந்தியடிகள்.

வேறொருசமயம் காந்தியடிகள் ஓர் அன்பருக்குப் பின்வருமாறு கடிதமெழுதினார்: அவ்வன்பர் பல வருஷ காலமாக ஏட்டுப் படிப்போடு தொழிற்பயிற்சியையும் தம்முடைய பாடசாலையில் பிள்ளைகளுக்குக் கற்பித்து வந்து அனுபவம் பெற்றவர்.

"நூல் நூற்பது பஞ்சடிப்பது முதலான தொழில்களின் மூலமாகவே அறிவுக்குப் பயிற்சியளிக்கவேண்டும் என்ற கொள்கையை நீங்கள் போதிய அளவு

உணர்ந்து கொள்ளவில்லையென்று கருதுகிறேன். அறிவைக் கொண்டு மட்டும் படிக்கிற பாடமுறைக்குத் துணையாகத்தான் உங்கள் பள்ளிக்கூடத்தில் தொழிற் பயிற்சியை வைத்திருக்கிறீர்கள். இந்த இரண்டு முறைகளுக்கும் உள்ள வேறுபாட்டை நீங்கள் செவ்வையாக உணர்தல் வேண்டும். ஒரு தச்சர் எனக்குத் தச்சுத்தொழிலைக் கற்பிக்கிறாரென்று வைத்துக்கொள்வோம். அவர் சொல்லிக் கொடுத்த அளவுதான் நான் ஒரு யந்திரம் போலக் கற்றுக் கொள்ளமுடியும். இப்படிக் கற்றதன் பயனாய்ப் பல வகையான கருவிகளையும் எப்படி உபயோகிப்பதென்று தெரிந்து கொள்வேன். ஆனால், இந்த அறிவு என் புத்தியைக் கூர்மையாக்காது. தச்சுத் தொழிலில் சாஸ்திர ரீதியாகப் பயின்றவரொருவர் தச்சுத்தொழிலை எனக்குக் கற்பிப்பாரானால், அவர் எனது புத்தியையும் தூண்டிவிடுவாரென்பது நிச்சயம். இத்தூண்டுதலின் பயனாய், நான் தச்சுத் தொழிலில் நிபுணனாவது மட்டுமன்றி, சிறந்த என்ஜினியராகவும் ஆவேன். ஏனெனில், தச்சுத்தொழிலைச் சாஸ்திர ரீதியாய்ப் பயின்ற அவர், எனக்குக் கணித சாஸ்திரம் கற்பித்திருப்பார்; பலவகையான மரங்களின் தன்மைகளையும், அவற்றினிடையுள்ள வேறுபாடுகளையும், அவை உற்பத்தியாகும் இடத்தையும் பற்றிச் சொல்லியிருப்பார். இதனால் எனக்குக் கொஞ்சம் பூகோள அறிவும் பயிர்த்தொழில் அறிவும் ஏற்படும். நான் உபயோகிக்கும் கருவிகளின் உருவத்தைச் சித்திரமாக வரையவும் அவர் கற்பித்திருப்பார். இதனால் உமாரான க்ஷேத்ர கணித அறிவும் சாதாரணக் கலைக்கு அறிவும் எனக்கு உண்டாகும்.

படித்தல் எழுதுதல் என்ற இரண்டின் மூலமாகவுந்தான் நீங்கள் புத்திக்குப் பயிற்சி அளிக்கிறீர்கள் என்று கருதுகிறேன். இந்தப் பயிற்சியை உடல் உழைப்போடு தொடர்புபடுத்திக் கல்வி போதிக்கிறீர்கள் என்று எனக்குத் தோற்றவில்லை. ஒருபுறம் புத்திக்குப் பயிற்சி யளித்து வரும்போது, மறுபுறம் தொழிற் பயிற்சியும் அளித்து வரவேண்டுமென்று மட்டுமே நான் இதுவரையில் சொல்லிவந்தேன். இது போதாது. தொழிற்பயிற்சியைக் கருவியாகக் கொண்டுதான் புத்தியைக் கூர்மைப்படுத்த முடியும் என்பதை இப்போது வற்புறுத்திக் கூறுகிறேன். நம் பிள்ளைகளின் அறிவுத்திறன் முழுமையும் இப்போது வீண்போகிறது. அதைப் பார்த்துத்தான் நான் இந்த முடிவுக்கு வந்தேன். பிள்ளைகளின் உடலிலும் உள்ளத்திலும் உயிரிலும் உள்ள சிறந்த சக்தியை வெளிப்படுத்திப் பொலிவுபெறச் செய்வது எதுவோ அதுவே உண்மையான கல்வியாகும். இந்தக் கல்வியானது, வேலையில்லாத் திண்டாட்டம் என்பதே இல்லை என்ற உறுதியை அவர்களுக்கு அளிப்பதாய் இருக்கவேண்டும்.”

ஹரிஜன், 11—9—1937.

நால்வகைப் பயிற்சி

கைத்திறனைப் பழக்கிக்கொள்வது எவ்வளவு அவசியமோ, அவ்வளவு குரலில் ஏற்றத் தாழ்வுகளை அளவுபடுத்திப் பழக்குவதும் அவசியமானது. சிறுவர் சிறுமியரிடமுள்ள சிறந்த பண்புகளை விளக்கம் பெறச் செய்து கல்வி போதனையில் அவர்களுக்கு உண்மையான ஆர்வத்தை எழுப்பவேண்டுமானால், கிரமமான உடற்பயிற்சி, கைத்தொழில், சித்திரப் பயிற்சி, இசைப் பயிற்சி என்ற நான்கும் ஒத்து இயங்குதல் வேண்டும்.

இதன் பொருள், கல்வித்திட்டத்தில் ஒரு புரட்சிகரமான மாறுதல் ஏற்பட வேண்டும் என்பது தெளிவு. நாட்டின் வருங்காலப் பிரஜைகளாகப் போகிற சிறுவர்களுக்கு வாழ்க்கைக் கேற்ற உறுதியான அடிப்படை கோலுவதானல், இந்த நான்கு வகைப் பயிற்சிகளும் இன்றியமையாதன. இப்போதுள்ள சாமானிய ஆரம்பப் பாடசாலை ஏதேனுமொன்றைப் போய்ப் பார்த்தால் போதும்: எவ்வளவு அழுக்கு, ஒழுங்கின்மை, திருத்தமற்ற பேச்சு அங்கு வழங்குகிற தென்பதை எளிதில் காணலாம். நம் மாகாணங்களின் கல்வி மந்திரிகள் இன்றுள்ள கல்வி முறையை மாற்றி, நாட்டின் தேவைக்கேற்ற விதம் கல்வி முறை இருக்கும்படி அமைக்கும்போது, நான் சுட்டியுள்ள இந்த முக்கியமான அம்சங்களைத் தக்கவாறு கவனிப்பார்களென்று நம்புகிறேன். ஆரம்பக் கல்வி பற்றி நான் வகுத்துள்ள திட்டத்தில் இவை

யார்வும் அடங்கியிருக்கின்றன. கடினமான அன்னிய மொழியைக் கற்றுத் தேர்வது என்கிற பெருஞ்சுமையைக் குறைத்துவிட்டால், அந்தக் கணமே நான் கூறியவற்றை எளிதாகச் செய்யவியலும்.

ஆனால், இப்புதியமுறையைச் செயலில் கொண்டு வருவதற்கேற்ற உபாத்தியாயர்கள் இன்று இல்லை என்பது உண்மை. புதிதாகத் தொடங்கும் எந்தக் காரியத்திலும் இத்தகைய கஷ்டம் இருக்கிறது. இப்போதுள்ள உபாத்தியாயர்கள் இப் புது முறையைப் பயின்று கொள்ளச் சம்மதிப்பார்களானால், அவர்களுக்கு இதற்கேற்ற சந்தர்ப்பம் அளிக்கவேண்டும். மேலும் அவசியமான பாடங்களையெல்லாம் அவர்கள் பயின்றுகொள்வார்களானால், திட்டமான சம்பள உயர்வு உடனே தங்களுக்குக் கிடைக்குமென்ற உறுதியும் அவர்களுக்கு அளிக்கவேண்டும். இவ்வாரம்பக் கல்வியில் என்னென்ன புதிய பாடங்கள் அங்கங்களாகின்றனவோ அவற்றுக்கெல்லாம் தனித்தனியான ஆசிரியர்களை நியமிப்பது இயலாத காரியம்; அவ்வாறு நியமிப்பது பெருஞ் செலவுக் கிடமாகும்; எனவே, அது அவசியமுமன்று. ஆரம்ப ஆசிரியர் சிலருக்குத் திறமையோ வசதியோ குறைவாயிருக்கலாம்; அது காரணமாய், குறுகிய கால அளவில் புதிய பாடங்களை அவர்கள் பயின்றுகொள்ள முடியாது போகலாம். ஆயினும், மெட்ரிகுலேஷன் வகுப்புவரை படித்த பையன், உடற்பயிற்சி, ஏதேனுமொரு கைத்தொழில், சித்திரம், இசை என்பவை பற்றிய அடிப்படையான தத்துவங்களைப் பயின்றுகொள்ள மூன்று மாத காலத்துக்குமேல் பிடிக்காது. நடைமுறைக்கு வேண்டிய

அளவு இவற்றை அவன் பயின்றுகொண்டால், தான் பாடங் கற்பித்து வரும்போதே தன் அறிவையும் பெருக்கிக் கொள்வது அவனுக்குச் சாத்தியமாயிருக்கும். நாட்டில் புதிய விழிப்புண்டாக்குவது மிகவும் கடினமான வேலை; ஆசிரியர்கள் இவ் வேலைக்குத் தங்களைக் கிரமமாகத் தகுதியுடையவர்களாக்கிக் கொள்ள வேண்டுமானால், அவர்களிடம் மிகுந்த ஆர்வமும் ஊக்கமும் பொருந்தவேண்டுமென்பது சொல்லாமலே அமையும்.

11—9—1937

சு

தொழில்மூலம் கல்வி

மிக்க விரைவில் பூரண மதுவிலக்கு ஏற்பட வேண்டும் என்ற கொள்கையை ஒப்புக்கொண்டமையால் தான் கல்வி போதனைக்கு வேண்டிய பணவசதி இல்லை என்றும், இது பற்றியே புதுக் கல்வி முறை தனக்காகும் செலவைத் தானே வகித்துக்கொள்ள வேண்டுமென்ற கொள்கை எழுந்ததென்றும் பலர் சொல்ல நேர்ந்தது. இதைக் குறித்துக் காந்தியடிகள் ஒரு முறை பின்வருமாறு எச்சரிக்கை செய்தார்.

"மதுவிலக்கு ஏற்படுவதும் அவசியம், கல்வி முறை தன் செலவைத் தானே வகித்துக்கொள்வதும் அவசியம். இவை ஒன்றையொன்று சார்ந்தவையல்ல. வருவாய் வந்தாலும் சரி வராவிட்டாலும் சரி, கல்வியளிக்க முடிந்தாலும் சரி முடியாவிட்டாலும்

சரி, பூரண மதுவிலக்கு அமுலுக்கு வரவேண்டும் என்ற உறுதியோடு தான் நீங்கள் செயலில் இறங்க வேண்டும். கல்வியும் இதுபோலத்தான். நம் நாட்டுக் கிராமங்களின் நிலையைக் கவனிக்கும்போது, கல்வி எல்லோருக்கும் கட்டாயமாய்க் கிடைக்கவேண்டு மானால், கல்விமுறை தனக்காகும் செலவைத் தானே வகித்துக்கொள்ள வேண்டும் என்ற உறுதியோடுதான் நீங்கள் செயலில் இறங்க வேண்டும்.

கேட்ட நண்பர்களுள் ஒருவர், "நீங்கள் கூறிய முதல் உறுதி என்னிடம் பூரணமாய் இருக்கிறது. மது விலக்கே ஒரு பெரிய லக்ஷ்யம்; அதுவே சிறந்த கல்விப் பயிற்சியென்றும் நான் கருதுகிறேன். ஆகவே, மதுவிலக்கு வெற்றி பெறும் பொருட்டுக் கல்வி யையே தியாகம் பண்ணவும் நான் சித்தமா யிருக் கிறேன்" என்று சொன்னார். "ஆனால், நீங்கள் இரண் டாவதாகக் கூறிய உறுதி எனக்கு உண்டாகவில்லை. செலவைக் கல்விமுறை தானே வகித்துக்கொள்ளும் படிச் செய்ய முடியும் என்று நான் நம்பவில்லை."

"இந்த விஷயத்திலும் கூட, இப்படிச் செய்ய முடியும் என்ற உறுதியோடுதான் நீங்கள் செயல் தொடங்கவேண்டும். இந்த உறுதியைச் செயலில் நிறைவேற்ற முற்படும்போது இதற்கேற்ற வழிகளும் முறைகளும் தாமாகவே உங்களுக்குப் புலனாகும். இந்த உறுதி எவ்வளவு அவசியமானதென்று இவ்வ ளவு காலங் கழித்துத்தான் எனக்குத் தெரியவந்தது. இதை நான் முன்னமே அறியவில்லையே என்று பெரிதும் இரங்குகிறேன். முன்னமே அறிந்திருந்தே

ஞானல், கல்விமுறை செலவுக்குக் கட்டுமா கட்டாதா என்பதை நானே சோதித்துப் பார்த்திருப்பேன். இப் போதுங்கூட, கல்விச் செலவுக்குக் கட்டும் என்பதை நிரூபிக்துக் காட்ட, கடவுளின் துணைகொண்டு என்னு லானதைச் செய்வேன். எனினும், இத்தனை வருஷங் களாக வேறு வேலைகளில் என் நேரத்தைப் போக்கி விட்டேன் ; அவ்வேலைகளும் முக்கியமானவை என்றே தோற்றும். ஆயினும், சேவாகிராமத்தில் தங்கியதனுல் தான் இவ்வுண்மையை நான் உணரமுடிந்தது. இது வரையில் நாம் எல்லா வகையான சமாசாரங்களை யும் சேர்த்துக் குழந்தையின் மனத்தில் திணிப்ப தையே நோக்கமாய்க் கொண்டிருந்தோம் ; குழந்தை யின் மனத்தை உற்சாகப்படுத்தி விரிவடையச் செய் வதை நாம் நோக்கமாய்க் கொண்டதேயில்லை. இது வரையில் இப்படிச் செய்தது போதும். இனிமேல் தொழிற் பயிற்சி மூலமாகக் குழந்தைக்குச் சரியான கல்வியளிக்க முயல்வோமாக. தொழிற் பயிற்சி அல்லது உடலுழைப்பு என்பது. வெறும் ஏட்டுப் படிப்புக்குத் துணைப் பயிற்சியன்று என்பதை யுணர்ந்து, புத்தியைக் கூர்மையாக்குவதற் குரிய சிறந்த முறை இதுவே என்று கொள்ளவேண்டும்."

"இது எனக்கு விளங்குகிறது. ஆனுல் இந்தக் கல்வி முறையானது பாடசாலைக்காகும் செலவைத் தானே வகித்துக்கொள்ள வேண்டுமென்று சொல்லு கிறீர்களே, இது ஏன் ?"

"இக்கல்வி முறை பயனுடையதா என்பதை இந்த அம்சத்தைக் கொண்டுதான் நிர்ணயிக்க

வேண்டும். ஏழு வருஷப் படிப்பை முடித்துக் கொண்டு பதினன்கு வயதில் சிறுவன் இப்பாடசாலையிலிருந்து வீட்டுக்குப் போகிருன். அந்த நிலையில் அவன் தன் வாழ்க்கைக்குத் தேவையான வருவாய் தேடிக்கொள்ளவல்ல முழு நபராக இருக்கிருன். இன்றைய நிலைமையில் கூட, ஏழை மக்களின் குழந்தைகள் தங்கள் பெற்ருேர் செய்யும் வேலையில் அவர்களுக்கு உதவி செய்வது இயற்கையாகி விட்டது. 'என் தாய் தந்தையருக்கு நான் ஒத்தாசை செய்யா விட்டால்; அவர்கள் உண்ணும் சோற்றுக்கு வழி ஏது? எனக்கு எப்படி அவர்கள் சோறு போட முடியும்?' என்ற எண்ணமே ஒவ்வொரு பிள்ளையின் உள்ளத்திலும் எழுந்திருக்கிறது. இவ்வெண்ணம் உதித்ததே ஒரு சிறந்த கல்விப் பயிற்சியென்று சொல்வேன். இவ்விதமே ஏழு வயதுடைய சிறுவனுக்குப் பயிற்சிதரும் கடமையை அரசாங்கம் ஏற்றுக்கொண்டு, ஏழு வருஷம் அவனுக்குக் கல்வியளித்துத் திருப்பி வீட்டில் கொண்டு சேர்க்கும்போது, வாழ்க்கைக்குத் தேவையான வருவாயைத் தானே தேடிக்கொள்ளவல்ல முழு நபராக அவனை ஆக்கித் தருகிறது. இந்த முறையில் கல்வி பயிற்றும்போது, வேலையில்லாத் திண்டாட்டம் தோன்றவே முடியாதபடி செய்துவிடுகிருேம். பிள்ளைகள் ஏதேனும் ஒரு தொழிலைக் கவனிக்கவல்லவர்களாகப் பயிற்றவேண்டும். இத்தொழிற் பயிற்சி தரும்போது, சிறுவனுடைய உடலுக்கும் உள்ளத்துக்குமே பயிற்சி தருகிருேம்; அவனுடைய கையெழுத்து, கலையுணர்ச்சி முதலானவற்றுக்கும் பயிற்சி தருகிருேம். தான் கற்ற தொழிலில் அவன் பூரணத் திறமை பெற்றிருப்பான்" என்று காந்தியடிகள் விளக்கிக் கூறினர்.

"இருக்கட்டும். ஒரு பையன் சாஸ்திரீயமான முறையில் கதர் உற்பத்தி செய்யும் தொழிலில் ஈடு பட்டிருக்கிறுன் என்று வைத்துக்கொள்வோம். இதில் பூரணத் திறமை பெற ஏழு வருஷம் பிடிக்குமென்று கருதுகிறீர்கள்?" என்று அந்த அன்பர் கேட்டார்.

"ஆம். அப்பையன், கதர்த்தொழிலைக் கேவலம் ஒரு யந்திரம் போலல்லாமல், அறிவைச் செலுத்திக் கற்பதா யிருந்தால், நிச்சயம் ஏழு வருஷம் பிடிக்கும். நம் பள்ளிக்கூடங்களில் சரித்திர பாடம் கற்க எத்தனை வருஷமாகிறது? மொழியறிவு பெற எத்தனை வருஷ மாகிறது? இவ்வகைப் பாடங்கள் முக்கியமானவை யென்று நாம் கருதுகிறேமே யன்றி, அவை அப்படி யொன்றும் முக்கியமானவை அல்லவே! தொழிற் பயிற்சி இவற்றைவிட எந்த விதத்தில் முக்கியமில் லாதது?"

"ஆனுல், நூற்றலையும் நெய்தலையுமே எண்ணி நீங்கள் இவ்விதம் கூறுகிறீர்கள். புது முறையான இந்த ஆதாரப் பாடசாலைகளை யெல்லாம் நெசவுக் கலாசாலைகளாக்க நீங்கள் எண்ணி யிருக்கிறீர்க ளென்று தெரிகிறது. எல்லாக் குழந்தைகளுக்குமா நெசவுத் தொழிலில் மனம் செல்லும்? சில குழந்தை களுக்கு வேறு தொழில் பிடித்திருக்கவுங் கூடு மல்லவா?" என்ருர் அந்த அன்பர்.

"தடையில்லாமல். அப்படி யிருக்கும் பட்சத்தில், அக் குழந்தைக்கு நெசவுத் தொழிலை விட்டுவிட்டு வேறு தொழில் கற்பிக்கவேண்டியதுதான். ஆனுல்,

ஒன்று. ஒரே பாடசாலை பல தொழில்களைக் கற்பிக்காது என்பதை நீங்கள் அறிதல் வேண்டும். சுமார் இருபத்தைந்து பிள்ளைகளுக்கு உபாத்தியாயர் ஒருவர் இருக்கவேண்டுமென்பதே எங்கள் நோக்கம். எத்தனை உபாத்தியாயர்கள் கிடைக்கிறார்களோ, அத்தனை இருபத்தைந்து பிள்ளைகளடங்கிய தனி வகுப்புக்கள் அல்லது பள்ளிக்கூடங்கள் இருக்கலாம். தச்சுத் தொழில், கருமான் தொழில், தோல் பதனிடும் தொழில் செருப்புத் தைக்கும் தொழில் முதலான பல தொழில்கள் இருக்கின்றன. இந்தப் பள்ளிக்கூடங்களில் ஒவ்வொன்றும் ஒவ்வொரு தனித் தொழிலைக் கற்பித்து வரலாம். இந்தத் தொழில்களைக் கற்பிக்கும் போது, இவை ஒவ்வொன்றின் மூலமாகவும் குழந்தையின் உள்ளம் விரிவடையச் செய்ய வேண்டுமென்பதை நீங்கள் ஞாபகம் வைக்கவேண்டும். இதனோடு, நகரங்களை மறந்துவிட்டு, நீங்கள் கிராமங்களில் சேவை செய்வதிலேயே கருத்தைச் செலுத்த வேண்டும். கிராமங்கள் கடல்போல் பெருகியவை; நகரங்களோ, கடலிலுள்ள ஒரு துளி நீர்போல. இதைக் கவனித்தால், செங்கற் காளவாய் போடுவது போன்ற தொழில்களை எண்ண இடமில்லை என்பது விளங்கும். ஒரு வேளை, சில பிள்ளைகள் கட்டிடம் அல்லது பாலம் நிருமிக்கவல்ல என்ஜினியர்களாகவோ இயந்திர அமைப்புக்களில் வல்ல என்ஜினியர்களாகவோ, வர நேரலாம். இதன் பொருட்டு, அவர்கள் தங்கள் ஏழு வருஷப் படிப்பு முடிந்த பிறகு, என்ஜினியர் தொழில் போன்ற தொழில்களைக் கற்பிக்கிற விசேஷக் கல்லூரிகளில் சென்று படிக்கவேண்டும்.

"இன்னுமொரு விஷயத்தையும் வற்புறுத்திக் கூற விரும்புகிறேன். தொழிற் பயிற்சியையும் வெறும் எழுத்துப் படிப்பையும் நாம் வெவ்வேருகப் பிரித்து, ஒன்ருேடொன்று எவ்விதத் தொடர்பும் அற்றதாகச் செய்துவிட்டோம். இது காரணமாக, கிராமக் கைத் தொழில் என்ருல் தாழ்வு என்ற அபிப்பிராயம் நம் மிடையே இருக்கிறது. வருணுசிரமம் என்பதைத் திரித்துத் தப்பாகப் பொருள் செய்து கொண்டமை யால், தச்சர், நெசவாளர், சக்கிலியர் முதலியோர் கீழான சாதியினர் என்ற எண்ணம் வந்துவிட்டது. இத்தொழில்கள் தாழ்ந்தவை என்று கருதி, அறிவுத் திறமைதரும் கல்விக்கும் இவற்றுக்கும் தொடர்பில் லாதபடி செய்து விட்டபடியால், நம்மிடையே கிராம்ப்டன் ஹார்கிரீவ் போன்ற ஒப்பற்ற மேதாவி களான தொழில் நிபுணர்கள் தோன்றியதில்லை. எழுத் தறிவுக்குத் தரும் கௌரவத்தை இப்படிப்பட்ட தொழில்களுக்கும் நாம் தந்திருந்தோமானுல், இத் தொழில் செய்துவரும் தொழிலாளிகளிடையே மிகச் சிறந்த நிபுணர்கள் தோன்றி யிருப்பார்கள்; புதுப் புதுப் பொருள்களைக் கற்பனையால் செய்து காண வல்ல விஞ்ஞரும் தோன்றியிருப்பார்கள். விரைவாய் நூற்பதற்கான ஸ்பின்னிங் ஜென்னி என்ற இயந்திரக் கருவியைக் கண்டுபிடித்த பிறகு, நீரின் சக்தியை உப யோகித்து நூற்றலைப் பெருக்கும் முறையும் பிறவும் தெரியவந்தன. இம்முறைகளின் பயனுய் ஆயிரக் கணக்கான மக்கள் தொழில் செய்வதற் கிடமின்றி, இயந்திர ஆலையே இவர்கள் தொழிலைச் செய்யத் தொடங்கிவிட்டது. இது கோரமான ராட்சதச் செயல் என்பது என் கருத்து. தொழில்களைக் கற்ப

தில் ஆழ்ந்த கவனம் செலுத்தினால், பிள்ளைகளுக்குப் புதுப் புதுப் பொருள்களைச் செய்வதில் சிறந்த திறமை உண்டாகும். நகரங்களை மறந்து கிராமங்களிலேயே நாம் வேலைசெய்து வருவோமானால், இக்கல்வி முறையானது அந்தத் திறமையைப் பெருக்கி நாட்டுப்புற மக்கள் அனைவருடைய தேவைக்கும் அத் திறமை பயன்படும்படி செய்வது நிச்சயம்."

ஹரிஜன், 18-9-1937

ஏ

இரு கோட்பாடுகள்

காந்தியடிகளுடைய அபிப்பிராயத்தில் குறை கூறி, கல்லூரியாசிரியரொருவர் ஒரு கடிதமெழுதியிருந்தார். காந்தியடியகள் அக்கடிததத்துக்குப் பின் வருமாறு பதில் எழுதினர்:

ஏற்கனவே நாம் கொண்டுள்ள அபிப்பிராயங்கள் நமது கண்ணை மறைத்துவிடுகின்றன. இந் நண்பரெழுதிய கடிதம் இதற்கு உதாரணமாகும். எனது திட்டம் என்ன என்பதை இவர் அறிய முயன்றதாகத் தெரியவில்லை. புதுமுறைப் பாடசாலைகளில் பயிலும் சிறுவர்களுக்கும் இலங்கையிலுள்ள ரப்பர் தோட்டங்களில் வேலைசெய்து கிட்டத்தட்ட அடிமைகளாகவே வாழும் சிறுவர்களுக்கும் வேறுபாடு இல்லை என்று கூறுகிருர். இப்படிக் கூறும்போது, இவர் தம் அறிவையே பழித்துக் கொள்ளுகிருர் என்றுதான்

சொல்லவேண்டும். ரப்பர் தோட்டங்களில் வேலை செய்யும் பிள்ளைகளை யாரும் மாணவராய்க் கருதி நடத்தவேயில்லை. இதை நாம் மறத்தலாகாது. அவர்களுடைய பள்ளிப் பயிற்சிக்கும் அவர்கள் செய்யும் தொழிலுக்கும் எத்தொடர்புமில்லை. ஆனால், நான் குறிப்பிடும் பாடசாலைகளின் நிலைமை இப்படியன்று; இங்குப் பயிலும் பிள்ளைகள் சாமானிய உயர்தரப் பாடசாலைகளில் பிள்ளைகள் பயிலும் பாடங்கள் அனைத்தையும் கற்கிறார்கள்: ஆங்கில மொழிப் பாடம் ஒன்று மட்டுமே இங்கு இராது; அதிகப்படியாக உடற் பயிற்சியும் சித்திரம் வரைதலும் பயில்வதோடு, முக்கியமாக ஒரு தொழிலையும் இவர்கள் கற்கிறார்கள். இப்பாடசாலைகளை வெறுந் தொழிற்சாலைகள் என்று கருதுவதென்றால், மேற்குறித்த விதமாக உள்ள பல செய்திகளை உணர மாட்டேனென்று பிடிவாதம் செய்வதாகத்தான் பொருள்படும். குரங்கைத் தவிர வேறு எந்தப் பிராணியையும் பார்க்காத ஒருவன், மனிதனைப் பற்றிய வருணனையைப் பார்க்கும்போது, அவ்வருணனை முழுமையும் குரங்குக்குப் பொருந்தா விட்டாலும், சில அம்சங்களில் மட்டுமேனும் பொருந்தக் காண்கிறான்; காணும்போது, இது மனிதனைப் பற்றிய வருணனை என்று எண்ண மறுத்து, இது குரங்குதான் என்று சாதிப்பதையே மேற்கூறிய பிடிவாதம் ஒக்கும். எனது புதுமுறைக் கல்வியில் என்னென்ன அனுகூலங்கள் விளையுமென்று நான் கூறுகிறேனோ அவ்வளவும் விளையுமென்று எதிர்பார்க்கலாகாது என்று அவர் பொது மக்களை எச்சரிக்கலாம்; இப்படி அவர் செய்திருந்தால், ஒருவேளை நியாய

மாகவும் இருந்திருக்கும். எனினும், நானே இவ்விதம் எச்சரித்து விட்டேன் : ஆதலால் அவர் எச்சரிப்பது கூட அவசியமன்று.

நான் கூறும் யோசனை புதிய தென்பதை ஒப்புக் கொள்ளுகிறேன். ஆனால், புதியதென்றாலே வழு வுடையதாகாது இந்த யோசனைக்கு அடிப்படையாக எந்த அனுபவமும் இல்லை என்பதையும் நான் ஒப்புக் கொள்ளுகிறேன். இருந்தாலும், என் தோழர்களும் நானும் பெற்றுள்ள சொற்ப அனுபவத்தைக் கொண்டு பார்க்கும்போது, இப்புதுத் திட்டத்தில் உண்மையோடு உழைத்தால், இது நிச்சயம் வெற்றி பெறுமென்ற ஊக்கம் பிறக்கிறது. அப்படி ஒருவேளை இத்திட்டம் வெற்றி பெறாவிட்டாலுங்கூட, இதைப் பரீட்சை செய்து பார்ப்பதால் நம் நாட்டுக்கு நஷ்டம் எதுவும் இல்லை. இத்திட்டம் சிறிதளவே வெற்றி பெற்றாலும், இதனால் விளையும் லாபம் மிகப் பெரிதா யிருக்கும். ஆரம்பக் கல்வியை இலவசமாயும் கட்டாய மாயும் பயன் தரத்தக்க விதமாயும் அளிப்பதற்கு வேறெந்த வழியுமில்லை. இப்போதுள்ள ஆரம்பக் கல்வி, வெறும் மாய வலை என்பது எல்லோரும் அறிந்தது.

ஏழு வருஷத்தில் இத்திட்டம் பூர்த்தி பெறும் என்று சொல்லும்போது, ஏழு வருஷம் என்ற கால அளவு அவ்வளவு முக்கியமன்று. எந்த நிலைக்கு அறிவு வளர வேண்டுமென்று நான் கருதுகிறேனோ அந்த நிலையடைய இன்னும் அதிக காலம் பிடித்தாலும் பிடிக்கலாம். கல்வி -போதனைக்குரிய காலத்தைச் சற்றே அதிகப் படுத்துவதால் நாட்டுக்கு எவ்வித நஷ்டமும் நேராது.

இந்தந் திட்டத்தின் முக்கியமான அம்சங்கள் பின் வருவனவாகும்:

க. ஒரு பையனுக்கோ பெண்ணுக்கோ எல்லாப் பண்புகளும் பூரண வளர்ச்சிபெற வேண்டுமானால், அதற்குச் சாதனமாயிருக்கக் கூடியது தொழிற் கல்வியேயாகும்; ஆகவே, எவ்விதமான பாடத்திட்டமும், தொழிற் பயிற்சியை நடுநாயகமாக வைத்தே அமைக்கப் பெறுதல் வேண்டும்.

உ. இவ்விதம் அமைக்கப் பெறும் ஆரம்பக் கல்வித் திட்டமானது, முதல் வருஷத்தில் அல்லது இரண்டாவது வருஷத்திலும் கூட தனக்காகும் செலவு முழுமையும் தானே வகித்துக்கொள்ள முடியாமற் போகலாம்: எனினும், இக் கல்வித்திட்ட முழுமையும் மொத்தமாக நோக்கும்போது, இது தன் செலவைத் தானே வகித்துக்கொள்ளு மென்பது உறுதி. ஆரம்பக் கல்வி என்று இங்கே நான் கூறுவது, மேலே விவரித்தபடி யுள்ள புதுமுறைக் கல்வியாகிய ஆதாரக் கல்வியையே யாகும்.

மேற்குறித்த ஆசிரியர், தொழில்கள் மூலமாய்க் கணக்குப் பாடமும் பிற பாடங்கள் சிலவும் கற்பிக்க வியலாதென்று கருதுகிறார். அனுபவமில்லாமல் அவர் இங்ஙனம் கூறுகிறார். அனுபவத்தைக் கொண்டு நான் பேசமுடியும். தென் ஆப்பிரிக்கா டிரான்ஸ்வால் பகுதியில் வைத்திருந்த டால்ஸ்டாய் விவசாயப் பண்ணையில் சில பிள்ளைகளையும் பெண்களையும் கல்வி பயிற்றும் பொறுப்பு எனக்கிருந்தது. அவர்களுக்கு எல்லாப் பண்புகளையும் ஒத்து வளரச் செய்வதில்

எனக்கு எக்கஷ்டமும் நேரவில்லை. அப்பயிற்சிக்கே மையமாயிருந்த தத்துவம், சுமார் எட்டுமணி நேரம் அவர்களுக்குத் தொழிற் பயிற்சி இருந்தது என்பதாகும். புத்தகப் படிப்பென்பது அவர்களுக்கு ஒரு மணி அல்லது அதிகமாய்ப் போனால் இரண்டு மணி நேரந்தான். நிலத்தைக் கொத்துதல், சமைத்தல், தோட்டிவேலை செய்தல், செருப்புத் தைத்தல், இலகுவான தச்சுத்தொழில், சில்லறை ஏவல் வேலை என்ற தொழில்களையே அவர்கள் செய்து வந்தார்கள். ஆறு வயதுள்ள குழந்தைகள் முதல் பதினாறு வயதுள்ள குழந்தைகள் வரை அங்கிருந்தார்கள். அந்த இடத்தில் பயிற்சி யளித்து நான் பெற்ற அனுபவம் பிந்திய அனுபவங்களால் எவ்வளவோ விரிவடைந்திருக்கிறது.

ஹரிஜன். 18-9-1937

2

கல்வி முறையானது தனக்காகும் செலவைத் தானே வகித்துக்கொள்கிறதா என்பதே அக்கல்வி முறைக்கு உரைகல்லாகும். சென்ற நாற்பது ஆண்டுகளாக, இவ்வுண்மையை ஒரு திரைக்குப் பின்னிருந்து காண்பது போல்தான் நான் கண்டேனேயொழிய, துள்ளிபமாய்க் காணவில்லை; இன்றைய சூழலில் தான் அதை நான் தெளிவாய் உணர முடிந்திருக்கிறது. முன்னமேயே இதை உணரவில்லை யென்பதுதான் எனக்கு மிக்க வருத்தந் தருகிறது.

1920-ஆம் ஆண்டிலேயே இன்றைய கல்வி முறையைப் பலமாய்க் கண்டித்துப் பேசியிருக்கிறேன். இப்போதோ, ஏழு மாகாணங்களில் அதிகாரம் வகிக்

கும் மந்திரிகளுக்கு யோசனைசொல்லி வழி காட்டக் கூடிய சந்தர்ப்பம் எனக்கு வாய்த்திருக்கிறது. நம் நாட்டு விடுதலைக்காக நடந்த மகத்தான போராட்டத்தில் இவர்கள் எனக்கு உற்ற தோழர்களா யிருந்து நான் அனுபவித்த துன்பத்தை யெல்லாம் தாங்களும் அனுபவித்தவர்கள். இவர்களுக்கு நான் யோசனை கூறுவதோ,வழிகாட்டுவதோ, சொற்பமே சாத்தியமா யிருக்கலாம். எனினும், இப்போதைய கல்வி முறை ஆதி முதல் அந்தம் வரை தலைகீழா யிருக்கிற தென்று நான் எப்போதும் சொல்லிவந்திருக்கிறேன். ஆதலால், இந்தக் குறையைப் போக்க ஏதேனும் செய்ய வேண்டுமென்ற ஊக்கம் எனக்கு மேலோங்கி நிற்கிறது. இது வரையில், புதுக் கல்வி முறைபற்றி எனக்குத் தோன்றிய கருத்துக்களை எப்படியோ எழுதி வந்தேன்: எழுதியது அவ்வளவு திருப்திகர மாயும் இல்லை. ஆனால், இப்போதுதான் இக்கல்வி முறை என் மனத்தில் திடீரென்று ஒரு மின்னல் போல் உதயமாயிற்று. இதுவே மெய்யானது என்ற உறுதி நாளுக்குநாள் பலப்பட்டு வருகிறது. ஆதலால், இந்நாட்டில் சுயநலம் சிறிதும் இன்றி, பாரபட்சமில்லாது சிந்திக்க வல்லவர்களாயுள்ள கல்வியாளருக்கு நான் விடுக்கும் வேண்டுகோள் ஒன்று உண்டு. தற்போது நடந்துவரும் கல்விமுறை பற்றி அவர்கள் முன்னமே கொண்டிருக்கும் எண்ணமோ முடிபோ அவர்களுடைய நல்லறிவு தொழிற்படுவதைத் தடை செய்ய விடாதபடி, நான் சொல்லி வருகின்ற இரண்டு கோட்பாடுகளையும் ஆராயுமாறு வேண்டிக் கொள்கிறேன். இன்று கல்வித் துறையில் ஈடுபட்டிருப்போர் கல்வி முறை என்றால் என்ன அபிப்பிராயம் கொண்

டிருக்கிறார்களோ அத்தகைய கல்வி முறையை நான் ஒரு சிறிதும் அறியாதிருக்கலாம்; இருப்பினும், இக் காரணம் பற்றி நான் பேசியும் எழுதியும் வந்துள்ள கருத்துக்களே பிழைபட்டவை என்று முடிவுக்கு அவர்கள் வந்துவிடலாகாது என்பதையே நான் வற்புறுத்திக் கூற விரும்புகிறேன். பால் மணம் மாறாத பாலரிடமிருந்துகூட அறிவுரைகள் பிறக்கும் என்று சொல்வதுண்டு. இது கவிஞன் கூறும் உயர்வு நவிற்சியாகலாம்; ஆயினும், குழந்தைகளிடமிருந்து சில சமயமேனும் ஞானம் உதிப்பது உண்மையே. இதையே அறிஞர்கள் அழகுபடுத்தி அறிவுக்குப் பொருந்தும் முறையில் வெளியிடுகிறார்கள். ஆதலால், என் கோட்பாடுகள் செம்மையானவையா என்றுமட்டும் ஆராய்ந்தால் போதுமானது; சொன்ன என்னைப் பற்றிய கவலை வேண்டாம். மீண்டுமொருமுறை அவற்றை இங்குக் கூறுகிறேன். முன் சொல்லிய விதமாகவே சொல்லாதபடி, இப்போது எந்த உருவத்தில் அவை என் ஞாபகத்துக்கு வருகின்றனவோ, அந்த உருவத்திலேயே இங்குக் கூறுகிறேன்.

க. நான் கூறிவரும் புதுமுறை ஆரம்பக் கல்வி (ஆதாரக் கல்வி)யானது, சுமார் ஏழு வருஷம் அல்லது இதனினும் சற்றே அதிகமான காலம் பயிற்றப் பெறும். இன்றைய மெட்ரிகுலேஷன் பாடத்திட்டத்தில் கல்வியின் தரம் எவ்வளவு இருக்கிறதோ, அதே தரம் இப் புது முறையிலும் இருக்கும்; ஆங்கில மொழிப் பாடம் என்பது மட்டும் இராது: அறிவு விளக்கம் பெறுவதற்கான எல்லாத் துறைகளிலும் பிள்ளைகளின் உள்ளம் விரிந்து பொலிவுபெறச் செய்

யும் பொருட்டு, ஏதேனுமொரு கைத்தொழில் மூல மாகவே கல்வி போதிக்கப்பெறும். தற்போது ஆரம்பக் கல்வி, நடுத்தரக் கல்வி, உயர்தரக் கல்வி என்று வழங்கும் கல்விக்குப் பதிலாக மேலே விவரித்த விதமாயமைந்த புதுமுறைக் கல்வியொன்றே நமது பாடசாலைகளில் இடம் பெறும்.

உ. இத்தகைய கல்வி முறையானது, மொத்த மாய்ப் பார்க்குமிடத்து, தனக்காகும் செலவைத் தானே வகிக்க வல்லதா யிருக்கும். இருக்கவும் வேண்டும்; இக் கல்வி முறை சரியாய் நடக்கிறதா என்று சோதித் தறிவதற்கு, இது தன் செலவைச் சமாளித்துக் கொள்ளுகிறதா என்ற சோதனைதான் உரைகல்லாகும்.

ஹரிஜன், 2-10-1947

அ

நகரக் கல்வியும், கிராமக் கல்வியும்

இந்தியாவின் ஜனத் தொகையில் மிகப் பெரும் பகுதியினர் கிராமங்களிலேயே வாழ்கிறார்கள். ஆகவே, ஆரம்பக் கல்வியைக் குறித்து நான் பேசுகையில், வேண்டுமென்றே கிராமங்களைக் குறித்துப் பேசி வந்திருக்கிறேன். கிராமங்களில் கல்வி போதிப்பது எப்படி என்பதைத் தகுந்த முறையில் தீர்த்துக் கொண்டால், நகரங்களில் கல்வி போதிக்கும் முறை யையும் வகுத்தது போலாகும்

ஆரம்பக் கல்வி விஷயத்தில் ஆர்வம் நிறைந்த அன்பரொருவர், பம்பாய் நகரம் சம்பந்தமாய்ப் பின் வரும் குறிப்புக்களை எழுதியிருக்கிருர் :

"ஆரம்பக் கல்விக்காகும் செலவை ஏற்பது எங்ஙனம் என்ற கேள்வியே இப்போது காங்கிரசாரின் கவனத்தைக் கவர்ந்திருக்கிறது. ஆரம்பக் கல்வியானது தனக்காகும் செலவைத் தானே வகித்துக் கொள்ளும்படி செய்வது எவ்விதம் என்ற பேச்சு எங்கும் இப்போது எழுந்திருக்கிறது..ஆகவே,பம்பாய் போன்ற பெரிய நகரத்தில் இதை எவ்விதம் செய்ய லாம், எந்த அளவுக்குச் செய்யலாம் என்று ஆராய்வது பயனுடையதாகும். பம்பாய் நகரசபையின் வருஷாந்த வரவு செலவுத் திட்டத்தில் கல்விக்காக ஒதுக்கியுள்ள தொகை சுமார் 35 அல்லது 36 லக்ஷ ரூபாய். ஆரம்பக் கல்வியைக் கட்டாயமாக்க வேண்டுமானுல், இந்தத் தொகையோடு இன்னும் பல லக்ஷ ரூபாய் சேர்த்துச் செலவு செய்யவேண்டி வரும். இப்போது ஆசிரியர் சம்பளத்துக்காக வருஷந்தோறும் இருபது லக்ஷ ரூபாயும் கட்டிட வாடகைக்காக நான்கு லக்ஷ ரூபாயும் செலவாகி வருகிறது. இது மாணவன் ஒருவனுக்குச் சராசரி 40 அல்லது 48 ரூபாய் வீதமாகும். மாணவனுக்குத் தொழிற்பயிற்சி அளித்து வருங் காலத்தில், அவனுல் இந்தத் தொகை சம்பாதிக்க முடியுமா? முடியாதென்ருல், ஆரம்பக் கல்வியானது தன் செலவைத் தானே வகித்துக் கொள்ளும் என்று எவ்விதம் சொல்ல முடியும்?"

ஏதேனுமொரு தொழிற்பயிற்சி மூலமாக ஆரம்பக் கல்வி அளிப்பது என்ற திட்டத்தை மேற்

கொண்டால், பம்பாய் நகரமும் அதில் பயிலும் பிள்ளைகளும் லாபமடைவார்கள் என்பது நிச்சயம். இதுபற்றி எனக்குச் சிறிதும் சந்தேகமே யில்லை. தங்கள் ஆரம்பக் கல்வியின் முடிவில் இப்பிள்ளைகள் இப்போது அடைகிற லாபம் விசேஷமாக ஒன்று மில்லை: இதனால் நகரப் பிரஜைகளாக ஆகுந் தகுதி அவர்களுக்கு நிச்சயம் வரவேயில்லை.

ஆரம்பக் கல்வி போதிப்பதற்கு ஒரு தொழிற் பயிற்சியை அடிப்படையாகக் கொள்ள வேண்டு மென்று நான் சிறிதும் தயங்காமல் சிபாரிசு செய் கிறேன். இப்படிக் கொள்வதால் பம்பாய் நகரத்தில் ஆரம்பக் கல்விக்கு இப்போது பிடிக்கும் செலவாகிய 35 லக்ஷ ரூபாயும் மிச்சமாகும். இவ்வளவும் மிச்ச மாகாவிட்டாலும், இத்தொகையில் பெரும் பகுதி யேனும் மிச்சமாவது உறுதி. ஒரு பிள்ளைக்கு ஆரம்பக் கல்வி போதிப்பதற்கு வருஷந்தோறும் ஆகும் செலவு 40 ரூபாய் என்று வைத்துக்கொள்வோம். கல்விக் காகப் பம்பாய் நகரசபை பெறும் அரசாங்க நன் கொடையின் மூலம் அந்நகரில் சுமார் 87,500 பிள்ளைகள் கல்வி பயில்கிறார்கள் என்று ஏற்படுகிறது. பம்பாய் நகரத்தின் ஜனத்தொகை 10 லக்ஷம் இருக்கக் கூடும். பள்ளிக்கூடம் போகவேண்டிய வயதுள்ள பிள்ளைகள் அங்கே குறைந்தது ஒன்றரை லக்ஷம் பேர் இருப்பார்கள், இதனால் மேற்கூறிய தொகையினர் போக மிச்சமுள்ள 62,000 பிள்ளைகளுக்குக் குறையா மல் ஆரம்பக் கல்வி பெறாமலே இருந்து விடுகிறார்க ளென்று தெரிகிறது. இத்தொகையினரில் சிலர் தனிப்பட்ட முறையில் தங்கள் வீட்டிலேயே கல்வி

பயிலவுங் கூடும். இவர்கள் தொகை சுமார் 6000 இருக்கலாம். இதை நீக்கினால், மிச்சமுள்ள 56,000 பிள்ளைகளுக்குக் கல்வி போதிக்க ஏற்பாடு செய்ய வேண்டியிருக்கிறது முன்சொன்னபடி ஒருபிள்ளைக்கு 40ரூபாய்வீதம் இதன் பொருட்டு 22,40,000 ரூபாய் இன்னும் அதிகப்படியாக வேண்டியிருக்கிறது. இவ்வளவு பணம் இந்த யுகத்தில் கிடைக்குமென்று எனக்குத் தோன்றவில்லை.

இந்தியாவில் கட்டாய ஆரம்பக் கல்வி அமுலுக்கு வரவேண்டும், அக் கல்வி இலவசமாகவும் இருக்க வேண்டும் என்பதை நான் உறுதியாக நம்புகிறேன். பிள்ளைகளுக்கு ஏதேனுமொரு பயனுள்ள தொழிலைக் கற்பித்து அவர்களுடைய உடல், உள்ளம், உயிர் என்ற மூன்றின் திறனையும் தொழிற்படுத்தி இயக்கி வளர்ப்பதற்கு அத்தொழிலையே சாதனமாகக் கொண்டால்தான் இக்கொள்கை நிறைவேறும் என்பது எனது அபிப்பிராயம். கல்வி சம்பந்தமாக இப்படி வரவு செலவுக் கணக்குப் போடுவது நியாயமற்றது, அல்லது கருமித்தனமானது என்று யாரும் நினைக்க வேண்டாம். வரவு செலவுக் கணக்குப் பார்ப்பதினாலேயே எதுவும் கருமித்தனமாகிவிடாது. நீதி முறையெதுவும் உண்மையாகவே சிறந்ததாக இருக்க வேண்டுமானால், பொருளாதாரத் துறையிலும் அது பயனுள்ளதாயிருக்கவேண்டும். இதுபோலவே, சிறந்த நீதி முறைக்குப் பொருளாதாரம் எவ்விதத்திலும் முரணானதன்று. எந்தப் பொருளாதார முறையானது பணத்துக்கு வழிபாடு செய்யும் உணர்ச்சியை வளர்த்து எளியோரை வாட்டி வலியோர் பொருள்

குவிக்க உதவுகிறதோ, அது போலியானது; அஞ் ஞானம் நிறைந்தது; அது நாசத்தில்தான் கொண்டு போய்விடும்; ஆனால், உண்மையான பொருளாதார முறையானது சிறந்த சமூக தர்மத்தை நிலை நாட்டும்; வலியோருடைய நன்மையை மட்டுமின்றி, எளியோருடைய நன்மையையும், மற்றெல்லோருடைய நன்மையையும் சமமாகக் கருதி அதை வளர்க்கப் பாடுபடும்; கண்ணியமான வாழ்க்கைக்கு அது இன்றியமையாதது. ஆதலால், பம்பாய் நகரமானது அங்குள்ள பிள்ளைகளுக்குப் பலனுள்ள ஒரு கைத் தொழிலைக் கற்பித்து இதன் மூலம் ஆரம்பக் கல்விக்காகும் செலவை அக்கல்வி முறையே வகித்துக்கொள்ளும்படி செய்யுமானால், இந்த நாடு முழுமையும் பின்பற்றத் தகுந்த உத்தமமான ஒரு செயலை இந்நகரம் செய்ததாகும். ஒரு பிள்ளை நாளொன்றுக்கு நான்கு மணி நேரம் ஒரு தொழிலில் ஈடுபடுகிறான் என்று வைத்துக்கொள்வோம். மாதம் இருபத்தைந்து நாள் அவன் இவ்விதம் ஈடுபடக்கூடும். ஒரு மணிக்குக் கூலி அரையணா இருக்குமென்று வைத்துக்கொண்டால், மாதம் அவனுக்கு ரூ. 3-2-0 வரும்படி கிடைக்கும். மேலும், இந்தத் தொழிற் பயிற்சியானது அவனுடைய உள்ளம் எந்நேரமும் ஊக்கமும் உற்சாகமும் உடையதாயிருக்கச் செய்யும்; கூடவே அவனுடைய புத்தியைக் கூர்மைப் படுத்தும் சாதனமாகவும் இது அமையும். ஆனால், ஆரம்பத்திலிருந்தே இந்தப் பிள்ளைக்கு மணியொன்றுக்கு அரையணா ஊதியம் கிடைத்துவிடாது. எனினும், ஏழு வருஷ காலத்தையும் மொத்தமாய்ச் சேர்த்துப் பார்க்கும்போது, சராசரி மணியொன்றுக்கு அரையணா வீதம் கிடைப்பது நிச்சயம்.

இவ்விதம் குழந்தைக்குத் தொழிற் பயிற்சி யளிப்பதன் பயனாய்க் கல்வியானது குழந்தையின் புத்தியை மந்தமாக்கிவிடும் என்றும், குழந்தை யின் உள்ளம் விரிவடைவதைக் கெடுத்துவிடும் என்றும் எண்ணுவது பெருந் தவறாகும். நல்ல தகுதி வாய்ந்த ஆசிரியர்களிடம் பிள்ளைகள் தொழிற் பயிற்சி பெற்று வரும்போது, அவர்களைக் கவனித்துப் பார்த்திருக்கிறேன். சிறுவர்களின் முகம் மிக்க பிர காசத்தோடும் கரையற்ற மகிழ்ச்சியோடும் பொலிந் ததைக் காண எனக்குண்டான ஆனந்தத்தை மறக்க முடியாது. தகுதி யில்லாத ஆசிரியர் சிலர், பயிலப் பயில மிகுந்த உற்சாகமும் ஆர்வமும் தரவல்ல பாடங் களைத் தவறான முறையில் பிள்ளைகளுக்குக் கற்பித்த தையும் நான் கண்டிருக்கிறேன்: முன் சொன்ன படி மகிழ்ச்சியோடு பொலிவதற்குப் பதிலாக இப் பிள்ளைகள் பொலிவிழந்து மிகவும் சோர்ந்திருந் தார்கள்.

இது சம்பந்தமாய் ஒரு கேள்வி எழக்கூடும். நாம் விரும்புகிறபடி திறமையும் தகுதியும் வாய்ந்த ஆசிரியர் கள் எங்கிருந்து நமக்குக் கிடைக்கப் போகிறார்கள்? தேவை இருக்கும் பட்சத்தில், திறமையும் தகுதியும் தாமே தோன்றும் என்றே நான் விடை கூறுவேன். கல்வி பற்றிய நமது கொள்கையை அடியோடு மாற்றிக்கொள்வது அவசியமென்பதை நாம் முதலில் உணரவேண்டும்; இதை உணர்ந்துவிட்டால், அம் மாற்றத்தைச் செயலில் கொண்டுவருவது கடினமான காரியமாகாது. இன்றைய கல்வி முறைக்குச் செல விடும் காலத்தில் சிறுபகுதியும் பொருளில் சிறுபகுதி

யும் இருந்து, இன்றுள்ள ஆசிரியர்கள் முதலியோரில் சிறு பகுதியினர் இருந்தாலும் போதும்; நம் வேலைக்குரிய தொழிற் பயிற்சிக்கு எத்தனை ஆசிரியர்கள் வேண்டியிருப்பார்களோ அவர்களனைவருக்கும் பயிற்சியளித்து விடலாம். பம்பாய் நகரிலுள்ள கல்வி நிபுணர்களுக்கு உண்மையான ஊக்கம் இருக்குமானால், அவர்கள் ஒரு குழுமமாயிருந்து நான் கூறி வந்த யோசனையை யொட்டிப் புதிய ஆரம்பக் கல்வித் திட்டமொன்றைத் தயாரித்து, எவ்வகைக் காலதாமதமுமில்லாமல் அதை எளிதாக அமுலுக்குக் கொண்டு வர முடியும். இப் புதுத் திட்டத்தினால் மேலான பலன் விளையும் என்று நான் எப்படி மனமார நம்புகிறேனோ, அப்படியே அவர்களும் நம்புவதொன்றே முக்கியமானது. இத்தகைய நம்பிக்கை அகத்திலிருந்து உதிக்கவேண்டுமே யன்றி, இதைப் புறத்திலிருந்து சம்பாதித்துக் கொள்ள முடியாது. மனமொன்றிய நம்பிக்கையின்றிச் சிறந்த செயல் எதுவும் இவ்வுலகில் நடைபெற்றதில்லை.

நகர்ப் புறத்துள்ள பாடசாலைகளில் படிக்கும் பிள்ளைகளுக்கு எவ்விதமான தொழில்களைக் கற்பிக்கலாம்? இதுதான் தகுந்தது, இது தகுதியற்றது என்று திட்டமாக வரையறை செய்ய முடியாது; எனினும், என் கருத்தைத் தெளிவாகச் சொல்லி விடுகிறேன். இந்தியக் கிராமங்களுக்குப் புத்துயிர் அளிக்க வேண்டுமென்பதே என் பெரு விருப்பம். வாழ்க்கை வசதிகள் என்று எடுத்துக்கொண்டால், இன்று முதலிடம் நகரங்களுக்குக் கிடைக்கிறதேயொழிய, நம் கிராமங்களுக்குக் கிடைப்பதில்லை.

மேலும் கிராமங்கள் இன்றும் இருந்துவரும் நிலைமையைப் பார்த்தால், நகரங்கள் சுரண்டுவதற் கென்றே அவை ஏற்பட்டவை போலவும், நகரங்களின் தயவை எதிர்பார்த்தே வாழ்வன போலவும் தோற்றுகின்றன. இது இயற்கைக்கு விரோதமானது. கிராமங்களிலிருந்து எவ்வளவோ வலிமையையும் வாழ்க்கைக்கு ஆதாரமான எத்தனையோ பொருள்களையும் நகரங்கள் பெறுகின்றன. ஆதலால், நகரங்கள் தங்கள் சுய நலத்துக்காகக் கிராமங்களைச் சுரண்டுவதை விட்டு விட்டு, அவற்றினிடமிருந்து தாங்கள் அடையும் லாபத்துக்குத் தகுந்த பிரதிபலன் செய்யவேண்டுமென்பதை உணரவேண்டும். நகரங்கள் இந்தக் கடமையை உணர்ந்தால் தான் நகரங்களுக்கும் கிராமங்களுக்கு மிடையே நல்ல முறையில் ஒழுங்கான தொடர்பு ஏற்படும். சமூகத்தைப் புனர் நிர்மாணம் செய்வதாகிய இந்த மகத்தான புனித வேலையில் நகரத்தில் உள்ள சிறுவர்களும் பங்கெடுத்துக்கொள்ள வேண்டுமானால் எந்தத் தொழில்கள் மூலமாய் அவர்கள் கல்விபெறவேண்டிவருமோ அந்தத்தொழில்களும் கிராமங்களுக்குத் தேவையான தொழில்கள் முதலியவற்றிற்கு நேரே சம்பந்தப்பட்டிருக்க வேண்டும். நூல் உற்பத்தி சம்பந்தமான பல வேறு தொழில் முறைகளுமே, எனக்குத் தெரிந்தவரையில், இந்த விதம் சம்பந்தப்பட்டிருக்கின்றன. பஞ்சரைத்தல், பஞ்சைச் சுத்தம் செய்தல், பட்டை போடுதல், நூல் நூற்றல் முதலான இந்தத் தொழிலின் பகுதிகள் வேறு எந்தத் தொழிலுக்கும் இல்லாத அளவில், மேற்சொன்ன சம்பந்தம் பெற்றிருக்கின்றன. இன்றுகூட நாட்டுப்புறங்களில்தான் பருத்தி பயிராகிறது. ஆனால்,

நகரங்களில் அதை அரைத்து, நூல் நூற்றுத் துணியாக நெய்கிருர்கள். இந்த வேலைகள் நெசவாலைகளில் நடைபெறுகின்றன. இந்த ஆலைகளில் பருத்தியைக் கொண்டுவந்து அரைப்பது முதலான தொடர்பான பல வேலைகளையும் செய்வது, அளவில்லாத மனித சக்தியும், பொருள்களும், இயந்திர சக்தியும் அநியாயமாய் வீண்போகின்றன என்பதைப் புலப்படுத்துகிறது. பஞ்சைப் பட்டை போடுதல் நூல் நூற்றல் முதலான கிராமக் கைத்தொழில்களின் மூலமாய்த் தான் ஆரம்பக் கல்வி அளிக்கவேண்டு மென்பது எனது திட்டமாகும்; அமைதியான ஒரு சமூகப் புரட்சிக்கு முதற்படி ஆகுமாறு இத்திட்டம் வகுக்கப் பட்டுள்ளது. இதனுல் பல திறப்பட்ட சிறந்த பலன் ஏற்படுவது உறுதி; நகரத்துக்கும் கிராமத்துக்குமிடையே நியாயமான சிறந்த முறையில் தொடர்பு ஏற்படும். சமூகக் கட்டுக்கோப்பு இப்போது பெரிதும் சீர் குலைந்திருக்கிறது. செல்வருக்கும் ஏழைகளுக்கும் இடையே உள்ள தொடர்பு, இப்போது கசப்பும் கொடுமையும் நிறைந்ததாய் இருக்கிறது. இவற்ருல் வரும் தீமைகளில் சிலவற்றையேனும் அடியோடு தொலைக்க, மேற்சொன்ன சமூகப் புரட்சி பேருதவியாயிருக்கும். கிராமங்கள் நாளுக்கு நாள் நசித்துப் போவதை அது தடுக்கும்; தடுத்து, இன்னும் கொஞ்சம் நீதி பொருந்திய சமூக அமைப்புக்கு அடிகோலும். அந்த அமைப்பில் செல்வம் உடையவர்களுக்கும் இல்லாதவர்களுக்குமிடையே இயற்கைக்கு விரோதமான எந்த வேற்றுமையும் இராது; சமூகத்தில் எல்லோருக்கும் நல்ல வாழ்வு வாழ்வதற்கு வேண்டிய கூலியும் சுயேச்சையாய் வாழ்வதற்கு உரிய

உரிமையும் நிச்சயமாயிருக்கும். சமூகப் போராட்டம் என்பது ஏற்பட்டால் எவ்வளவோ பயங்கரமாயிருக்கும், எவ்வளவோ ரத்தம் சிந்தும். தவிர, இந்தியா போன்ற ஒரு பெரிய கண்டத்தில் இயந்திர வசதி பூரணமாய் அமைக்க வேண்டுமானுல் அளவில்லாத மூலதனம் செலவிட வேண்டிவரும். மேற்சொன்ன திட்டத்தின் மூலம், இவ்வளவும் இல்லாமலே அந்தப் புதிய சமூக அமைப்பு உதிக்கும். இது அன்னிய நாட்டிலிருந்து இறக்குமதியாகிற இயந்திரங்களையோ அல்லது அன்னிய நாட்டாரின் இயந்திரத் திறமையையோ வேறு கதியில்லாமல் நம்பியிருப்பதாகவும் ஆகாது. முடிவாக, ஒரே துறையில் அளவற்ற திறமை ஒருவருக்கே அல்லது சிலருக்கே ஏற்படவேண்டிய அவசியமும், இதனுல் நீங்கிவிடும்; இதனுல் தேசத்திலுள்ள பாமர மக்களின் தலையெழுத்தை நிர்ணயிக்கிற பொறுப்பை, ஒரு சிலர் தங்களிடம் வைத்திராமல், அப் பாமர மக்களிடமே ஒப்புவித்தது போலாகும்.

ஹரிஜன். 9-10-37

௬

அஹிம்சை

புதிதாய் அமைக்கப்பெற்ற தேசியக் கல்விச் சபையின் கூட்டமொன்றில், இப்புதிய கல்வியின் உட்கருத்தையும் நோக்கத்தையும் காந்தியடிகள் பின்வருமாறு விளக்கியுரைத்தார்,

சமூகத்தில் எத்தனையோ கேடுகள் உள்ளன. வகுப் பூசல் என்பது அவற்றுள் மிகவும் கொடுமை யானது. இக் கேடுகளனைத்தையும் போக்கவும், சுதந் திரம் பெறவும் ஏற்ற பாடசாலையாக இந்தப் பயிற்சிப் பாடசாலையை ஆக்கவேண்டும். இது நிறைவேறும் பொருட்டு, நாம் அஹிம்சையையே உறுதியாகக் கடைப்பிடிக்கவேண்டும். ஹிட்லர் அமைத்த பள்ளிக் கூடங்களும் முசோலினி அமைத்த பள்ளிக்கூடங் களும், ஹிம்சையையே அடிப்படையான தத்துவங் களாய்க் கொண்டு எழுந்தவை. காங்கிரசின் திட்டப்படி, நமது தத்துவம் அஹிம்சையாகும். ஆத லால், நம்முடைய பிரசினைகளனைத்தையும் அஹிம்சை யைக் கடைப்பிடித்தே தீர்த்துக்கொள்ள வேண்டும். நம்முடைய கணித சாஸ்திரம், விஞ்ஞானம் சரித்திரம் முதலான எல்லாவற்றையும் அஹிம்சைக் கண்கொண்டே நாம் பார்ப்போம். இந்தப் பாடங் களில் வரும் பிரசினைகளிலெல்லாம் இத்தத்துவமே ஊடுருவி நிற்கும்.

டில்லியிலுள்ள தேசிய முஸ்லிம் சர்வ கலாசாலை யான ஜமிய மில்லிய இஸ்லாமியா கலாசாலையில் துருக்கி தேசத்தைப்பற்றி ஹாலிடே-எடிப்-ஹானம் அம்மையார் பிரசங்கம் செய்தபோது நான் வெளி யிட்ட ஒரு கருத்தை மீண்டும் இங்கு ஞாபகப்படுத்த எண்ணுகிறேன். பொதுவாக இன்று, தேசசரித்திரம் என்று வழங்குவதெல்லாம், அரசர்களையும் அவர்கள் போட்ட சண்டைகளையும் பற்றிய கிரமமான விவரம் தான்; எதிர்காலத்தில், சரித்திரம் என்பது மக்கள் சரித்திரமாகத்தா னிருக்கும். இந்தச் சரித்திரம்

அஹிம்சை பொருந்தியதாய்த்தான் இருக்கமுடியும்; அப்படித்தான் இன்று இருக்கிறது. ஆகவே, நகரத்திலுள்ள தொழில்களைப்பற்றி நாம் ஊக்கத்தோடு வேலை செய்து பயனில்லை; கிராமக் கைத்தொழில்களையே ஊக்கத்தோடு நாம் வளர்க்க வேண்டியவர்களாகிறோம்; அதாவது, நம் நாட்டிலுள்ள ஏழு லக்ஷம் கிராமங்களில் ஒரு சிறு பகுதிக்குமட்டும் புத்துயிரளித்தால் போதாது, அவையனைத்தையுமே நசித்துப் போகாமல் நாம் காக்கவேண்டும்; இதற்கு, நமது கிராமக்கைத்தொழில்கள் மீண்டும் தலையெடுக்கும்படி செய்வது நமது கடமை. கலாசாலையில் கிடைக்கிற கல்வியறிவு முழுமையும் இந்தத் தொழில்கள் மூலமாய்ப் புகட்ட முடியுமானல், இந்தப் புரட்சியை உண்டுபண்ண முடியுமென்று நீங்கள் உறுதியாக நம்பலாம். இதையே நோக்கமாக வைத்து, நமது பள்ளிக்கூடங்களுக்குரிய பாடப் புத்தகங்களையும் தயார் செய்தாக வேண்டும்.

நான் இப்போது சொல்வதை நீங்கள் செவ்வையாய் ஆலோசித்து, பொருத்தமென்று தோன்றுவதை விட்டுவிடலாம். நான் கூறும் அபிப்பிராயம் முஸ்லிம் சகோதரர்களுக்குப் பிடிக்காத பட்சத்தில், அவர்கள் அதை அப்படியே விட்டுவிடலாம். நான் விரும்புகிற அஹிம்சையென்பது, பிரிட்டிஷ்காரரோடு இன்று நாம் செய்யும் போராட்டத்தில் மேற்கொள்ள வேண்டிய அஹிம்சையென்று மட்டும் பொருள்படாது. நமக்குள்ளிருக்கும் விவகாரங்களிலும் சிக்கல்களிலும், அஹிம்சையையே தவருமல் கடைப்பிடிக்க வேண்டும்; இதுவே அஹிம்சையை உண்மையாகக்

கடைப்பிடிப்பதாகும். இதிலிருந்து வரும் ஒற்றுமை, உயிர்த்தத்துவம் நிறைந்த ஹிந்து முஸ்லிம் ஒற்றுமை யாகும்; இது, ஹிட்லருக்கும் முசோலினிக்கு மிடையில் ஏற்பட்டுள்ள ஒப்பந்தத்தைப்போல, பரஸ்பர முள்ள பயத்தின் பயனாக வந்த ஒற்றுமையன்று.

ஹரிஜன், 7-5-1938

க0

சமய போதனை

சென்றமுறை நமது மாகாணங்களில் காங்கிரஸ் மந்திரி சபை அதிகாரத்திலிருந்தபோது, சர்க்கார் கல்வியதிகாரிகள் சிலர் புதிய கல்விமுறைப் பயிற்சிக்காக வர்தா வந்திருந்தார்கள். ஹிந்துஸ்தானி தாலிமி சங்கமானது, வர்தா திட்டப்படிக்கான புதிய கல்வி முறையை மாகாணங்களில் அமுலுக்குக் கொண்டு வருவதில் இந்தக் கல்வி அதிகாரிகளுக்கு ஒரு பயிற்சி வகுப்பு ஏற்பாடு செய்திருந்தது. இவர்கள் சேவா கிராமத்தில் 1938-ஆம் வருஷம் ஜூன் மாதம் காந்தியடிகளை இருமுறை சந்தித்துத் தங்களுக்கிருந்த ஐயங்களையும் கஷ்டங்களையும் தெரிவித்துக்கொண்டார்கள்.

இவர்களுடைய பிரசினைகளில் முக்கியமானது வர்தாக் கல்வித் திட்டப்படி சமயபோதனைக்கு என்ன இடமுண்டு என்பதாகும். காந்தியடிகள் இதற்குப் பின் வருமாறு மறுமொழி கூறினார்:

சமய போதனையும் சமயானுஷ்டானமும் இன்றுள்ள முறையில் ஒற்றுமையை வளர்க்காமல் சச்சரவுகளுக்கே இடந் தருகின்றன என்று நாங்கள் நினைக்கிறோம். ஆகவேதான், வர்தாக் கல்வித் திட்டத்தில் சமயங்களைப் பற்றிய பயிற்சியைச் சேர்க்கவில்லை. ஆனால், எல்லாச் சமயத்துக்கும் பொதுவான உண்மைகளை எல்லாக் குழந்தைகளுக்கும் எளிதில் கற்பிக்க முடியும்; கற்பிக்கத்தான் வேண்டுமென்று நான் கருதுகிறேன். இந்தச் சமய உண்மைகளை வாய்மொழி மூலமாகவோ புத்தகங்கள் மூலமாகவோ போதிக்க வியலாது. ஆசிரியருடைய தினசரி வாழ்க்கையிலிருந்து தான் குழந்தைகள் இவற்றைக் கற்க முடியும். சத்தியத்தையும் தருமத்தையும் கடைப்பிடித்து ஆசிரியர் வாழ்க்கை நடத்துவாரானால், அப்போதுதான் சத்தியமும் தருமமுமே எல்லாச் சமயங்களுக்கும் ஆதாரம் என்பதைக் குழந்தைகள் காண்பார்கள்.

ஏழுமுதல் பதினான்கு வயதுக்குட்பட்ட குழந்தைகளுக்கு எல்லாச் சமயங்களிடத்திலும் ஓரே விதமான மரியாதையைக் காட்டும்படிக் கற்பிக்க முடியுமா என்று கேட்கிறீர்கள், முடியுமென்றே நினைக்கிறேன்; எல்லாச் சமயங்களும் முக்கிய தத்துவங்களைப் பொறுத்த வரையில் ஒன்றே என்பதும், நம்முடைய சமயத்தில் நமக்கு எவ்வளவு பக்தியிருக்கிறதோ அதே அளவு பக்தியுடனும் சிரத்தையுடனும் மற்றவர்களுடைய சமயத்தையும் நாம் போற்ற வேண்டுமென்பதும், எளிதில் உணரத்தக்க உண்மைகள். ஏழு வயதுக் குழந்தைகள்கூட இவற்றை நன்றாய்ப் புரிந்துகொண்டு வாழ்க்கையில் இதே விதம் நடக்க

முடியும். ஆனால், இதற்கெல்லாம் முன்னதாக, இந்தப் பக்தியும் சிரத்தையும் ஆசிரியருக்குத்தான் இருக்க வேண்டும்.

கக

கல்வியைத் தொழிலுடன் இயைபுபடுத்தல்

இந்தப் புதிய கல்வி முறையானது தொழிலேயும் கல்வியையும் ஒன்று படுத்தியதாகும். இந்தக் கல்வி முறை தமது உள்ளத்தில் எவ்விதம் உதித்து உருக் கொண்டது என்பதைக் காந்தியடிகள் பலமுறை எடுத்துச் சொல்லியிருக்கிறார் :

தென்னுப்பிரிக்காவிலிருந்து நான் திரும்பி வந்த பிறகு, நம் நாட்டு மாணுக்கர் பலர் என்னைப் பார்க்க வந்தார்கள். அவர்களோடு பேசியதன் பயனுய் இன்றுள்ள கல்விமுறை எவ்வளவு பயனற்றது என்ற எண்ணம் என் மனத்தில் தோன்றலாயிற்று. இது காரணமாக, இக் கல்வி முறையை மாற்றிப் புதிய தொரு முறையை வகுப்பது அவசியமென்று நான் நெடுங்காலம் எண்ணியிருந்தேன். ஆகவே, ஆசிரமப் பாடசாலேயில் பிள்ளேகளுக்குக் கைத்தொழிற் பயிற்சி யளிக்கும் முறையைத் தொடங்கினேன். உண்மையில், கைத்தொழிற்பயிற்சி மிகவும் அவசியமென்று அதிகப் படியாகவே வற்புறுத்தி வந்தோம். இதனுல், அங்கிருந்த பிள்ளேகள் இப்பயிற்சியில் சீக்கிரம் சோர் வடைந்துபோய், தங்களுக்கு எழுத்தறிவு சிறப்பாய்க்

கிடைக்கவில்லை யென்று எண்ணலானார்கள். அப்படி அவர்கள் எண்ணியது தவறு; ஏனெனில், வழக்கமாயுள்ள பள்ளிக்கூடங்களில் படித்த பிள்ளைகளுக்குக் கிடைத்த அறிவைவிட இந்தப் பிள்ளைகள் பெற்ற கொஞ்ச அறிவும் அதிகந்தான். ஆயினும், அவர்கள் எண்ணியது என்னைச் சிந்திக்கச் செய்தது; 'கல்வியென்பது தொழிலறிவு, எழுத்தறிவு என்ற இரண்டும் ஏற்படுவதன்று, தொழிற்பயிற்சி மூலமாகவே எழுத்தறிவு பிறப்பதுதான் கல்வி' என்ற முடிவுக்கு வந்தேன். இந்தக் கல்வி ஏற்படுமானால், தொழிற்பயிற்சி மனத்துக்குப் பிடிக்காத வேலையென்று சொல்வது நின்றுபோகும். எழுத்தறிவு என்பது புதிய அர்த்த புஷ்டியும் புதிய பயனும் உடையதாகும். காங்கிரசானது மந்திரிசபை அமைத்தவுடனே, எனது கருத்தை எல்லோருக்கும் அறிவிக்கவேண்டும் என்ற எண்ணமும் எழுந்தது. பல்வேறு வகையான மக்கள் அதை ஏற்றுக்கொண்டது பற்றி எனக்கு மிக்க மகிழ்ச்சி.

ஆங்கில மொழியைப் படிப்பதில் நமது பிள்ளைகள் சொற்களையும் தொடர்களையும் ஞாபகம் வைத்திருக்கப் பயில்வதிலேயே காலம் முழுமையும் செலவழிக்க நேர்கிறது. இப்படிச் செலவழித்த பிறகுங்கூட, தாங்கள் கற்றதைத் தங்கள் சொந்தச் சொற்களால் சொல்ல அவர்களுக்கு வருவதில்லை; ஆசிரியர் கற்பித்தவற்றையுங்கூட ஒழுங்காய்த் தெரிந்துகொள்ள முடிவதில்லை. இதை நாங்கள் நன்றாக உணர்ந்தபடியால்தான், ஆங்கில மொழியைக்கற்பதே வேண்டாம் என்று இந்தக் கல்வி முறையில் அதை

விலக்கிவிட்டோம். ஆங்கிலம் படித்த பிள்ளைகள் தங்கள் தாய் மொழியைக் கவனித்துப் படிக்காமையால், அதை மறந்தேவிட்டார்களென்று சொல்லலாம். ஆகவே, இந்த இரண்டுவிதத் தீமையையும் போக்குவதற்கு, தொழில்மூலம் கல்விப் பயிற்சி தருவதே தக்க வழியாக எங்களுக்குத் தோற்றிற்று.

முதல் நாள், படிக்க வரும் பையன்களுடைய திறமை என்னவென்பதை அறிய முயல்வதுதான் என் வேலை. அவர்களுக்கு எழுதப் படிக்கத் தெரியுமா, பூகோள அறிவு உண்டா என்பதைக் கவனித்தபின் அவர்கள் கையில் தக்ளி கொடுத்து நூற்கச் செய்து, அவர்களுக்குள்ள அறிவைப் பெருக்கவேண்டும்.

எத்தனையோ கைத்தொழில்கள் இப்போது வழக்கத்திலிருக்கையில், தக்ளியை முதல் முதலில் ஆரம்பிப்பானேன் என்று கேட்கலாம். இதற்கு விடை எளிது. மக்களினம் முதல் முதலாகக் கற்ற தொழில்களில் தக்ளி நூற்பதும் ஒன்று; எவ்வளவோ காலமாகியும், அது இன்னும் உபயோகத்திலிருந்து வருகிறது. மக்கள் உடை செய்யக் கற்றுக்கொண்ட ஆதி நாளில், நாம் உடுத்தும் துணியெல்லாம் தக்ளி நூலால்தான் நெய்துகொண்டோம். கொஞ்சகாலம் சென்றபின்னர்தான் ராட்டை தோன்றிற்று. மிகநுண்மையான (உயர்ந்த நம்பருள்ள) நூலை ராட்டையில் நூற்கமுடியாது; இதற்குத் தக்ளிதான் வேண்டும். தக்ளியை முதல்முதலாக அமைத்தபோது, மனிதனுக்குள்ள சிருஷ்டித் திறன், அதற்கு முன் ஒரு காலத்திலும் இராத அளவு அரிய வேலையைச் செய்திருக்

கிறது. கைவிரல்களின் சாமர்த்தியமெல்லாம் தக்கிளியில்தான் மிகச் சிறந்த பயன் விளைவிக்க உபயோகமாகிறது. ஆனால், அக்காலத்தில் தக்கிளியானது சில கைவினைஞர்களிடையே மட்டும் உபயோகத்திலிருந்தது. அவர்களுக்குக் கல்வியறிவே இல்லையாதலால், நாளடைவில் தக்கிளியின் உபயோகம் குறைந்து விட்டது. இன்று தக்கிளியின் பண்டைச் சிறப்பெல்லாம் பொருந்துமாறு அதற்குப் புத்துயிர் தரவேண்டுமானால், நாட்டுப்புற வாழ்வுக்குப் புத்துயிர் அளித்து அதைத் திருத்தியமைக்க வேண்டுமானால், முதலாவதாக நமது குழந்தைகளுக்குத் தக்கிளி மூலமாய்க் கல்வி பயிற்றத் தொடங்கவேண்டும்.

நான் கற்பிக்கும் அடுத்த பாடம், முற்காலத்தில் நமது தினசரி வாழ்க்கையில் தக்கிளி என்ன அங்கம் வகித்தது என்பதாகும்; இந்த அங்கம் நம் பிள்ளைகள் வாழ்க்கையிலும் தக்கிளி இன்று பெறவேண்டும். அடுத்தபடியாக, தக்கிளியின் உபயோகம் எப்படிக் குன்றிவிட்டதென்று சொல்லி, சரித்திரமும் அவர்களுக்குக் கற்பிக்கலாம். இந்திய சரித்திரத்தைக் கிழக்கிந்திய ஆங்கிலேய வர்த்தகக் கூட்டத்தார் இந்தியாவுக்கு வந்தது முதலாவது, அல்லது அதற்கு முன் முகம்மதியர் ஆட்சி ஏற்பட்டது முதலாவது தொடங்கி அவர்களுக்குக் கற்பிக்கலாம்; ஆங்கிலேயக் கம்பெனியார் எப்படி நம் நாட்டுத் தொழில்களை யெல்லாம் பறிப்பதே தங்கள் முக்கிய வியாபாரமாகக் கொண்டார்களென்பதையும், எப்படி நமது புராதனக் கைத்தொழிலாகிய நூற்றல் தொழிலை முறையாகத் திட்டம் வகுத்து நசுக்கி அழித்துவிட்டார்கள் என்பதையும் விவரமாய்ப் போதிக்கலாம்.

இதன் பின் சுருக்கமாக யந்திர சாஸ்திரம், அதாவது தக்கிளி செய்யும் முறை வரும். ஆரம்பத்தில் தக்கிளி எப்படிச் செய்திருப்பார்களென்று யோசித்துப் பார்த்தால், களிமண்ணாலோ அல்லது ஈர மாவினாலோ ஓர் உருண்டை செய்து, அதற்குள் செங்குத்தாக ஒரு சிறு மூங்கிற் குச்சியைச் செருகி வைத்திருப்பார்களென்று யூகிக்கலாம். இந்த முறையில் செய்த தக்கிளிகள் வங்காளத்திலும் பீகாரிலும் சில பகுதிகளில் இன்னும் இருக்கின்றன. களிமண்ணுக்குப் பிறகு ஒரு வட்டமான கல் உபயோகத்துக்கு வந்திருக்கும். (மாக்கல் வைத்த தக்கிளியைத் தமிழ் நாட்டில் இன்றுங்கூட உபயோகிப்பதைக் காணலாம்.) கல்லுக்குப்பிறகு, இக்காலத்தில் இருப்புவட்டு, எஃகு, பித்தளை முதலியனவும், மூங்கில் குச்சிக்குப் பதிலாக இருப்புக் கம்பியும் வழங்குகின்றன. இவ்வளவு சொன்னபிறகுங்கூட, பிள்ளைகளுக்கு வட்டின் அளவு, கம்பியின் நீளம், பருமன் முதலியவற்றை விவரித்து, இவை ஏன் அதிகமாகவோ, குறைவாகவோ இருத்தலாகாது என்பதையும் போதிப்பது பயனுடையதாயிருக்கும்.

இதற்கடுத்தபடி, பஞ்சைப்பற்றிச் சில பாடங்கள் நடத்தலாம். பருத்தி என்ன மண்ணில் விளைகிறது, இந்தியாவில் இப்போது எங்கெந்த மாகாணங்களில் விளைகிறது. எத்தனைவிதப் பருத்தி விளைகிறது என்றெல்லாம் சொல்லலாம். பருத்தியைப் பயிரிடும் முறை, அதற்கேற்ற மண்ணின் அமைப்பு முதலிய பாடங்களையெல்லாம் சொல்லிக்கொண்டு போனால், விவசாயப் பாடத்துக்கே போய்விடுகிறோம்.

இவ்வளவு செய்திகளையும் ஆசிரியர் பிள்ளைகளுக்கு கற்பிப்பதென்றால், அவர் எவ்வளவோ விரிந்த அறிவு பெற்றிருக்க வேண்டுமென்பது விளங்கும். நூற்ற நூல் எவ்வளவு நீளம் என்று கணக்கிடுவது, நூலின் நம்பர் என்ன என்று அறிவது, சிட்டம் போடுவது, சிட்டங்களைத் தறிகாரருக்குக் கணக்குப் பண்ணித் தருவது, துணியின் நயத்துக்கு ஏற்றவாறு ஊடுக்கும் பாவுக்கும் எத்தனை இழை போட வேண்டுமென்று கணக்கிடுவது முதலான வேலைகளின் மூலமாய்ச் சாதாரணக் கணித சாஸ்திரம் முழுமையும் கற்பிக்க முடியும். பருத்தி எடுத்தல், அரைத்தல், பஞ்சு வெட்டுதல், நூற்றல், பாவு ஆற்றுதல், நெய்தல் முதலாக, செடி பயிரிடுவதில் தொடங்கித் துணியாக நெய்து தருவது வரையுள்ள எல்லா வேலை முறைகளும், தங்கள் தங்களுக்குரிய சரித்திரம், கணித சாஸ்திரம், இயந்திர சாஸ்திரம் முதலிய பாடங்களை இயைபு படுத்திக் கற்பிக்க இடந் தரும்.

இந்தக் கல்வி முறையின் பிரதான நோக்கமானது, குழந்தைகளுக்குப் பயிற்றும் கைத்தொழில் மூலமாக, அவர்களின் உடலுக்கும் உள்ளத்துக்கும் உயிருக்குமே பூர்ணமான பயிற்சி தருவதாகும். குறித்த கைத்தொழிலின் அங்கமான தொழில் முறைகள் பலவற்றையும் கற்பிக்கும்போது, அதன் மூலமாய்க் குழந்தையிடமுள்ள திறன் அனைத்தையும் மலர்ந்து விளக்கம் பெறும்படி செய்ய வேண்டும்; இதன் பொருட்டு, சரித்திரம், பூகோளம், கணிதம் முதலான பாடங்களை இத்தொழிலோடு இயைபு படுத்தியே போதிக்கவேண்டும்.

இவ்விதம் கல்வி போதித்தால், இதன் நேரடியான பலன், இதற்காகும் செலவை இக்கல்வி முறையே வகித்துக்கொள்ளும் என்பதாகும். ஆனால், இந்தக் கல்வி முறையின் வெற்றியை, தன் செலவை இது சரிக்கட்டிக் கொண்டதா என்பதை வைத்து முடிவுசெய்தல் சரியாகாது; குறித்த கைத்தொழிலைச் சாஸ்திரீய முறையில் கற்பித்ததன் பயனாய், குழந்தையின் திறன் முழுமையும் வெளிப்பட்டுப் பொலிவு பெறுகிறதா என்று பார்ப்பதே பொருத்தமாகும். வாஸ்தவத்தில், எந்தச் சந்தர்ப்பத்திலும் இந்தக் கல்வி முறை தன் செலவைத் தானே சரிக்கட்டிக் கொள்ளும்படிச் செய்து விடுகிறேன் என்று ஓர் ஆசிரியர் முன்வந்தால், அவரை நான் ஏற்றுக்கொள்ள மாட்டேன்; ஏனெனில், மாணவன் தனக்குள்ள ஒவ்வொரு சக்தியையும் நன்றாய் உபயோகிக்கக் கற்றுக்கொள்வது முதல் அம்சம்; இதன் பயனாய் விளைவதுதான், செலவைச் சரிக்கட்டுவதாகிய இரண்டாவது அம்சம். தினம் மூன்று மணி நேரம் ஒரு பையன் ஒரு கைத்தொழிலைச் செய்துவந்தால், தன்னைக் கவனித்துக் கொள்பவருக்கு உரிய சம்பளத்தை அவன் சம்பாதித்து விடுகிறான். அப்படியானால், அந்தக் கைத்தொழில் செய்வதோடுகூட, தன் உள்ளத்தையும் உயிரையும் ஒருங்கே வளர்க்கிற பையன், எவ்வளவு தான் சம்பாதித்தவன் ஆக மாட்டான்?

ஹரிஜன், 11-6-1938

கஉ

உயர்தரக் கல்வி—௩

உயர்தரக் கல்வி பற்றிச் சுருக்கமாகவும் சிறிது அச்சத்துடனும் சிலநாளைக்கு முன் நான் வெளியிட்ட கருத்துக்களை மகாகனம் சீனிவாச சாஸ்திரியவர்கள் ஆராய்ந்து சில குறைகளை எடுத்துக் காட்டுகிறார். எனது கருத்துக்களை முன்னிலும் விரிவாக மீண்டும் இங்குக் கூறுவது எனது கடமை; அவருடைய அபிப்பிராயத்துக்கும் என் கருத்துக்குமுள்ள வேற்றுமையை வாசகரே அறிந்துகொள்ளலாம்.

சர்வகலாசாலைப் பட்டத்துக்கு நான் படித்திராவிட்டாலுங்கூட, பொதுவாய்க் கல்வி பற்றியும், சிறப்பாக உயர்தரக் கல்வி என்று வழங்கும் கல்வி பற்றியும், எனக்கு உறுதியான சில அபிப்பிராயங்கள் உள்ளன. இவற்றை நம்மவர் அறியும்படித் தெளிவாகச் சொல்லவேண்டும்; அவர்கள் ஏற்றுக்கொள்வதானல் ஏற்றுக்கொள்ளட்டும். என் எண்ணத்தை வெளிப்படுத்தாமல் அடக்கி வைப்பதற்குக் காரணமாயிருந்த அச்சத்தை நான் அகற்றவேண்டும். இகழ்ச்சியையோ, நல்ல பெயரை அல்லது கௌரவத்தை இழப்பதையோ, நான் பொருட்படுத்தலாகாது. உறுதியாக நான் நம்புவதை ஒளித்தேனுனல், என் முடிவுகளில் பிழையிருந்தால் ஒருபோதும் திருத்திக்கொள்ள வழியிராது; பிழைகளை அறிவதில் எப்போதும் எனக்கு ஆர்வமுண்டு; அவற்றைத் திருத்திக்கொள்வதில் அதைவிட ஆர்வம் அதிகமுண்டு.

பல வருஷங்களாய்க் கல்வி சம்பந்தமாய் நான் கொண்டிருந்த முடிவுகளை இங்கே கூறுகிறேன்; இவற்றைச் சந்தர்ப்பம் நேர்ந்தபோதெல்லாம் வலியுறுத்தி வந்திருக்கிறேன்.

க. கல்விக்கு நான் விரோதியல்ல; உலகத்தில் பெறக்கூடிய கல்வியில் எவ்வளவு உயர்ந்த கல்வியானாலும் நான் வேண்டாமென்று சொல்லவில்லை.

உ. கல்வியால் திட்டமான பயனுண்டு என்றால், அதற்காகும் செலவை அரசாங்கம் ஏற்கவேண்டும்.

ந. அரசாங்கத்தின் பொது வருவாயிலிருந்து உயர்தரக் கல்வி முழுமைக்கும் செலவு செய்வது கூடாதென்பது என் கருத்து.

ச. நமது கல்லூரிகளில் விஞ்ஞானப் பாடமல்லாத மற்றப் பாடங்களை போதிப்பதாகப் பெயர் பண்ணுகிறார்கள். இந்தக் கல்வி யவ்வளவும் வீண் என்பது எனது உறுதியான எண்ணம்; இக் கல்வியால். படித்தவர்களிடையே வேலையில்லாத் திண்டாட்டந்தான் பெருகிவிட்டது. இதுபோக, இந்தக் கல்லூரிகளில் சேர்ந்து நசுங்கிப் பிழிபட்ட நமது பிள்ளைகள் பெண்கள் ஆகிய எல்லோருடைய உடல் நலமும் உள்ளத்தின் நலமும் அடியோடு போய் விட்டது.

ரு. இந்தியாவில் இந்த உயர்தரக் கல்வியை அன்னிய மொழியாகிய ஆங்கிலம் மூலமாகத்தான்

மாணவர் கற்கிறார்கள். இந்த முறை, அறிவையும் ஒழுக்கத்தையும் பொறுத்த வரையில், தேசத்துக்கே அளவிடமுடியாத திங்கு செய்துவிட்டது. விளைந்த திங்கு எவ்வளவு அதிகம் என்பதை, இதே காலத்தில் வாழ்கிற நாம் சரியாகக் கணித்தறிய முடியாது. இக் கல்வி பயின்றவர்களே இதனால் துன்புற்றவர்கள்; இவர்களையே நியாயவாதிகளாக இருந்து துன்பத்தை அளவிடச் சொல்வது முடியாத காரியம்.

இவை என் முடிவுகள்; இம்முடிவுகளுக்கு நான் காரணம் காட்டவேண்டும். இதன் பொருட்டு எனது சொந்த அனுபவத்திலிருந்து சில உதாரணங்களைச் சொன்னால் போதும்.

பன்னிரண்டு வயதுவரையில் நான் கற்றதெல்லாம் என் தாய்மொழியான குஜராத்திமொழி மூலமாகவே கற்றேன். அப்போது கணிதம், சரித்திரம், பூகோளம் ஆகிய பாடங்கள் எனக்குச் சொற்பம் தெரியும். இதன் பிறகு ஓர் உயர்தரக் கலாசாலையில் போய்ச் சேர்ந்தேன். அங்கும் முதல் மூன்று வருஷம் வரையில் தாய்மொழி மூலமாய்த்தான் கல்வி கற்பித்தார்கள். ஆயினும், அங்கிருந்த உபாத்தியாயருடைய வேலை, பிள்ளையின் மூளைக்குள் ஆங்கிலத்தைப் புகுத்த முயல்வதுதான். ஆகவே, எங்கள் நேரத்தில் பாதிக்குமேல் ஆங்கிலம் கற்பதிலேயே செலவிட வேண்டியிருந்தது; ஆங்கில மொழியின் சொற்களை எழுத்துக் கூட்டுவதிலும், எழுத்துக்களை விசித்திரமாகக் கூட்டி உச்சரிக்கக் கற்பதிலும், காலமெல்லாம் கழிந்தது; எழுத்துக்களை

எழுதிய முறைக் கிணங்க உச்சரிக்க முடியாத ஒரு பாஷையைக் கற்பது, மிகவும் கஷ்டமான அனுபவமாயிருந்தது.

மேலும், சொற்களிலுள்ள எழுத்துக்களைக் கூட்டி மனப்பாடம் பண்ணுவது, இன்னும் விசித்திரமான அனுபவம். இதெப்படியோ போகட்டும்; முதல் மூன்று வருஷங்கள் பிந்திய வருஷப் படிப்பைப் பார்க்க, எவ்வளவோ கஷ்டமின்றிக் கழிந்தன.

ஹிம்சையெல்லாம் நான்காம் வருஷத்தில் தொடங்கிற்று. எல்லாப் பாடங்களும் ஆங்கிலத்தில் கற்கவேண்டியதாயிற்று. வடிவ கணிதம், இயல் கணிதம், இரசாயனம், வான சாஸ்திரம், சரித்திரம், பூகோளம் ஆகிய எல்லாம் ஆங்கிலத்தில்தான். சம்ஸ்கிருதமோ, பாரசீக மொழியோ கற்கவேண்டியிருந்தாலும், தாய்மொழியில் கற்க வழியில்லை. ஆங்கிலம் மூலமாய்த்தான் கற்க வேண்டுமென்றால். ஆங்கிலத்தின் கொடுங்கோன்மை எவ்வளவு அதிகமென்பதை உணரலாம். வகுப்பில் யாரேனுமொரு பையன் தனக்கு நன்றாய்ப் புரிவதான குஜராத்தி மொழியில் பேசினால், அவனுக்குத் தண்டனை கிடைக்கும். ஆனால், ஆங்கிலத்தைச் சரியாக உச்சரிக்கவும், புரிந்து கொள்ளவும் முடியாமல், தப்பாகப் பேசி அம்மொழியைக் கொலை பண்ணினாலுங்கூட, உபாத்தியாயருக்குக் கவலையில்லை அவர் ஏன், பாவம், கவலைப்படவேண்டும்? அவர் பேசுகிற ஆங்கிலமும் இதே கணக்குத்தான். அதிலும் எத்தனையோ தவறுகள். வேறெப்படி யிருக்க முடியும்? ஆங்கில மொழி

பிள்ளைகளுக்கு எப்படி அன்னியமொழியோ, அப்படித் தான் அவருக்கும். இதன் பயன், ஒரே குழப்பந்தான். பிள்ளைகளாகிய நாங்கள் அனேக விஷயங்களை மனப் பாடம் பண்ணவேண்டி யிருந்தது; ஆனால், மனப் பாடம் பண்ணிய ஒன்றின் பொருளையுங்கூட முழு மையும் நாங்கள் உணர்ந்ததில்லை; சில சமயம் பொருள் கொஞ்சங்கூட எங்களுக்குத் தெரியாது. வகுப்பில் உபாத்தியாயர் எங்களுக்கு வடிவ கணிதத்தை எடுத்து விளக்கிக் கொண்டிருப்பார். எனக்கோ மூளையில் ஒன்றும் ஏறாமல் தலை கிறுகிறுக் கும். வடிவ கணித விற்பன்னரான யூக்ளிட் என்பர் எழுதிய நூலில் பதின்மூன்றாம் பாடத்துக்கு வருகிற வரையில், வடிவ கணிதமென்றால் ஓர் அக்ஷரம் கூட எனக்கு விளங்கியதில்லை. அதுமட்டுமன்று: இன்று வரையிலுங்கூட, வடிவ கணிதம், இயல் கணிதம் முதலியவற்றிலுள்ள கலைச் சொற்களுக்கு நேரான குஜராத்திச் சொற்கள் என்ன என்பது எனக்குத் தெரியாது: என் தாய்மொழியினிடத்து எனக்கும் எவ்வளவோ பற்றுதல் இருக்கத்தான் செய்கிறது. அக்காலத்தில் கணித சாஸ்திரம், வடிவ கணிதம், இயல் கணிதம், இரசாயனம், வானசாஸ்திரம் ஆகிய வற்றை நான்கு வருஷம் படித்து நான் கற்றுக் கொண்டதவ்வளவும், ஆங்கிலமொழியை விட்டுவிட்டு குஜராத்தி மொழியில் கற்றிருந்தேனானால், ஒரே வருஷத்தில் கற்றிருக்கலாம் என்று இப்போது எனக்குத் தெரிகிறது. இதனால், இந்தப் பாட விஷயங்கள் பற்றிய உணர்ச்சியும்; எனக்கு எளிதாக வும் தெளிவாகவும் ஏற்பட்டிருக்கும்; குஜராத்தி மொழி வளமும் எனக்குப் பெருகியிருக்கும். பாடசாலை

யில் நான் பெற்ற அறிவை வீட்டிலும் உபயோகித் திருக்க முடியும், வீட்டிலுள்ளவர்கள் ஆங்கிலப் பள்ளிக்கூடம் போனதில்லை. ஆதலால், எனக்கும் என் குடும்பத்திலுள்ள மற்றவர்களுக்கு மிடையே நீக்கமுடியாத ஒரு வேற்றுமை வந்து குடிகொண்டது. நான் என்ன படிக்கிறேன் எழுதுகிறேன் செய்கிறேன் என்பதொன்றும் என் தந்தைக்குத் தெரியாது. தவிர, நான் கற்ற விஷயங்களில் என் தந்தைக்கும் ஆர்வ மூட்ட நான் ஆசைப்பட்டபோதிலுங்கூட, அது பயன்படாது. ஏனெனில், அவருக்குப் புத்தி கூர்மை யொன்றும் குறைவில்லாதபோதிலும், ஆங்கிலம் ஓரக்ஷரம் தெரியாது. இவ்விதமாக, என் வீட்டிலேயே மற்றவர்களோடு தொடர்பு கொள்ள முடியாமல், நான் விரைவில் ஓர் அன்னியன்போல ஆகி வந்தேன். மற்றோரைவிட நான் பெரியவனென்ற எண்ணம் பெருகிற்று. என்னையறியாமல் என் உடைகளும் மாறி வந்தன. இவ்விதமாக எனக்கு ஏற்பட்ட அனுபவம் அசாதாரணமன்று. ஆங்கிலம் படித்தவர்கள் எல்லோருக்குமே இந்த அனுபவம் உண்டு.

உயர்தரக் கலாசாலையில் நான் படித்த முதல் மூன்று வருஷங்களில் எனக்கிருந்த பொது அறிவு வளரவில்லை. அந்தக் காலம், ஆங்கிலமொழி மூலமாய்ப் பிள்ளைகளுக்கு எல்லாப் பாடங்களையும் போதிக்கும பொருட்டு அவர்களைப் பக்குவப்படுத்தியகாலமென்று சொல்லலாம். ஆங்கில நாகரிக வெற்றி ஏற்படுவதற் கான பள்ளிக்கூடங்களே இந்த உயர்தரக் கலா சாலைகள். எனது கலாசாலையில் படித்த சுமார் முந்நூறு பிள்ளைகளும் பெற்ற அறிவானது, அவர்களுக்

குள்ளேயே வழங்கிய ஒரு சரக்கு; பாமர மக்களுக்கு அதை விநியோகிப்பது என்பது நடக்கவேநடக்காது.

இலக்கியத்தைப் பற்றி ஒரு வார்த்தை. ஆங்கில வசன புத்தகங்கள், செய்யுட் புத்தகங்கள் பல நாங்கள் படித்தோம். இந்தப் படிப்பெல்லாம் அழகாய்த்தானிருந்தது. ஆனால், பாமர மக்களுக்குச் சேவைசெய்வதற்கோ, அவர்களோடு நெருங்கிப் பழகுவதற்கோ, அந்தப் படிப்பு எனக்குச் சிறிதும் பயன்படவில்லை. ஆங்கில வசனமும் கவிதையும் பெரிய கலைப் பொக்கிஷங்களென்று சொல்வார்கள். அவற்றை நான் கற்றிராவிட்டால், பெரிய பொக்கிஷங்களை இழந்திருப்பேனென்று நான் கருதமாட்டேன். அவற்றுக்குப் பதிலாக, கிடைத்தற்கரிய அந்த ஏழு வருஷ காலத்தையும் குஜராத்தி மொழியில் புலமை பெறுவதற்கும், குஜராத்தி மொழி மூலமாய்க் கணிதம், விஞ்ஞானம், சம்ஸ்கிருதம் முதலான பாடங்களைக் கற்பதற்கும் உபயோகித்திருந்தேனானால், அவ்விதம் நான் பெற்ற அறிவையெல்லாம் என்னைச் சுற்றியுள்ளவர்களுக்கும் பகிர்ந்து கொடுத்திருக்க முடியும். குஜராத்தி மொழியும் என்னால் வளம்பட்டிருக்கும். தொடர்ந்து உழைக்கும் பழக்கமும், தாய் நாட்டினிடத்தும், தாய் மொழியினிடத்தும் அளவற்ற அன்பும் என்னிடம் உள்ளன. இவற்றைக்கொண்டு பாமர மக்களுக்குச் சேவை செய்வதில் எவ்வளவு வளமான பங்கு நானும் எடுத்திருப்பேனென்பதை யாரே சொல்ல முடியும்?

ஆங்கிலத்தையோ, அதனுடைய உன்னதமான இலக்கியத்தையோ, நான் குறைத்துக் கூறுகிறே

னென்று யாரும் எண்ணக்கூடாது. ஆங்கிலத்தினிடம் எனக்கு அன்புண்டு என்பதற்கு, இந்த ஹரிஜன் பத்திரிகையை நான் ஆங்கிலத்தில் நடத்துவதே போதிய சான்றாகும். எனினும், ஆங்கிலமொழி இலக்கியத்தின் மேன்மையெல்லாம் இந்திய மக்கள் அனைவரும் பயன்படுத்திக்கொள்ள முடியாது. இங்கிலாந்து தேசத்தின் மிதமான சீதோஷ்ண நிலையையோ அங்குள்ள இயற்கைக் காட்சியின் அழகையோ இந்தியா எப்படி அனுபவிக்க முடியாதோ, அது போலத்தான் இதுவும். இந்தியா தனது சீதோஷ்ண நிலையையும் தனது இயற்கையழகையும் தன் சொந்த இலக்கியத்தையுமே அனுபவித்துப் பயன்பெற முடியும்; இவை முறையே, இங்கிலாந்தின் சீதோஷ்ண நிலைக்கும், இயற்கைக் காட்சிக்கும், இலக்கியத்துக்கும் குறைவாயிருந்ததனால் ஒன்றும் குடிமுழுகிப் போய் விடாது. நாமும் நமது குழந்தைகளும், நமது சொந்தப் பரம்பரைச் சொத்தை வைத்தே மேலும் மேலும் பெருகவேண்டும். மற்றவர்களுக்கு உரியதை நாம் கடன் வாங்கினால், நமக்குரிய செல்வம் தானே குன்றிவிடுகிறது. அன்னிய உணவை உண்டு நாம் வளர்வது ஒருபோதும் முடியாது.

ஆங்கில மொழியில் உள்ள இலக்கியச் செல்வம் மட்டுமன்று, உலகத்திலுள்ள பிற மொழிகளில் அடங்கிய செல்வமெல்லாமும் நமக்கு வேண்டும்: ஆனால், இவை யாவும் நம் நாட்டிலுள்ள மொழிகள் மூலமாகவே நாம் பெறவேண்டும். ரவீந்திரநாதருடைய ஒப்பற்ற கவிதையின் அழகையெல்லாம் உணரும் பொருட்டு நான் வங்காளி கற்பது அவசிய

மில்லை. அவர் கவிதையை நல்ல மொழிபெயர்ப்புக்கள் மூலமாக நான் படித்து விடுகிறேன். டால்ஸ்டாய் எழுதிய சிறு கதைகளைப் படித்தறியும் பொருட்டு, குஜராத்திப் பிள்ளைகளும் பெண்களும் ருஷ்ய மொழி கற்கவேண்டியதில்லை. நல்ல மொழிபெயர்ப்பு நூல்கள் மூலமாக, அவர்கள் அக் கதைகளைப் படிக்கிறார்கள். உலகத்தின் பல பாகங்களிலும் உயர்ந்த இலக்கியச் செல்வம் என்னென்ன வெளிவருகின்றதோ, அவ் வளவும் வெளிவந்த ஒரு வாரத்துக்குள், எளிய ஆங்கிலமொழியில் மொழிபெயர்த்து ஆங்கில மக்கள் கையில் நூலாக வழங்குகின்றது என்று ஆங்கிலேயர் பெருமையுடன் கூறிக்கொள்கிறார்கள். ஷேக்ஸ்பியரும் மில்டனும் என்ன எழுதினார்கள், என்ன கருத்துக் களைச் சிந்தித்தார்கள் என்று அறிவதற்காக, நான் மட்டும் ஆங்கிலம் படிப்பது எந்த விதத்தில் நியாயம்?

இதற்கென்று ஆற்றல் வாய்ந்த மொழிவல்லார் சிலர் திறமையாக வேலை செய்வது, மற்றெல்லோ ருக்கும் மிக்க சிக்கனமும் நன்மையும் தரும். உலகத் தில் வழங்கும் பற்பல முக்கியமான பாஷைகளை இவர்கள் கற்று, அவற்றுள் சிறந்த நூல்களைப் படித் தறிந்து, நம் நாட்டில் வழங்கும் தாய்மொழிகளில் அந்நூல்களை மொழிபெயர்த்துத் தருவதே இவர்கள் செய்யவேண்டிய வேலையாகும். ஆனால், இன்றோ நம் எஜமானர்களாயிருக்கிற ஆங்கிலேயர், ஆங்கிலம் படிப்பதென்ற தப்பான வழியில் நம்மைச் செலுத்தி விட்டார்கள். அதனால், நெடுங்காலப் பழக்கத்தின் பயனாய், தப்பே நியாயமென்று நமக்குத் தோற்றுகிறது.

நம் இந்தியப் பண்பை அடியோடு போக்குகிற இந்தக் கல்வி முறையால், கோடிக்கணக்கான நம் மக்களுக்கு எவ்வளவு கேடு உண்டாகிறது, இன்னும் தொடர்ந்து பெருகிவருகிறது என்பதை நான் தினந் தோறும் கண்டு வருகிறேன். எனது மதிப்புக்குரிய தோழர்களாயுள்ளவர்களில், சர்வகலாசாலைப் பட்ட தாரிகளா யுள்ளவர்களுங்கூட, தங்கள் உள்ளத்தி லெழும் நுட்பமான கருத்துக்களை வெளியிடுவ தென்றால் தத்தளிக்கிறார்கள். தங்கள் சொந்த வீட்டில் அன்னியர்போல் ஒருவர் விழிப்பதை ஒத்திருக்கிறது, அவர்கள் தத்தளிப்பு. தாய்மொழியில் அவர்கள் வசமுள்ள சொல்வளம் மிகக் குறைவு; ஆதலால், ஆங்கில வார்த்தைகளையும் வாக்கியங்களையுங் கூடப் போட்டு நிரப்பாமல் அவர்களால் பேசவே முடியாது. இதுபோல, ஆங்கிலப் புத்தகங்களில்லாமல் இவர் களால் உயிர் வாழவும் முடியாது. ஆங்கிலத்தால் விளைந்த தீமை எவ்வளவு கொடியதென்பதைக் காட்டவே என் தோழர் நிலைமையை நான் இங்குக் குறிப்பிட்டேன். எங்களுடைய இந்த ஆங்கிலப் போக்கைத் திருத்திக்கொள்ள, புத்தி பூர்வமாக நாங்கள் எவ்வளவோ முயன்றிருக்கிறோம்.

நமது கல்லூரிகளில் இந்த விதமாக அளவற்ற சக்தியும் காலமும் வீண்போவது பற்றி, சிலர் ஒரு விதச் சமாதானம் சொல்வார்கள். இவ்வளவு வீண் போனாலுங்கூட, நமக்கிடையே ஜகதீச சந்திர போஸ் ஒருவர் தோன்றினால் போதும், நாம் கவலைப்பட வேண்டியதில்லை என்பது இவர்கள் கூற்று. இவ் விதம் வீணாவது தடுக்க முடியாததா யிருக்கும்

பட்சத்தில், இந்தக் கூற்றைத் தாராளமாய் நான் ஒப்புக்கொள்வேன். இது முன்பும் தடுக்க முடியாத தன்று, இப்போதும் தடுக்க முடியாததன்று என்பதை நான் தெளிவாய்க் காட்டியிருக்கிறேன். தவிர, போஸ் ஒருவர் இந்தப் பழைய கல்வி முறையால் உண்டானார் என்ற வாதம் எனது கருத்தைப் பாதிக்கவில்லை. ஏனெனில், இன்றைய கல்வி முறை காரணமாக அவர் உதிக்கவில்லை. ஒப் பற்ற தாவரநூல் விஞ்ஞானியாவதற்கு இந்தக் கல்வி முறையால் எவ்வளவோ தடைகள் அவருக்கு ஏற்பட் டிருந்தும், அவற்றையெல்லாம் கடந்தே அவர் இத்தகைய பேரறிஞரானார். ஆயினும், அவர் பெற்ற அறிவைப் பாமர மக்களுக்கு ஊட்ட முடியவில்லை. யாரும் ஆங்கிலம் அறியாவிட்டால், போஸ் போன்ற அறிஞர் ஆக முடியாதென்று நினைக்கும்படியான நிலைமைக்கு வந்துவிட்டோம். இதைவிடப் பெரிய மூடநம்பிக்கை வேறொன்றும் எனக்குத் தெரியவில்லை. ஆங்கிலமில்லாமல் என்ன செய்வது என்று நாம் செய லற்றுத் திகைக்கிற அளவு எந்த ஜப்பானியனும் திகைப்பதில்லை.

இதுவரையில் நான் விவரித்துவந்த இந்தக் கேடு மிக்க ஆழமாக வேரூன்றியிருக்கிறது. மிக்க துணிச்ச லோடு இதற்குப் பரிகாரம் தேட வேண்டும். காங்கிரஸ் மந்திரிகள் மனம் வைத்தால்; இந்தக் கேட்டை அடி யோடு போக்க முடியாவிட்டாலுங்கூட, குறைக்க வாவது செய்யலாம்.

சர்வகலாசாலைகள் தங்கள் செலவைத் தாங்களே வகித்துக் கொள்ளவேண்டும். அரசாங்கமானது யாருடைய சேவையைத் தான் பயன்படுத்திக்கொள்ள நேருமோ, அவர்களுக்குக் கல்வி பயிற்றுவது மட்டும் போதுமானது. கல்வியிலுள்ள பிற துறைகளெல்லாவற்றிலும், தனி மனிதர் அல்லது ஸ்தாபனங்கள் நடத்தி வருகிற பாடசாலை முதலான முயற்சிக்கு அரசாங்கம் ஆதரவளிக்கவேண்டும். கல்வி கற்பிக்கும் மொழி இன்று ஆங்கிலமாயிருப்பதை உடனே மாற்றவேண்டும். அந்தந்தப் பிரதேசத்தில் வழங்கும் தாய்மொழிக்குரிய நியாயமான ஸ்தானத்தை இப்போதே தரவேண்டும். இப்போது கல்வித் துறையில் நேரத்தாலும் சக்தியாலும் எவ்வளவோ நாள்தோறும் வீணாகிக்கொண்டு வருகிறது. இது மக்களுக்குப் பெரிய துரோகம். இந்த வீணுக்கும் துரோகத்திற்கும் பதிலாக, உயர்தரக் கல்வியில் சிறிதுகாலம் வெறும் குழப்பமாக இருந்தாலும் குற்றமில்லையென்றே நான் கருதுகிறேன்.

தாய்மொழிகளின் அந்தஸ்தை உயர்த்தும் பொருட்டும், தாய்மொழியில் பயின்றிருந்தால் உத்தியோகம் முதலியன தேட எவ்விதக் குறைவுமில்லை என்று மாணவர் முதலான எல்லோரும் எண்ணும்படி செய்யும்பொருட்டும், நமது நீதிமன்றங்கள் யாவும், அவை அமைந்துள்ள இடத்தில் என்ன மொழி வழங்குகிறதோ அந்த மொழியில்தான் நடைபெற வேண்டுமென்பது என் கருத்து. மாகாணச் சட்டசபைகளின் நடவடிக்கைகள் தாய்மொழியில்தான் நடைபெறவேண்டும். ஒரு மாகாணத்தில் பல மொழிகள்

வழங்கும் பட்சத்தில், இந்த நடவடிக்கைகள் அந்தப் பலமொழிகளிலும் இருக்கலாம். சட்டசபை அங்கத்தினர் ஆர்வத்தோடு முயல்வார்களானால், தங்கள் மாகாணத்தில் வழங்கும் எல்லா மொழிகளையும் ஒரே மாதத்துக்குள் கற்றுக்கொள்ள முடியும்; கற்றுக்கொள்ளவேண்டும் என்றுதான் நான் யோசனை கூறுகிறேன். தெலுங்கு, மலையாளம், கன்னடம் ஆகிய மொழிகள் தமிழுக்கு இனமானவை. இந்த மொழிகளின் இலக்கணத்தையும், இவற்றில் நூறு, இருநூறு வார்த்தைகளையும், தமிழரொருவர் மிக எளிதாய்க் கற்றுக்கொள்ள முடியும். மத்திய சட்ட சபையில் ஹிந்துஸ்தானி மொழியே ஆட்சி செலுத்த வேண்டும்.

இது வெறும் 'பண்டித கோஷ்டியால்' முடிவு செய்யப்பட வேண்டிய விஷயமன்று என்று நான் கருதுகிறேன். நம்முடைய குழந்தைகளுக்கு எந்த மொழி மூலமாய்க் கல்வி கற்பிப்பது என்பதை அவர்கள் நிர்ணயிக்க முடியாது. சுதந்திரமுள்ள எந்த நாட்டிலும் இது முன்னமேயே நிர்ணயிக்கப்பட்டிருக்கிறது; இது தாய்மொழிதான் என்பது சொல்ல வேண்டியதில்லை. என்ன பாடங்கள் கற்பிக்கவேண்டுமென்பதையும் அவர்கள் நிர்ணயிக்க முடியாது. நாட்டுக்கு என்ன தேவையுண்டோ, அதைப் பொறுத்தது தான் கற்பிக்கும் கல்வியும். மக்களுடைய ஆணையை மிகச் சிறந்த முறையில் நிறைவேற்றத் துணை செய்வதே பண்டிதர்களுடைய உரிமை. நமது நாடு உண்மையாகவே சுதந்திரம் அடையும்போது, எந்த மொழியில் கல்வி கற்பிப்பது என்ற கேள்விக்கு ஒரே ஒரு

விதமான முடிவுதான் உண்டு. பண்டிதர்கள் அந்த முடிவுக்கிணங்கப் பாடத் திட்டமும், பாடப் புத்தகங்களும் தயார் செய்வார்கள். இன்று நம் நாட்டில் கல்வி கற்று வளர்ந்தவர்கள் நம்மை ஆளும் அன்னியருக்கு வேண்டியதையெல்லாம் செய்துவருவதுபோல சுதந்திர இந்தியாவில் கல்வி கற்று வருபவர்கள் இந்தியாவுக்கு நன்மை தருவதையே செய்வார்கள். படித்த வகுப்பாராகிய நாம் இந்தக் கல்வி என்ற பிரசினையை வைத்து விளையாடிக் கொண்டிருக்கிற வரையில், நாம் கனவு காண்கிற சுதந்திரமான விழுப்பமுடைய இந்தியா உருவாகாது. கல்வித் துறையிலோ, பொருளாதாரத் துறையிலோ, சமூகத் துறையிலோ, அரசியல் துறையிலோ நமக்கு ஏற்பட்டுள்ளதளைகளை அறுத்துத் தீவிர முயற்சியினால்தான் நாம் வளர்ச்சி பெறவேண்டும். நாம் செய்யவேண்டிய போராட்டத்தில் இந்த முயற்சியே முக்கால் பங்காகும்.

ஆகவே, உயர்தரக் கல்விக்கு நான் விரோதியல்ல என்றே கூறுகிறேன்; ஆயினும் நாட்டில் இன்று கற்பிக்கும் உயர்தரக் கல்விக்கு நான் விரோதியென்பது நிச்சயம். எனது கல்வித் திட்டத்தின்படி, தேசத்தில் புத்தகசாலைகளும், விஞ்ஞான சோதனைச் சாலைகளும், உயர்தர ஆராய்ச்சிக் கழகங்களும் இன்றுள்ளவற்றினும் அதிகமாக இருக்கும்; இவற்றினும் திறமையாக வேலை செய்யும். அத்திட்டத்தின்படி நம்மிடத்தில் இரசாயன நிபுணர்களும், என்ஜினியர்களும், பிறவகை நிபுணர்களும் பெரும் படையாகத் திரண்டிருப்பார்கள். இவர்கள் மக்கட் சமுதாயத்தின்

உண்மையான ஊழியராயிருந்து மக்களுக்கு என்னென்ன தேவையோ அதையெல்லாம் நிறைவேற்றித் தருவார்கள்; மக்களும், முன்னைப் பார்க்கிலும் தங்கள் உரிமைகளையும் தேவைகளையும் அதிகமாக உணர்ந்து வருகிறார்கள். தேவைகள் பலவகையாலும் நாளுக்கு நாள் பெருகி வருகின்றன. இந்த நிபுணர்கள் மக்களுக்குத் தெரிந்த மொழி பேசுவார்களேயன்றி, அன்னிய மொழி பேசவே மாட்டார்கள். இவர்கள் பெற்ற அறிவு, இவ்வையகத்தின் பொதுச் சொத்தாக இருக்கும். அப்போது, மேலை நாட்டில் செய்துவரும் வேலையைக் கண்மூடித்தனமாகப் பின்பற்றுவது ஒழிந்து, சொந்த அறிவோடு செய்யும் புதுவேலை உதயமாகும். இதற்காகும் செலவை யார் நியாயமாக ஏற்கவேண்டுமோ அவர்கள் தாராரியாக அச்செலவை ஏற்பார்கள்.

ஹரிஜன், 9-7-1938

கரு

உயர்தரக் கல்வி—உ

உயர்தரக் கல்வியைக் குறித்து நான் எழுதியிருந்த கட்டுரைபற்றி, கல்லூரி ஆசிரியராயிருந்தவரொருவர் நீண்ட கடிதமொன்று எழுதியிருக்கிறார். பின்வரும் பகுதிகள் அதிற் கண்டவையாகும்.

"உயர்தரக் கல்விபற்றி 9உ ஹரிஜனில் தாங்கள் கூறியுள்ள அபிப்பிராயங்களை இன்னும் சற்று விளக்கிச் சொல்லவேண்டும். பலவற்றில் எனக்கு உடன்பாடுதான்; முக்கியமாக, அன்னிய மொழியால் வந்த கேடு எவ்வளவு பெருங் கேடென்பது பற்றிய கருத்துக்களை அப்படியே ஏற்கிறேன். மேலும், உயர்தரக் கல்வி என்ற பெயரால் இன்று வழங்கும் கல்வியானது, பித்தளையைக் காட்டிப் பொன் என்று சொல்வதாக இருக்கிறது. இதுகாறும் நானும் இத்துறையில் ஆசிரியனாக இருந்தமையால், என் சொந்த அனுபவத்தைக்கொண்டே பேசுகிறேன். ஆனால், செலவுபற்றித் தாங்கள் கூறியுள்ள மூன்றாவது அபிப்பிராயந்தான் எனக்கு விளங்கவில்லை. பொது அரசிறையையும், அதில் உயர்தரக் கல்விக்கு என்ன பங்குண்டென்பதையும் கூறி, சர்வகலாசாலைகள் தங்கள் செலவைத் தாங்களே வகித்துக்கொள்ள வேண்டும் என்று தாங்கள் கூறியிருப்பதை நான் ஏற்க முடியவில்லை. ஒரு தேசமானது நாளுக்கு நாள் முன்னேறி வர வேண்டுமானால், அறிவியல் துறைகள் அனைத்திலும் அறிவு வளர்ச்சிக்கான வசதிகள் போதுமானபடி அமைதல் வேண்டும்; வெறும் இரசாயனமோ, மருத்துவமோ, பொறிநூலாகிய என்ஜினியரிங் அறிவோ வளர்ச்சி பெற்றால் மட்டும் போதாது; இலக்கியம், தத்துவ சாஸ்திரம், சரித்திரம், சமூக சாஸ்திரம் முதலான எல்லாத் துறையிலும் அறிவு பெருக வசதி வேண்டும். இவ்விதம் கலைத் தேட்டத்தின் உயர்ந்த படிகளில் பெறவேண்டிய வசதிகள் அரசாங்க ஆதரவின்றி அமையமாட்டா. கலைத் தேட்டத்துக்குத் தனிப்பட்டவர் முயற்சியையும் ஆதரவையும் மட்டுமே

நம்பியிருக்கிற எந்தத் தேசமும், நாளடைவில் பின் தங்கித் துன்பப்படும்; அது ஒருநாளும் சுதந்திரம் பெருது; பெற்ருலும் அச் சுதந்திரத்தை வைத்துக் காக்க வகையறியாமல் இழந்துவிடும். எல்லாத் துறைகளிலும் உயர்தரக் கல்வியின் நிலையை அரசாங்கம் மிக்க விழிப்பாயும் ஆர்வத்தோடும் கவனித்து வர வேண்டும். தனிப்பட்டோர் முயற்சி இருக்கத்தான் வேண்டும்; இங்கிலாந்தில் லார்டு நப்பீல்டு போலவும், அமெரிக்காவில் ராக்பெல்லர் போலவும். கல்வி வளர்க்கும் பெருங் கொடை வள்ளல்கள் நம்மிடையே தோன்றவேண்டும். தோன்றினுலுங்கூட, அரசாங்கமானது, மற்றவர் முயற்சியைப் பார்த்துக்கொண்டு சும்மா இருக்கக்கூடாது. இருக்கும்படி நாம் விடவும் கூடாது. கல்வி சம்பந்தமாய்த் திட்டம் வகுக்கவும், உதவி செய்யவும். வழி காட்டவும், அரசாங்கம் முன் வரவேண்டும். இவ்விஷயத்தைத் தாங்கள் கொஞ்சம் தெளிவுபடுத்தினுல் நல்லது

இனி, தங்கள் கட்டுரையின் முடிவில், 'எனது கல்வித் திட்டத்தின்படி, தேசத்தில் புத்தகசாலைகளும் விஞ்ஞான சோதனைச் சாலைகளும் இன்றுள்ளவற்றினும் அதிகமாக இருக்கும், இவற்றினும் திறமையாக வேலை செய்யும்' என்று கூறுகிறீர்கள். தாங்கள் குறிப்பிட்டுள்ள கல்வித்திட்டம், என் கண்ணில் படவில்லை; மேலும், அதன்படி இன்றுள்ளவற்றினும் அதிகமான வளமுடைய புத்தகசாலைகளும் விஞ்ஞான சோதனைச் சாலைகளும் எப்படி உண்டாகும் என்பதும் விளங்கவில்லை. இவற்றைத் தனியாகத்தான் ஏற்படுத்த வேண்டும்; அன்றியும், போதிய அளவில் வள்ளல்

களும் தனிப்பட்ட சுயேச்சையான ஸ்தாபனங்களும் முன்வந்து இவற்றை ஏற்படுத்தி வளர்க்க முன்வராத வரையில், இதுபற்றித் தனக்குள்ள பொறுப்பை அரசாங்கம் கழித்துவிட முடியாதென்றே நான் கருதுகிறேன்.

எனது கட்டுரையில் வரும் 'திட்டமான பயன்' என்ற தொடரின் விரிந்த பொருளை யுணர்ந்தால் அக் கட்டுரை முழுதும் எளிதில் விளங்கும். வறுமையில் மூழ்கி அறியாமைக்கு நிலைக்களனுயுள்ள மக்களடங்கிய இந்தியாவை நான் குறிப்பிடவில்லை. தன்னுடைய தனித்த பண்புக்கு ஒத்த முறையில் நாளுக்கு நாள் முறையாக அபிவிருத்தி பெற்று முன்னேறி வருகிற இந்தியநாட்டையே நான் என் கற்பனையில் எண்ணிப் பார்க்கிறேன். இன்று அழிந்துபோய்க்கொண்டிருக்கிறது, மேலை நாட்டு நாகரிகம். நான் காணும் இந்திய நாகரிகம் இதை அப்படியே பின்பற்றுகிற நாகரிகமன்று; இதன் சிறந்த அம்சங்களைப் பின்பற்றுவதும் அன்று, கீழ்த்தர அம்சங்களைப் பின்பற்றுவதும் அன்று. இந்திய நாட்டிலுள்ள ஏழு லக்ஷம் கிராமங்களும், நல்வாழ்வு நடத்துகின்ற ஜனநாயகமாக மாறவேண்டும்; அந்த ஜனநாயகத்தில், எழுதப் படிக்க அறியாதோர் எவருமிருக்கமாட்டார்; வேலையில்லாது எவரும் சோம்பியிருக்கமாட்டார்; எல்லோரும் பயனுள்ள வேலையில் ஈடுபட்டிருப்பார்கள்; உடம்பைப் பேணும் உணவும், காற்றோட்டம்நிறைந்த வீடும், உடுப்பதற்குத் தேவையான கதர் ஆடையும் எல்லோருக்கும் கிடைக்கும்; நாட்டுப்புறத்தில் வாழும் மக்கள் அனைவரும், சுகாதாரமாகவும் துப்புர

வாகவும் வாழ்வதற்கவசியமான நடைமுறை விதிகளை உணர்ந்து நடப்பார்கள்; இப்படி நான் காண்கிற கனவு நிறைவேறுமானால், அந்த ஜன நாயக ஆட்சியில் தேவையான புதுப்புது விஷயங்கள் பலவகையாலும் அவ்வப்போது தோன்றிவரும்; இவற்றை அரசாங்கம் கவனித்து ஆவன செய்யாவிட்டால், ஆட்சி சீர்கெடும். ஆகவே, இந்த ஆசிரியர் குறிப்பிடுகிற கல்வியனைத் துக்கும் அரசாங்கமே பொருளுதவி செய்யவேண்டு மென்பது எனக்கு விளங்குகிறது; இதன்பொருட்டு இன்னும் அதிகமான கல்வித் துறைகளையும் நான் குறிப்பிட முடியும். கல்வித்துறையில் அரசாங்கம் இத்தனை விரிவைக் கவனிக்குமாயின், இவற்றுக்கேற்ற புத்தகசாலைகளும் அமைக்கும் என்பது தெளிவு.

ஆனால் நான் குறிப்பிட்டது இதுவன்று. பாடங்களை நெட்டுருப் பண்ணிப் பண்ணி வறண்டுபோன மூளையும், சுத்தமான ஆங்கிலேயன் போல ஆங்கிலம் பேசவும் எழுதவும் முயன்று முயன்று முடியாமல் சோர்ந்துபோன மனமும் பெற்றுள்ள பி. ஏ. க்களும் எம். ஏ. க்களும் ஆகிய பெரும் படையை அரசாங்கம் சிருஷ்டிக்க உதவாது என்பதே நான் கூறியதின் சாரமாகும். இந்தப் படையினரில் பெரும் பகுதியினருக்கு எந்த வேலையுமில்லை, தொழிலுமில்லை. ஏதாவது தொழில் அல்லது உத்தியோகம் இவர்களுக்குக் கிடைத்தால், அது வெறும் குமஸ்தா வேலைதான். இந்த வேலையில் பன்னிரண்டு வருஷத்துக்கு மேலாக இவர்கள் கலாசாலையிலும் கல்லூரியிலுமாகக் கற்ற கல்வியவ்வளவுக்கும் அற்பப் பிரயோசனமு மில்லை.

சர்வகலாசாலையில் கிடைக்கிற பயிற்சியை அரசாங்கம் உபயோகப்படுத்திக் கொள்ளுமானால், அன்றே சர்வகலாசாலைகள் தம் செலவைத் தாமே வகிப்பனவாக ஆகிவிடுகின்றன. ஒரு பயிற்சியால் நமது சமுதாயத்துக்கோ பயிற்சி பெற்றவருக்கோ எவ்விதப் பயனும் விளைவதில்லை என்றால், அந்தப் பயிற்சிக்காகச் செலவு செய்வது பெருங் குற்றமாகும். தனிப்பட்டவருக்கு நன்மை விளையுமானால், அதனால் சமுதாயத்துக்குமே நன்மை என்று எளிதாக நிரூபிக்கலாம். ஆகவே, தனிப்பட்டவருக்கு மட்டும் நன்மை விளைவதென்பது இல்லை என்றே நான் கருதுகிறேன். இன்றுள்ள சர்வகலாசாலைக் கல்வி மட்டுமன்று, ஆரம்பக் கல்வியும் உயர்தரக் கல்வியுங்கூட, வாழ்க்கையுடன் எவ்விதத்திலும் தொடர்பற்றவை என்று என் கருத்துக்களை ஆராய்ந்து குணதோஷம் கூறும் அன்பர்களில் பெரும் பகுதியினர் ஒருமித்துப் பேசுகிறார்கள். ஆகவே, அந்தக் கல்வி, அரசாங்கத்துக்குக்கூட எவ்விதப் பயனும் அளிக்க முடியாது. கல்வியானது வாழ்க்கையுடன் நேர்முகமாய்த் தொடர்பு கொண்டிருந்து, தாய்மொழி மூலமாகவே அக் கல்வி முழுமையும் போதிக்கப்பட்டு வந்தால், அப்போது ஒருவேளை அதை நான் குறை கூறாமல் இருக்கலாம். வாழ்க்கையைக் கல்வி ஆதாரமாய்க் கொண்டிருக்க வேண்டுமென்றால், சமுதாயத்தின் தேவைகளை, அதாவது, அரசாங்கத்தின் தேவைகளை, ஆதாரமாகக் கொண்டிருக்க வேண்டும். அப்படி இருந்தால், அதற்காகும் செலவை அரசாங்கமே ஏற்றுக்கொள்ளும். அப்படிப்பட்ட சௌகரியமான காலம் வந்தபிறகுகூட, தனிப்பட்டவர்களுடைய பொருளுதவியால் பல கல்வி

ஸ்தாபனங்கள் நடைபெறுவதைக் காண்போம். அவற்றால் அரசாங்கத்துக்கு நன்மை விளைந்தாலும் விளையலாம், விளையாமற் போனாலும் போகலாம் கல்வி என்ற பெயரால் இந்தியாவில் இன்று வழங்கு வதில் பெரும்பகுதி இந்த வகையைச் சேர்ந்த கல்வி தான். ஆகவே, என் அபிப்பிராயத்தைக் கேட்பதா யிருந்தால் இந்தக் கல்விக்கு அரசிறை வருவாயி லிருந்து எந்த உதவியும் செய்யக் கூடாதென்றே சொல்லுவேன்.

என் நண்பர்கள், நான் கூறுபவற்றுள் இரண்டு அம்சங்களை, அதாவது கல்வி தாய்மொழி மூலம் இருக்கவேண்டும் என்பதையும், வாழ்க்கையோடு தொடர்பு கொண்டிருக்க வேண்டும் என்பதையும், ஒப்புக்கொள்ளுகிறார்கள். இதுமட்டும் எனக்குத் திருப்தி அளிக்காது. இப்போதுள்ள கல்வி முறையை எப்படியோ அவர்கள் இவ்வளவு காலமாய்க் குற்றம் கூறியும் சகித்துக்கொண்டும் தான் வந்திருக்கிறார்கள். இப்போது அக் கல்வியைச் சீர்திருத்தம் செய்வதற் கான சந்தர்ப்பம் கிடைத்திருக்கிறது. ஆகவே, காங்கிரஸ்காரர்கள் மிக விரைந்து வேலை செய்ய வேண்டியவர்கள். தாய்மொழி மூலம் கல்வி கற்பிப்பது என்ற சீர்திருத்தத்தை மெல்ல மெல்லச் செய்வோம் என்று எண்ணினால் போதாது. இச் சீர்திருத்தம் உடனே வரவேண்டும். வந்தால், மிகக் குறுகிய காலத்தில், பாடப் புத்தகம் இல்லை, ஆசிரியர் இல்லை என்ற குறைகளை நீக்க எண்ணற்ற புத்தகங்கள் எழுந்துவிடும், ஆசிரியர்களும் உண்டாவார்கள். வேலையை நாம் மும்முரமாய்ச் செய்து வருவோமானால்

எல்லாப் பாடமும் தாய்மொழி மூலமாய்க் கற்பிக்க முடியும் என்பதை ஒரே வருஷத்தில் காண்போம். அன்னிய மொழி ஒன்றின் மூலமாக நாகரிகத்தின் சாரமான கல்வியைக் கற்க முயன்று இந்திய சமுதாயத்தின் காலத்தையும் சக்தியையும் அளவில்லாமல் விரயம் செய்துவிட்டோம் என்பதையும், இந்த விரயத்துக்கு நாம் ஒருகாலும் உடந்தையாய் இருந்திருக்க வேண்டியதில்லை என்பதையும் காண்போம். கல்வி போதனைக்குத் தாய்மொழியை உபயோகிப்பதோடு கூட, நியாய சபைகளின் நடவடிக்கை சம்பந்தமாய் மாகாண சர்க்காருக்கு அதிகாரமும் செல்வாக்கும் இருக்குமானால், நியாய சபைகளிலும், சர்க்கார் காரியாலயங்களிலும் தாய்மொழியையே உபயோகத்துக்குக் கொண்டுவரவும் வேண்டும். கல்விப் பயிற்சியில் தாய்மொழி வெற்றி பெறுவது, நிச்சயம் இதைப் பொறுத்ததாகும். இந்தச் சீர்திருத்தம் அவசியம் என்பதை நாம் உண்மையாக உணர்ந்தால், வெகு சீக்கிரத்தில் இதை ஏற்படுத்திவிடலாம்.

ஹரிஜன், 30-7-1938

கச

ஆட்சேபமும் சமாதானமும்

1

ஆதாரக் கல்வி சம்பந்தமான எனது திட்டத்தை ஆராய்ந்து, அதிலுள்ள குறைகளைக் குறிப்பிட்டு, பெரிய கல்வியதிகாரி யொருவர் எழுதியிருக்கிறார்.

அவர் கூற்று முழுமையும் இங்குச் சொல்லாவிட்டாலும், சுருக்கமாய் அவருக்குப் பதில் சொல்வது எனது கடமை எனது கருத்துக்களைப் பின்வரும் நான்கு அம்சங்களாக அவர் குறிப்பிட்டிருக்கிறார்.

"க. ஆரம்பக்கல்விக்கு ஆதியும் அந்தமும் தொழிற் பயிற்சிதான். பொதுவான விஷய அறிவுபற்றி என்னென்ன தெரியவேண்டுமோ அவை யாவும், ஆரம்ப நிலையில் உபபாடங்களாகவே இருக்கும்; பிரதான பாடமாயிரா. சரித்திரம், பூகோளம், கணிதம் முதலான பாடங்களை எழுதுவது படிப்பது என்ற இரண்டின் மூலமாய்ப்போதிக்கும் பயிற்சியும் அவ்விதமே ஆரம்ப நிலையில் இராது; பயிற்சியின் கடைசியில்தான் இது இடம்பெறும்.

உ. ஆரம்பமுதலே, இவ்வாதாரக் கல்வியானது தன்செலவைத் தானே வகித்துக்கொள்வதாயிருக்கும். பாடசாலைகளில் செய்கிற சாமான்களை அரசாங்கமே ஏற்றுக்கொண்டு விற்பனை செய்துவந்தால், அவ்விதம் செலவை வகித்துக்கொள்ளச் செய்வது மிகவும் எளிதாகும்.

ந. இவ்வாதாரக் கல்வியின் தரமானது, மெட்ரிகுலேஷன் பாடத்தரம் வாய்ந்ததாயிருக்கும்; ஆங்கில மொழி மட்டுமே இதில் இராது.

ச. படித்த இளைஞர்கள் ஆண் பெண் இருபாலாரையும் இக்கல்வி போதிக்கும் ஆசிரியர்களாகக் கட்டாய சேவை செய்விக்க வேண்டும் என்று

கே.டி.ஷா என்ற பேராசிரியர் யோசனை கூறியிருக்கிறார். இதை நன்றாய் ஆராய்ந்து, சாத்தியமாயிருக்கக் கண்டால், செயலில் கொண்டுவர வேண்டும்.

இதிலிருந்து அவ்வதிகாரி மேலும் சொல்லுகிறார்: "இந்தப் பாட முறையை அலசிப் பார்த்தால், இதன் அடிப்படையான கருத்துகள் சில, தாத்தா காலத்துக் கருத்துக்களென்று தெரிகிறது. மற்றவற்றுக்கு ஆதாரமான அபிப்பிராயங்களை ஆராய்ந்தால், அவை போலியென்பதும் விளங்குகிறது. மூன்றாம் பகுதியில் குறிப்பிட்ட பாடத் திட்டம், மிகவும் எட்டாத தரமென்றே தோற்றுகிறது."

இவர், என் கருத்தைத் தம் சொற்களால் விளக்க முயன்றாரே யன்றி, என் சொற்களையே எடுத்துச் சொல்லவில்லை: சொல்லியிருந்தால் நன்றாயிருக்கும். ஏனெனில், முதலில் இவர் விளக்கிக்கூறிய கூற்றுக்கும் என் கருத்துக்கும் வெகு தூரம். நான் சொல்லவந்தது, தொழிற் பயிற்சியை முதன்மையாகக்கொண்டு கல்வி தொடங்கவேண்டும், மற்றவை உப பாடங்களாக அமையவேண்டும், என்பதே யன்று. பொதுவான கல்விப் பயிற்சி முழுமையுமே தொழில் மூலமாய்த் தான் நடைபெறவேண்டும். அதுவும், பிள்ளைக்குக் கல்விப் பயிற்சி வளர வளர, தொழிற் பயிற்சியும் கூடவே வளர்ந்து வரவேண்டும் என்றுதான் நான் கூறிவருகிறேன். என் கருத்தென்று இவர் கூறுவதற்கு இது முற்றும் வேறானது. தாத்தா காலத்தில் என்ன நடந்தது என்று எனக்குத் தெரியாது. என்ன நடந்திருந்தாலும், மனிதனுடைய

பண்புகளனைத்தையும் விரியச் செய்வது, தாத்தா காலத்திலாகட்டும், வேறெந்தக் காலத்திலாகட்டும், நோக்கமாயிருந்ததில்லை என்று நன்றாய் அறிவேன். இக்கருத்து எனக்கே சொந்தமான புதுக் கருத்து. ஒருவேளை அது தப்பாகலாம்; ஆனாலும்கூட இது எனது புதுக் கருத்து என்பதற்கு ஆட்சேபமில்லை. மேலும் புதுக் கருத்தைப் போதியவரையில் விரிவான அளவில் அனுஷ்டித்துப் பார்த்த பிறகுதான், அது அடியோடு தப்பானதுஎன்று எதிர்க்கலாமேயொழிய அனுஷ்டிக்காமலே எதிர்ப்பது சரியாகாது. அனுமானத்துக்கு இடமேயில்லாதபோது, இத் திட்டம் சாத்தியமில்லாதது என்று கூறுவது வாதமாகாது,

அன்றியும்,எழுதுவது படிப்பதுஎன்ற இரண்டின் மூலமாய் வரும் கிரமமான பயிற்சிக்கு முதலிடமில்லை, கடைசியில்தான் இப்பயிற்சிக்கு இடம் என்று நான் கூறவுமில்லை. உண்மையில், கிரமமான இப்பயிற்சி, ஆரம்பத்திலேயே தொடங்குகிறது. தவிரவும் பூரணயான கல்விப் பயிற்சியில், இதுவும் அபின்னமான ஓர் அம்சம். தொழிலை முதலில் கற்றுக்கொடுத்து, படிப்பதற்குச் சற்றுப் பிந்திக் கற்றுக்கொடுக்கலாம், எழுத இன்னும் பிந்திக் கற்றுக்கொடுக்கலாம் என்றே நான் சொல்லி வந்திருக்கிறேன். அதையே இங்கு மீண்டும் கூறுகிறேன். ஆனால், இந்தக் கல்வி—தொழில், படிப்பு, எழுத்து-அவ்வளவையும் முதல் வருஷத்துக் குள்ளேயே முடித்துவிட வேண்டும். முடிக்கும் பட்சத்தில், நான் கூறுகிற இந்தப் பாடசாலையில் முதல் வருஷப் படிப்பை முடித்த ஏழு வயதுள்ள

குழந்தை, தற்போதுள்ள ஆரம்பப் பாடசாலைகளில் முதல் வருஷப் படிப்பைப் படித்து முடித்த குழந்தைக்கு இருக்கும் விஷய அறிவைவிடப் பல வகையிலும் சிறப்பான பொது விஷய அறிவு உடையதா யிருக்கும். இக் குழந்தை திருத்தமாய் வாசிக்கும். தற்போதுள்ள பள்ளிக்கூடத்துக் குழந்தைகள் எழுதுவதென்றால், வெறும் கிறுக்கல்தான்; ஆனால், இக் குழந்தையோ எழுத்து வடிவத்தை மிகத் திருத்தமாய் எழுதும். கூட்டல், கழித்தல், சாதாரணப் பெருக்கல், வாய்பாடு முதலியனவும் இதற்கு நன்றாய்த் தெரியும். ஏதேனும் ஓர் உற்பத்தித் தொழிலை இக் குழந்தை கற்றுவந்த போதே, அத்தொழிலின் வழியாகவே இவற்றை யெல்லாம் கற்றுக்கொண்டிருக்கிறது. இவ் வுற்பத்தித் தொழிலானது நூற்றலா யிருக்கலாம். அல்லது நம் விருப்பம்போல் வேறேதேனுமொன்று யிருக்கலாம்.

இந்த அன்பர் பிந்தி எழுதியிருப்பது, முந்தியதைப் போலவே பொருத்தமற்றது. ஏனெனில், இக் கல்வி முறை ஆரம்பத்திலிருந்து தனக்காகும் செலவைத் தானே வகித்துக்கொள்ளவேண்டுமென்று நான் சொல்லவில்லை; தொழில்கள் மூலமாய்த் தரும் இக் கல்விக்கு உரிய ஏழு வருஷகாலம் என்ற மொத்த கால அளவில்தான், இது தன் செலவைத் தானே வகிக்க வல்லதாக வேண்டுமென்று நான் கூறியிருக்கிறேன். முதல் இரண்டு வருஷங்களில் இதற்குக் கைச் செலவே பண்ணவேண்டி யிருக்குமென்றும் நான் தெளிவாய்க் கூறியிருக்கிறேன்.

நம் நாட்டில் இடைக்காலத்தில் நிலைமை கேடா யிருந்தது உண்மையே. ஆனால், இடைக் காலம்

அல்லது தாத்தா காலம் என்றதனாலேயே, எல்லாம் மோசந்தான் என்று நான் கருதவில்லை. ராட்டை யானது இடைக்காலத்துக் குரியதுதான்; ஆனால், இது அழியாமல் என்றும் இருக்கப்போகிறது. ராட்டை என்னவோ, பழைய ராட்டைதான், புதிய தன்று, ஒரு காலத்தில், அதாவது பிரிட்டிஷ் வர்த்தகக் கூட்டமாகிய கிழக்கிந்தியக் கம்பெனி இந் நாட்டில் அடியெடுத்து வைத்த பிறகு இந்த ராட்டை அடிமைத் தனத்துக்குரிய சின்னமாகிவிட்டது. இதே ராட்டைதான், இன்று சுதந்திரம் ஐக்கியம் என்பவற் றுக்குச் சின்னமாக விளங்கி வருகிறது. நம் முன்னோர் காலத்தில் இந்த ராட்டையில் இவ்வளவு மேலான தத்துவங்களை யாரும் கண்டதில்லை, ஆனால் இதே ராட்டை நமக்கு எவ்வளவோ ஆழ்ந்த உண்மையான தத்துவங்களைப் புலப்படுத்துகிறது. இதுபோலவே, கைத்தொழில்கள் என்றால், முன்னமே வருந்தியுழைப் பதற்கு அடையாளமாயிருந்தன. அவைகளே இன்று கல்வி என்பதன் பூரணமான பொருள் என்னவோ, உண்மையான பொருள் என்னவோ, அந்தப் பொருளை யுணர்த்தும் அடையாளங்களாகவும், அந்தப் பொருளைத் தரும் சாதனங்களாகவும் அமையலாம். மந்திரிமாருக்குப் போதிய தைரியமும் விரிந்த மனோ தர்மமும் இருக்கும் பட்சத்தில், அவர்கள் இக் கல்வி முறையை அனுஷ்டானத்துக்குக் கொண்டு வந்தே தீர்வார்கள். இதில் எவ்வளவோ குறை காணலாம். பெரிய கல்வியதிகாரிகள் இதை எதிர்க்கலாம்; நல் லெண்ணத்தோடேயே பலர் எதிர்க்கிறார்கள் என் பதில் சந்தேகமில்லை. போலியான அடிப்படையை

வைத்துச் சிலர் இதைக் குறைகூறுகிருர்கள் : இருந்த போதிலும், மந்திரிமார் இதைச் சோதனை செய்து பார்த்தே தீர்வார்கள்.

கடிதம் எழுதிய கல்வியதிகாரி, படித்தோர் அனைவரையும் கல்வி போதிக்கும் ஆசிரியர்களாகச் சேவை செய்யுமாறு கட்டாயப்படுத்த வேண்டும் என்ற பேராசிரியர் ஷாவின் யோசனை சாத்தியமானது, சரியானது என்று கருதுகிருர். கருதியபோதிலும். பின்னுல் அவரே இதைப்பற்றி வருந்துகிருர் ; அவர் சொல்வதாவது :

"ஆசிரியத் தொழில் செய்யும்படி கட்டாயப் படுத்துவது என்ற யோசனை மிகவும் மூர்க்கத்தனமானது என்பதே எங்கள் அபிப்பிராயம். சிறு பிள்ளைகள் கூடியிருக்கிற பாடசாலைகளில், அவர்களுக்குக் கல்வி போதிக்கும் ஆசிரியத் தொழிலுக்கென்றே தங்கள் வாழ்நாளைத் தாங்களாகவே அர்ப்பணம் செய்கிற இளைஞர்களும் யுவதிகளும் தேவை; இந்த உலகத்தில் இப்படி வாழ்நாளை அர்ப்பணம் செய்வது எவ்வளவோ அருமை; ஆயினும், சாத்தியமான வரையில் இவ்விதம் அர்ப்பணம்செய்வோரே தேவை. இவர்களே பாடசாலையில் உண்மையானவிளக்கத்தையும் உற்சாகத்தையும் உண்டாக்க வல்லவர்கள். நம் இளைஞர்களை வைத்து நாமும் எத்தனையோ சோதனைகள் நடத்திவிட்டோம். ஆனுல், இப்போது எண்ணியுள்ள இப் புதிய சோதனை, பெருங் கேட்டுக்கே வித்தாயிருக்கும் என்றுதான் தெரிகிறது; குறைந்தது ஐம்பது வருஷ காலத்துக்கேனும் இக்

கேட்டிலிருந்து மீள முடியாதென்பது நிச்சயம். பிறவி யிலேயே எல்லோரும் ஆசிரியராகுந் தகுதி பெற்றுப் பிறக்கிறார்கள். கல்வி போதித்தல் என்ற தொழிலுக்குப் போதுமான பயிற்சி எதுவும் தேவையில்லை என்ற நினைப்பிலிருந்துதான் இந்த யோசனை பிறந்திருக்கிறது. இது இயற்கைக்கு முரணான யோசனை. இதன்படி நடந்தால் ஆபத்து விளைவது நிச்சயம். எல்லோரும் குழந்தைகளுக்குக் கைத்தொழில் கற்பிக்க முடியும் என்பது எப்படிச் சாத்தியம்?"

இக் கல்வியதிகாரிக்கு ஒரு விஷயம் நினைப்பூட்ட விரும்புகிறேன். இன்றுள்ள உபாத்தியாயர் அனைவரும், தாமாகவே உபாத்திமைத் தொழிலுக்கு வந்தவர்களல்ல. அவர்கள் தங்கள் சீவனத்துக்காக வேண்டிக் கூலிக்கு வேலை செய்பவர்களே. ஷாவின் திட்டப்படி, உபாத்தியாயர்கள் இப்படிப்பட்டவர்களல்லர்; தேசபக்தி, தியாகவுணர்ச்சி, ஓரளவுக்குச் சிறந்த இதயப் பண்பாடு ஆகிய குணங்களும், ஏதேனுமொரு கைத் தொழிலில் பயிற்சியும் உடையவர்களே அத் திட்டப்படி உபாத்தியாயர்களாக முடியும். அவருடைய யோசனை உருவானது, நன்றாய் நடைபெறக்கூடியது. எனவே, அதைத் தீர்க்கமாய் ஆலோசிப்பதே முறையாகும். பிறவியாசிரியர் என்னத்தக்க உபாத்தியாயர் கிடைக்கும் வரையில் நாம் பொறுத்திருக்கவேண்டுமானால், யுகாந்தம் வரையில் காத்திருக்க வேண்டியிருக்கும். மிகவும் குறைவான காலத்தில் பெருவாரியான முறையில் உபாத்தியாயர்களைப் பயிற்றவேண்டுமென்றே எனக்குப் படுகிறது. இப்போதுள்ள படித்த இளைஞர்களையும் யுவதிகளையும் ஆசிரியத் தொழில்

செய்யும்படி மெல்லக் கட்டாயப்படுத்தினாலொழிய, இது நடைபெறாது. இவர்களனைவரும் தாங்களாகவே மனமொத்து இதற்கு இணங்கினாலன்றி, இது நடைபெறவும்முடியாது. சத்தியாக்கிரகப் போராட்டத்தில் இவர்கள் சொற்பஅளவேனும் மனமொத்து இணங்கி வந்ததைக் கண்டோம். சீவனத்துக்காகக் கூலிபெற்று வாழ்வதற்குப் பதிலாக, இவ்வகையான நிர்மாண சேவை செய்ய வரும்படி அழைத்தால், இவர்கள் மனமொத்து வராதிருப்பார்களா என்ன?

அவ்வதிகாரி மேலும் கேட்கிறார் :

"க. சிறு பிள்ளைகள் மூல வஸ்துக்களைக் கையாளும்போது, ஏராளமாய்ச் சேதம் ஏற்படுமல்லவா? இதையும்நாம் தள்ளிப்பார்க்கவேண்டாமா!

உ. விற்பனையானது ஏதேனுமொரு மத்திய ஸ்தாபனத்தின் மூலமாய் நடக்குமா? அப்படியானால் அதற்காகும் செலவையும் கவனிக்கவேண்டுமல்லவா?

ந. பொது மக்கள் பிள்ளைகள் செய்கிற சாமான்களை வாங்கும்படி கட்டாயமுண்டா?

ச. இதே சாமான்களை இப்போது பல சமூகங்கள் செய்து வருகின்றன. இவற்றின் நிலைமை என்ன? பிள்ளைகள் சாமான் உற்பத்தி செய்வதை இவை எந்த முறையில் ஏற்கும்"

இக்கேள்விகளுக்குப் பின்வருமாறு நான் விடை கூறுவேன் ;

க. மூல வஸ்துக்கள் சேதமாகுமென்பதில் சந்தேகமேயில்லை. ஆயினும், முதல் வருஷ முடிவிலேயே, ஒவ்வொரு பிள்ளையாலும் சொற்ப லாபமேனும் ஏற்பட்டிருப்பது நிச்சயம்.

உ. பிள்ளைகள் உற்பத்திசெய்யும் சாமான்களில் பெரும் பகுதியை அரசாங்கமே தன் உபயோகத்துக்காக எடுத்துக்கொள்ளும்.

ந. குழந்தைகள் செய்த சாமான்களை வாங்கித்தான் ஆகவேண்டும் என்று பொதுமக்களை யாரும் கட்டாயப்படுத்தப் போவதில்லை. ஆனால், பொது மக்களாகிய நமக்கு, நம்முடைய குழந்தைகள் உற்பத்தி செய்த சாமான்களை வாங்குவதில் பெருமையும் இன்பமும் உண்டாகுமல்லவா? இப் பெருமையையும் இன்பத்தையும் எண்ணி, தேச பக்தியால் தூண்டப்பட்டு நாம் வாங்குவோமென்று எதிர் பார்க்கலாமல்லவா ?

ச. கிராமக் கைத்தொழில் மூலம் உற்பத்தியாகும் சாமான்களைப் பொறுத்த வரையில், எங்கும் அனேகமாய்ப் போட்டி கிடையாது. மேலும் பிள்ளைகள் எந்தச் சாமான்கள் செய்தால், ஆங்காங்கு மக்களிடையே உற்பத்தியாகும் சாமான்களோடு அவை அநியாயமாகப்போட்டிக்குவராமலிருக்குமோ, அவைகளையே செய்து வரும்படி நாம் கவனித்துக் கொள்வோம். உதாரணமாக, கதர், கையால் செய்த காகிதம், பனைவெல்லம் முதலியவை எதற்கும் போட்டியில்லை.

ஹரிஜன், 16-10-1937

2

முஸ்லிம் நிருபரொருவர் பின்வருவாறு எழுதுகிறார்: சென்ற நான்கு மாத காலமாக, வர்தாக் கல்வித் திட்டத்தைப்பற்றி உருதுப் பத்திரிகைகளில் அபிப்பிராயங்கள் வெளியாகி வருகின்றன. வழக்கம் போல் எவரும் ஜாகிர் ஹுசேன் கமிட்டி அறிக்கையைக் கவனமாய்ப் படிக்கவில்லையென்றே தோற்றுகிறது. ஆதாரக் கல்வியைப்பற்றி எவரும் சிந்தித்ததாகவும் தெரியவில்லை. மூன்று அம்சங்கள் பற்றி ஆட்சேபங்கள் வெளியாகின்றன:

க. சமய போதனை இத் திட்டத்தில் அடியோடு விடப்பட்டிருக்கிறது.

உ. பிள்ளைகளும் பெண்களும் ஒன்றாய் உடன் இருந்து படிப்பார்கள்.

ங. எல்லாச் சமயங்களையும் போற்றவேண்டும் என்ற உணர்ச்சியே ஊட்டப்பெறும்.

இவ்வாட்சேபங்களை உருதுப் பத்திரிகைகளிலிருந்து திரட்டியிருக்கிறேன்."

இன்ன ஒரு சமயத்தைத்தான் போதிப்பது என்ற முறையில் சமய போதனை வேண்டாம் என்று திட்டமாகத்தான் இக் கல்வி முறையில் நீக்கப்பட்டிருக்கிறது. அரசாங்கத்தின் சமயம் என்று ஒரு சமயம் இருந்தாலொழிய, சமய போதனையளிப்பது மிகவும் கஷ்டம், முடியவும் முடியாது; ஏனெனில், இப்படிச்

சமயபோதனை யளிப்பதானால், ஒவ்வொரு சமயத்தையும்போதிப்பதாக வந்து முடியும். இவ்விதம் அவரவர் வீட்டில் போதிப்பதுதான் நலம். வீட்டிலேனும் வேறு வகையிலேனும் எல்லாக் குழந்தைகளும் இவ்விதம் சமய போதனை பெறுவதற்கு, அரசாங்கம் போதிய அவகாசம் அளிக்கவேண்டும். மேலும், குறித்த ஒரு சமயத்தார் தங்கள் பிள்ளைகளுக்குப் பள்ளிக்கூடத்தில் சமய அறிவு போதிக்கவேண்டும் என்று கருதுகிறார்களென்று வைத்துக்கொள்வோம். அப்போது, அரசாங்கமானது, தனிப்பட்ட முறையில் சமய போதனை அளிப்பதற்கான வசதிகள் செய்து தரவேண்டுமென்று எதிர்பார்ப்பது நியாயமேயாகும்: ஆனால், இதற்காகும் செலவை, அந்த அந்தச் சமயத்தாரே ஏற்றுக்கொள்ளவேண்டும்.

இரண்டாவது ஆட்சேபம், ஆடவரும் பெண்டிரும் உடன் இருந்து கல்வி பயில்வதுபற்றி; கட்டாயம் இப்படித்தான் கல்வி பயிலவேண்டும் என்று ஜாகிர் ஹுசேன் கமிட்டி சொல்லவில்லை. பெண்களுக்கென்று தனியாக ஒரு பள்ளிக்கூடம் வேண்டுமென்று பொது மக்கள் கேட்டால், இதற்கு அரசாங்கம் ஏற்பாடு செய்தே ஆகவேண்டும். ஆடவரும் பெண்களும் ஒன்றாய்ச் சேர்ந்து கல்வி பயில்வது என்பதை இன்னும் முடிவு செய்துவிடவில்லை. காலப் போக்குக்கு ஏற்றபடி இது, தானே முடிவாகும். கமிட்டியின் அங்கத்தினர் அனைவரும் இவ் விஷயத்தில் ஒரே அபிப்பிராயம் கொள்ளவில்லையென்றே நினைக்கிறேன். என்னைப் பொறுத்த வரையில், இதுபற்றி நான் மற்றவர்கள் அபிப்பிரா

யத்தை ஆராயவும் சித்தமாயிருக்கிறேன். ஆடவரும் பெண்களும் ஒன்ருய்ப் பயிலலா மென்பதற்கு எவ்வளவு நியாயமான காரணம் காட்ட முடியுமோ. அவ்வளவு நியாயமான காரணம், ஒன்ருய்ப் பயில லாகா தென்பதற்கும் காட்ட முடியும். இதுபற்றி யாரேனும் சோதனை செய்து பார்க்க விரும்பினுல், நான் அவரைத் தடுக்கமாட்டேன்.

எல்லாச் சமயங்களிடத்திலும் சமமான பக்தி பூண்டிருக்கும்படி பயிற்சி தருவது அவசியமென்பது பற்றி என் அபிப்பிராயம் மிகவும் கண்டிப்பானது. எல்லாச் சமயங்களையும் ஒன்ருய்க் காண்கின்ற ஆனந்த மான சமரச நிலை எய்தாத வரையில், நம்மிடையுள்ள பல்வேறு சமூகங்களிடையிலும் உண்மையான ஒற்றுமை நிலவ வழியுண்டென்று எனக்குத் தோற்ற வில்லை. பலவேறு சமயங்களிலிருந்தும் வந்து படிக்கும் பிள்ளைகளுக்கு, 'உன் சமயந்தான் மற்றச் சமயங்க ளெல்லாவற்றையும் விட மேலானது, இதுதான் உண்மையான ஒரே சமயம்' என்று போதிப்போ மானுல், இது அவர்களிடையே சகோதரபாவம் வளர்வதற்குக் கேடாய் முடியுமென்றுதான் நான் எண்ணுகிறேன். அந்த அந்தச் சமயத்தையும் தனித் தனியாய்ப் போதிக்கவேண்டுமென்ருல், அதன் பொருட்டு ஒவ்வொரு சமயத்துக்குமென்று தனித் தனிப் பள்ளிக்கூடங்கள் ஏற்படவேண்டும்; இவற்றில் ஒவ்வொன்றும் மற்றச் சமயங்களைப் பழிப்பதற்குரிய பூரண சுதந்திரம் இருக்கும்; இது ஒரு வழியாகும். அல்லது பள்ளிக்கூடங்களில் சமயம் என்ற பேச்சே எழாமல் தடை செய்துவிடவேண்டும். இப்படித்

தடை செய்வதால் விளையும் தீமையோ, நினைக்கவும் பயங்கரமானது. நீதி நெறியும் நல்லொழுக்கமும் பற்றிய அடிப்படையான கருத்துக்கள் எல்லாச் சமயங்களுக்கும் பொதுவானவை. இவற்றை எல்லாப் பிள்ளைகளுக்கும் போதிக்கவேண்டும். வர்தாக் கல்வித் திட்டத்தின்படி நடக்கும் பள்ளிக்கூடங்களைப் பொறுத்த வரையில், இவற்றைப் போதிப்பதே போதுமான சமயபோதனை என்று கொள்ள வேண்டும்.

ஹரிஜன். 16-7-1938

கரு

சில குறிப்புக்கள்

வர்தாக் கல்வித் திட்டத்தைப் பயிலும்பொருட்டு நாட்டின் பல பாகங்களிலுமிருந்து வந்திருந்த ஆசிரியர்கள் 1939-ஆம் வருஷத் தொடக்கத்தில் காந்தியடிகளைப் பேட்டி கண்டு, பல விஷயங்களைத் தெளிவு படுத்துமாறு கேட்டார்கள். அவர்களுக்குக் காந்தியடிகள் கூறியவற்றுள், பின்வருவன முக்கியமான பகுதிகளாகும்.

யந்திரத் தொழிலும் புதுக் கல்வியும்

"புதுக் கல்வி முறைப்படி நீதி, சத்தியம் அஹிம்சை என்ற அடிப்படையில் கல்வி பயின்று வளர்ந்த மக்கட் சமூகம், விரைந்தோங்கி வருகிற யந்திரத்தொழிலின் வேகத்தைத் தாங்கி நிற்கமுடியுமா?" என்பது கேள்வி.

இது இப்போது செயல் முறைக்குப் பொருந்துகிற கேள்வியன்று. ஆலைத்தொழில் ஓங்கி வருகிறதே என்ற அச்சம், நாம் செய்ய எண்ணுகிற கல்விச் சீர்திருத்தத்தைப் பாதிக்கலாகாது. அனேக தலைமுறைகளுக்குப் பின்னால் என்ன நடக்கப்போகிறது என்பது நாம் இப்போது ஆராயவேண்டிய பிரசினை அன்று. ஆனால், இன்று நமது கிராமங்களில் வாழும் கோடிக்கணக்கான மக்களுக்கு உண்மையாக என்ன வேண்டுமோ அதை இந்த ஆதாரக் கல்வித் திட்டத்தின் மூலம் நிறைவேற்ற முடியுமா என்பதே நாம் இப்போது கவனிக்க வேண்டிய பிரசினை இந்தியாவில் கிராமமே மிச்சமிராதபடி ஆலைத்தொழில் ஓங்கிவிடப் போகிறதென்று நான் எண்ணவில்லை. பொதுவாய்க் காங்கிரஸின் நோக்கம், கிராமக் கைத்தொழில்களைப் பேணி வளர்ப்பதேயொழிய, ஆலைத்தொழிலை வளர்ப்பதன்று. ஆலைத்தொழில் வளர்ச்சிக்காக விரிவான திட்டங்கள் போடுவதால், நம் உழவர்களுக்குப் புத்துணர்ச்சி யுண்டாகாது; இதனால் அவர்களுக்கு ஒரு பைசா லாபமில்லை. ஆனால், அகில இந்தியச் சர்க்கா சங்கமும் கிராமக் கைத்தொழிற் சங்கமும் இவ்வேழை மக்களுக்கு ஒரே வருஷத்தில் பல லக்ஷ ரூபாய் வருமானம் தரமுடியும். இச் சங்கங்களைக் காங்கிரஸ் தொடங்கி வைத்தபோதிலுங்கூட இவை நெடுங்காலமாய்த் தனியே வேலைசெய்து நல்ல பயன் விளைவித்திருக்கின்றன. இவற்றின் பயனாய்த் தோன்றியதே ஆதாரக் கல்வி என்ற 'இப் புதுமுறைக் கல்வி

கல்வியைத் தொழிலுடன் இயைபுபடுத்தல்

கல்வி யனைத்தையும் ஓர் ஆதாரத் தொழிலுடன் இயைபுபடுத்திப் போதிக்க வேண்டுமென்று நான்

கூறியது உண்மை. ஏழு வயது அல்லது பத்து வயதுள்ள குழந்தைக்கு இப்படி ஒரு தொழில் மூலம் அறிவு புகட்ட முயலும்போது, அத்தொழிலுடன் இணைக்க முடியாத பாடங்களைத் தொடக்கத்தில் விலக்கிவிடத்தான் வேண்டும். இப்படி விலக்குவதால், நாளாக ஆக, முதலில் விலக்கியவற்றை யெல்லாம் கொஞ்சம் கொஞ்சமாய்ப் பின்னர் தொழிலுடன் இணைத்துப் போதிப்பதற்கானவழிகளும் முறைகளும் தாமே புலப்படும். தொடக்கத்தில் எல்லாப் பாடத்தையும் சேர்த்துக் குழப்பாமலிருந்தால், ஆசிரியருடைய சக்தியும் பிள்ளைகளுடைய சக்தியும் வீண் போகாமல் முழுமையும் பயன்படும். நமக்கு வழி காட்ட, முந்திய முறைகளெவையும் இன்று இல்லை; புத்தகங்களும் இல்லை. ஆகவே, நாம் மெதுவாகவே இப் பயிற்சியை நடத்தலாம். ஆசிரியர் எப்போதும் தம் உள்ளத்தில் ஊக்கம் குன்றாமல் விழிப்போடு இருப்பதே முக்கியமானது. தொழிலுடன் இயைபுபடுத்த முடியாத விஷயம் ஒன்று புலப்பட்டதானல், அதுபற்றிச் சஞ்சலமோ அதைரியமோ அடைய வேண்டியதில்லை. அதை விட்டுவிட்டு, எந்தப் பாடங்களை இயைபுபடுத்திக் கற்பிக்கக் கூடுமோ அவற்றை மட்டும் கற்பித்துவந்தால் போதுமானது. ஆசிரியர் ஒருவருக்கு வழி புலப்படாவிட்டாலும், மற்றொருவருக்கு இதற்குத் தக்க வழி புலப்படுதல் கூடும்; எவ்விதம் இயைபுபடுத்திக் கற்பிப்பது என்பதற்கு இவர் வழி காட்டுதல் கூடும். பலருடைய அனுபவங்களை ஒன்றாய்த் தொகுத்துப் பார்க்கும்போது, எல்லோருக்கும் வழி காட்டவல்ல புத்தகங்கள் தோன்றக்கூடும். எனவே, பின்வரும் ஆசிரியர்கள் வேலை எளிதாகிவிடும்.

ஆனால், 'இவ்விதம் இயைபுபடுத்தும் வழி புலப்படாமல் எவ்வளவுகாலத்துக்குப் பாடங்களை ஒதுக்கிக் கொண்டு போவது' என்று கேட்கலாம். 'ஆயுள் முழுமையும்' என்றே நான் விடை கூறுவேன். முடிவில் பார்த்தால், தொடக்கத்தில் ஒதுக்கிய பல விஷயங்கள் பிற்பட்டுக் கற்பித்திருப்பது தெரியவரும்: கற்பிக்கத் தக்கதெல்லாம் மிச்சமில்லாமல் கற்பித்தாகியிருப்பதைக் காணலாம்; ஒதுக்கிவிட்டது யாவும் மேற்போக்கான விஷயம்; ஒதுக்கிவிட வேண்டியதென்றே தோற்றும். வாழ்க்கையில் இதுவே எனது அனுபவம். பல வேலைகளை விட்டுவிட்டு, வேறு பல வேலைகளை மட்டும் நான் செய்து வந்தமையால்தான், என் வாழ்நாளில் இத்தனை வேலைகளைச் செய்து முடிக்க முடிந்தது.

நமது கல்வி முறையில் பெரும் புரட்சிவேண்டும். கை மூலமாய் மூளையைப் பயிற்றவேண்டும்; அதாவது, புலன்கள் மூலமாய் அறிவை வளர்க்கவேண்டும். நான் ஒரு கவிஞனாய்ப் பிறந்திருந்தேனானால், இந்த ஐந்து விரல்களால் என்ன சாதிக்கமுடியும் என்பது பற்றிக் கவிதையாகப் பொழிந்து தள்ளிவிடுவேன். மூளையே எல்லாம், கையும்காலும் ஒன்றுமில்லை என்று ஏன் நினைக்க வேண்டும்? அங்கங்களைப் பயிற்றித் திறமை பெறாதவர்கள், பழைய கல்வி முறை என்ற சுவட்டிலேயே போகிறவர்கள், வாழ்க்கையில் லயம் குன்றியவர்கள். அவர்கள் பண்புகள் யாவும் விளக்கம் பெறவில்லை. ஏட்டுப் படிப்பு மட்டும் குழந்தையின் கவனத்தையும் உற்சாகத்தையும் முழுமையும் கவர்வதில்லை. வெறுஞ் சொற்களைக் கண்டு மூளை

சோர்வடையவே, குழந்தை மனம் அலைய ஆரம்பிக்கிறது. இதனால் செய்யவேண்டாத வேலையைக் கை செய்கிறது; பார்க்க வேண்டாததைக் கண் பார்க்கிறது; கேட்க வேண்டாததைக் காது கேட்கிறது. வேண்டியதைச் செய்வதுமில்லை, பார்ப்பதுமில்லை, கேட்பதுமில்லை. எது தகுந்ததோ அதைத் தெரிந்து கொள்வதற்கான பயிற்சி அவர்களுக்குக் கிடைக்கவில்லை; எனவே, அவர்கள் பெற்ற கல்வியே அவர்கள் கேட்டுக்கு வித்தாக முடிகிறது. நன்மையையும் தீமையையும் பகுத்தறிந்து, நன்மையை ஏற்றுத் தீமையை விலக்கக் கற்பிக்காத கல்வியைக் கல்வி என்று கூறிவது மோசடி யாகும்.

பள்ளிக்கூடத்தில் நடைபெறும் பாடத்திட்டத்தில், ஒரு கைத்தொழிலையும் சேர்த்துக்கொள்வது பழைய வழக்கம். இதன்படி, கல்வி போதனைக்குச் சம்பந்தமில்லாமலே தொழிலும் படிப்புடன் சேர்கிறது. இது பேராபத்தான தவறு என்றே எனக்குப் படுகிறது. உண்மையில், குறித்த தொழிலை ஆசிரியரே நன்ருய்ப் பயின்று, தமது அறிவை அத்தொழிலுடன் இயைபுபடுத்த வேண்டும்: இதன் பயனாய் இந்தத் தொழிலையே கருவியாகக் கொண்டு எல்லாவித அறிவையும் அவர் பிள்ளைகளுக்குப் புகட்ட முடியும்.

உதாரணமாக, நூற்றலை எடுத்துக்கொண்டிருந்தால், கணக்குத் தெரிந்தால்தான் தக்கிளியில் எத்தனை சுற்று நூல் நூற்றேனென்றும், இது என்ன நம்பர் நூலென்றும் எனக்குத் தெரிய முடியும். இது தெரிவதற்கு எண்ணறிவு உண்டாகவேண்டும், கூட்டல் கழித்தல் பெருக்கல் வகுத்தல் என்ற கணக்கைக் கற்கவேண்டும்,

இவற்றுள் சிக்கலான கணக்குக்கள் வந்தால், அவற்றைப் போடுவதற்கு எண்களுக்குப் பதிலாக அக்ஷரங்களை உபயோகிப்பதாகிய அக்ஷர கணிதம் (ஆல்ஜீப்ரா) நன்கு அறிந்தாக வேண்டும். இந்தக் கணிதத்தில்கூட ஆங்கில எழுத்துக்களை விலக்கி, ஹிந்துஸ்தானி எழுத்துக்களை உபயோகிக்க வேண்டுமென்றே நான் கூறுவேன்.

அடுத்தபடி க்ஷேத்திர கணிதத்தை எடுத்துக் கொள்ளுங்கள், வட்ட வடிவத்தைக் குழந்தைகளுக்குக் கற்பிக்க, தக்ளியின் வட்டைவிடச் சிறந்த சாதனம் உண்டா? யூக்லிட் என்ற கணித விற்பன்னர் பெயரைக் கூறுமலே, வட்ட வடிவம் பற்றிய கணித சாஸ்திர உண்மைகள் அனைத்தையும் இவ் வட்டை வைத்து நான் போதித்து விடுவேன்.

நூற்றல் மூலமாய்ப் பூகோளம் சரித்திரம் முதலிய பாடங்களை எப்படிக் கற்பிப்பது என்று கேட்கலாம். கொஞ்ச நாளைக்குமுன், "பருத்தி - மக்கட் குலத்தின் சரித்திரம்" என்ற புத்தகமொன்றைக் கண்டேன்: அதைப் படிக்கும்போது எனக்கு மயிர்க் கூச்செறிந்தது. இனிய கதைபோல் அதைப் படித்தேன். புராதன கால சரித்திரத்தில் தொடங்கி, பருத்தி ஆதியில் எங்கு எப்படிப் பயிராயிற்று, என்னென்ன விதங்களில் வளர்ந்தது, பற்பல நாடுகளிடையே பருத்தி வியாபாரம் எப்படி ஓங்கிற்று என்றெல்லாம் அப் புத்தகம் விவரமாய்க் கூறிற்று. நாடுகளை ஒவ்வொன்றாய்க் குழந்தைக்குக் கூறி வரும்போது, அந்தந்த நாட்டின் பூகோள அமைப்பு, சரித்திரம் முதலியவற்றையும்

சிறிது சிறிதாய்ச் சொல்லி வருவேன். வெவ்வேறு காலத்தில் வர்த்தக உடன்படிக்கைகள் ஏற்பட்ட போது அரசாண்ட அரசர்கள் யார் யார்? ஏன் சில நாடுகள் பருத்தி இறக்குமதி செய்கின்றன? வேறு சில நாடுகள் ஏன் துணி இறக்குமதி செய்கின்றன? இவற்றையொத்த கேள்விகளை விளக்கினால், பொருளாதார சாஸ்திரம், விவசாய சாஸ்திரம் என்பவற்றில் போய் முடியும். பருத்தியிலுள்ள பற்பல ரகங்கள், அவை பயிராகும் மண்ணின் தன்மை, பயிரிடும் முறை கிடைக்குமிடம் முதலியவற்றை யெல்லாம் குழந்தைக்கு அறிவிக்க வேண்டும்.

இப்படியாக, தக்கிளி நூற்றலில் தொடங்கி கிழக்கிந்திய வர்த்தகக் கூட்டத்தாரின் சரித்திரம் முழுமையும் கற்பித்தாக வேண்டும். பின்னர் இக்கூட்டத்தார் ஏன் இந்தியாவுக்கு வந்தார்கள், நமது நூற்றல் தொழிலை அவர்கள் எப்படி அடியோடு அழித்துவிட்டார்கள், எப்படி வியாபாரமும் பொருளும் தேடி இந்தியாவுக்கு வந்த இவர்கள் பிற்பட்டு நாடு பிடிக்கும் ஆசை கொண்டார்கள், இது எப்படி முகலாயரும் மகாராஷ்டிரரும் வீழ்ச்சியடையக் காரணமாயிருந்தது. இதனால் எப்படி ஆங்கில அரசு இங்கு ஏற்பட்டது என்றெல்லாம் சொல்லி, முடிவில் இன்று நாட்டில் ஏற்பட்டுள்ள புது விழிப்பையும் எடுத்துரைக்க வேண்டும். இவ்விதம் பார்க்கும்போது, இப் புது முறையில் கல்வி கற்பிப்பதற்கான துறைகளுக்கும் வசதிக்கும் எல்லையே இல்லை. குழந்தையின் மூளையையும் ஞாபக சக்தியையும் அனாவசியமாய்க் கஷ்டப்படுத்தாமல், இவையனைத்தையும் எவ்வளவு விரைவாய் அவன் கற்கும்படி செய்யலாம்!

இதை இன்னும் சற்றே விரித்துச் சொல்லுகிறேன். உயிர் நூல் வல்லவரொருவர், உயிர் நூலையே செம்மையாக அறியவேண்டுமாயின், உயிர் நூல் மட்டுமன்றி மற்றெல்லா அறிவியற் கலைகளையும் அவர் நன்ருய்க் கற்றிருக்க வேண்டும். அதுபோல, ஆதாரக் கல்வியும் ஓர் அறிவியற் கலை என்று நாம் கருதுவோமானல், அது நம்மை வித்தையில் எல்லையில்லாத துறைகளிலெல்லாம் அழைத்துச் செல்கிறது. மறுபடியும் தக்ளியையே பார்ப்போம். நூற்கக் கற்றுக் கொள்ளும் ஆசிரியர், நூற்றலில் நிபுணராக வேண்டியது வாஸ்தவம்; ஆனல், யந்திரம்போல் நூற்பதை கற்பதோடுமட்டும் நில்லாமல், நூற்றலின் தத்துவத்தை அவர் உணர்வாரானல், தக்ளியையும் அதன் பல்வேறு அம்சங்களையும் நன்ருய்க் கருத்தில் இருத்துவார். இந்தத் தக்ளியின் வட்டு ஏன் பித்தளையால் செய்திருக்கிறது. கம்பி ஏன் இரும்பால் செய்திருக்கிறது என்று அவர் ஆராய்வார். முதலில் உபயோகித்த தக்ளியில் இருந்த வட்டு எப்படியெல்லாமோ செய்யப்பட்டிருந்தது. புராதனத் தக்ளியிலோ, மரக் கம்பியும், கற்பலகையால் அல்லது களிமண்ணல் செய்த வட்டும் இருந்தன. இப்போது உபயோகத்திலுள்ள தக்ளி, அறிவைச் செலுத்தி அபிவிருத்தி செய்யப்பெற்றதாகும்; பித்தளை வட்டு போடுவதற்கும் இரும்புக் கம்பி போடுவதற்கும் காரணமிருக்கிறது. இக் காரணத்தை அவர் கண்டறியவேண்டும். அதன் மேல் அவர், இந்த வட்டு ஏன் இதே குறுக்களவுடையதாயிருக்கவேண்டும், இதைவிடக் கூடுதலாகவோ குறைவாகவோ ஏன் இருத்தலாகாது என்பதைச் சிந்தித்துப் பார்க்க

வேண்டும். இக் கேள்விகளுக்குரிய விடையையெல்லாம் திட்டமாய் அறிந்து, இவைசம்பந்தமான கணக்கு விவரமும் அவருக்குப் பூர்த்தியாய்த் தெரிந்துவிட்டதானால், அவர் திறமை வாய்ந்த என்ஜினியராகிவிட்டார் என்று கூறலாம். அப்போது தக்கிளியே அவருடைய காமதேனுவாகிறது இதன் மூலம் கற்பிக்கக் கூடிய பாட வகைகளுக்கு எல்லையே இல்லை. கற்பிப்பவருடைய சக்தியின் அளவும் மனத் தெளிவின் அளவுமே பாடவகைக்கு எல்லைகள்.

நூற்றல் எனக்குத் தெரிந்த தொழிலானமையால் அதைப்பற்றி இவ்வளவு விரிவாய்க் கூறினேன். நான் தச்சனுயிருந்தால், இத்தனையையும் தச்சுத் தொழில் மூலமாகவே என் குழந்தைக்குக் கற்பிப்பேன். அட்டைப்பெட்டி செய்பவனுயிருந்தால், அத்தொழில் மூலமாகவே கற்பிப்பேன்.

சுயமான அறிவும் உண்மையான ஆர்வமும் பொருந்தியவர்களாய், மாணவருக்கு இன்று என்ன கற்பிப்போம் என்று நாள் தவருமல் கிரச் சிந்திப்பவர்களாயுள்ள கல்வியாளரே நமக்கு இப்போது தேவை. நெடுங்காலமாய்த் தூசு படிந்து கிடக்கும் பெரிய புத்தகங்களின் மூலம் ஆசிரியருக்கு வேண்டிய நல்லறிவு பிறந்துவிடாது. கூர்ந்து நோக்கியறிகிற பண்பையும் சிந்தனை செய்யும் பண்பையும் நன்ருய்ப் பயன்படுத்திய பிறகு, ஒரு தொழிலின் துணைகொண்டு வாய்மொழி மூலமாகவே அவர் தமது அறிவெல்லாம் பிள்ளைகளுக்கு வரும்படி செய்யவேண்டும். இது, போதன முறையில் பெரும் புரட்சி என்றும், ஆசிரிய

ருடைய மனப் போக்கில் பெரும் புரட்சி என்றுமே பொருள்படும். இது வரையில், பள்ளிக்கூடத்தைப் பார்வையிட்ட இன்ஸ்பெக்டர்கள் எழுதிய அறிக்கைகளே உபாத்தியாயர்களுக்கு வழிகாட்டி வந்தன. இன்ஸ்பெக்டர் விரும்பக்கூடியதைச் செய்தால்தான் பள்ளிக்கூடத்துக்கு அதிகமான உதவித் தொகை கிடைக்க வழியுண்டு, அல்லது உபாத்தியாயர்களுடைய சம்பளம் உயர வழியுண்டு; ஆதலால், உபாத்தியாயர்கள் இன்ஸ்பெக்டர் விரும்பியதையே செய்து வந்திருக்கிறார்கள். ஆனால், இப்புதுமுறையில் உபாத்தியாயராயுள்ளவர் இப்படிப்பட்டது எதற்கும் கவலைப்படமாட்டார். 'என்னிடம் படித்த மாணவனை முன்னிலும் சிறந்த மனிதப் பண்புடையவனாகச் செய்துவிட்டேனானால், என் கடமையைச் செய்தவனாவேன்; இப்படிச் செய்வதில் என் பொருள்களனைத்தையும் நான் செலவிட்டபோதிலும் பாதகமில்லை; கடமையை நிறைவேற்றியதொன்றே எனக்குப் போதும் என்றுதான் இவ்வுபாத்தியாயர் கருதுவார்.

ஆசிரியர்களின் பயிற்சி

'இப்போதுள்ள ஆசிரியர்களுக்குத் தொழிலை மட்டும் தனியே கற்பித்துப் பின்னர் இயைபு முறையை வேறாகப் பயிற்றினால் போதாதா? ஏழு வயதுக் குழந்தைபோல் தொழில்மூலமே கற்பதாகிய புது முறையில் அவர்களும் பயில ஆரம்பித்தால் பல வருஷ காலம் வீணாகாதா!' என்பது கேள்வி. ஆகாதென்றே கூறுவேன். என்னிடம் வருகிற ஆசிரியர்,

கணிதம் சரித்திரம் முதலான பாடங்களில் தேர்ச்சி பெற்றிருக்கிறார் என்று வைத்துக்கொள்வோம். அட்டைப்பெட்டி செய்யவோ நூல் நூற்கவோ அவருக்கு நான் கற்பிக்கிறேன். அவர் அத்தொழிலைக் கற்று வரும்போதே, அவர் பெற்றிருந்த கணிதம், சரித்திரம், பூகோளம் முதலான பலவகைப் பாட அறிவு முழுமையும் எப்படி அத்தொழில் மூலமாகவே பெற முடியும் என்பதை அவருக்குக் காட்டுகிறேன். இவ்விதமாக, தொழிலுடன் தம்மறிவை இயைபு படுத்த அவர் கற்றுக்கொள்கிறார். இதற்கு அதிக காலம் பிடிக்காது. மற்றோர் உதாரணத்தையும் குறிப்பிடலாம், ஏழு வயதுள்ள என் மகனையழைத்துக் கொண்டு ஆதாரப் பாடசாலைக்கு நான் போகிறேனென்று வைத்துக்கொள்வோம். இருவரும் நூற்கக் கற்றுக்கொள்கிறோம். கற்றுக்கொள்வதில், எனது முந்திய அறிவு முழுமையையும் நான் நூற்றலுடன் இணைத்துப் பார்க்கிறேன். ஆனால், என் மகனுக்கோ எல்லாம் புதிதாயிருக்கிறது. எழுபது வயதான தகப்பனுக்கு எல்லாமே பழம் பாடந்தான்; ஆனபோதிலும், அதுவே அவருக்குப் புதிய அமைப்புடன் பெறுகிற அறிவாயிருக்கிறது. இந்த அமைப்பை அவர் கற்கச் சில வாரத்துக்குமேல் ஆகாது. எனவே, இவ்விஷயத்தில் ஏழு வயதுக் குழந்தைக்குள்ள ஆர்வமும் புதியதை ஏற்றுக்கொள்ளும் பண்பும் உபாத்தியாயரிடம் பொருந்தி வளராவிட்டால், அவர் கேவலம் யந்திரம்போல் நூற்பவராகத்தான் ஆகிவிடுவார்; புதுமுறைக் கல்வி பயிற்றும் தகுதி இதனால் அவருக்கு ஏற்படாது.

புதுமுறைக் கல்வி பயின்ற மாணவன் தகுதி

பழைய முறையில் மெட்றிகுலேஷன் படித்துத் தேறின பிள்ளையையும், ஆதாரக் கல்வி படித்து முடித்த பிள்ளையையும் ஒப்பிட்டால், ஆதாரக் கல்வி பயின்ற பிள்ளையே மேலானவனு யிருப்பான்; ஏனெனில், இவனுடைய அறிவுத் திறனெல்லாம் முறையான வளர்ச்சி பெற்றிருக்கின்றன. மெட்றிகுலேஷன் பரீட்சை தேறிவிட்டுப் பின் கல்லூரியில் படிக்கப் போகும் பிள்ளை ஒன்றும் தெரியாமல் திண்டாடுவதைப்போல் இவன் திண்டாடமாட்டான்.

ஏழு வயது

ஆதாரப் பாடசாலையில் படிப்புத் தொடங்குவதற்கான சராசரி வயது குறைந்த பட்சம் ஏழாகும்; எனினும், சிலருக்கு அதிக வயதாகலாம், சிலருக்குக் குறைந்த வயதே இருக்கலாம். மேலும், உடற் கிரம வயதையும் அறிவுக் கிரம வயதையும் கவனிக்கத்தான் வேண்டும். ஏழுவயதுள்ள குழந்தைகளில் ஒன்று, ஒரு தொழில் பழகுவதற்குத் தேவையான உடல்வளர்ச்சி அடைந்திருக்கலாம். மற்றொரு குழந்தை ஏழு வயது கடந்துங்கூட இவ் வளர்ச்சி இல்லாது போகவுங் கூடும். ஆகவே, இது சம்பந்தமாய்த் திட்டமான விதியொன்றும் ஏற்படுத்துவதற்கில்லை. பல்வேறு அம்சங்களையும் சேர்த்தே கவனிக்கவேண்டும்.

நகரக் கல்வி

கிராமத்துக்கேற்ற கல்வி வகுப்பதே நமக்கு இப்போது பெரிய பிரசினையாகும். தற்போதைக்கு நம்

நாட்டிலுள்ள ஏழு லக்ஷம் கிராமங்களுக்குக் கல்வி புகட்டுவது எப்படி என்பதை முடிவு செய்தால் போதுமானது. கல்வித் துறையாளர் நகரங்களைக் கருதியே திட்டம் போடுகிறார்களென்பது வாஸ்தவம். ஆனால், நாம் கிராமங்களோடு கூடவே நகரங்களையும் சேர்த்துத் திட்டம் போடுவதென்றால் நம் சக்தி வீண் விரயமாகும்.

பல ஆதாரத் தொழில்கள்

ஒரே கிராமத்தில் பல பள்ளிக்கூடங்களில் பல ஆதாரத் தொழில்கள் இருப்பது சரியாகாது. நம் கிராமங்களில் பெரும்பாலானவை மிகவும் சிறியவை; ஒன்றில் ஒரு பள்ளிக்கூடத்துக்குமேல் இருப்பது அருமை: பெரிய கிராமமாயிருந்தால் அதிகம் இருக்கலாம். இதுபற்றிப் பொது விதியாக எதுவும் நான் கூறுவது நியாயமாகாது. சொந்த அனுபவமே இதில் வழிகாட்ட வேண்டும். மக்கள் எந்தெந்தத் தொழில்களை விரும்புகிறார்கள், எந்தத் தொழில் மாணவனுடைய திறனுக்கெல்லாம் முழு விளக்கம் கொடுக்கிறது என்பவை முதலான அம்சங்களை ஆராய வேண்டும். நாம் எந்தத் தொழிலைத் தேர்ந்தெடுத்தாலும், அத்தொழில் குழந்தையின் திறனெல்லாம் சமமாகவும் பூர்த்தியாகவும் வெளிப்பட்டுப் பொலிவு பெறச் செய்ய வல்லதா யிருத்தல் வேண்டும்.

'வருஷ முழுமையும் ஒரே தொழிலைத் தொடர்ந்து செய்வதால் பிள்ளைகளுக்கு அலுப்புஏற்படும் ஆகவே, ஒவ்வொரு பள்ளிக்கூடத்திலும் பல ஆதாரத்தொழில்

களைக் கற்பித்தல் நலம்' என்று ஓர் ஆசிரியர் கூறுகிறார். இது சரியன்று. ஒரு மாதம் நூற்ற பிறகு, யாரேனும் ஓர் உபாத்தியாயர் கற்பிப்பதில் பிள்ளைகள் உற்சாகமிழந்து அலுப்படைகிறார்கள் என்று நான் கண்டால், அவ்வுபாத்தியாயரை நான் பள்ளிக்கூடத்திலிருந்து நீக்கிவிடுவேன். ஒரே வாத்தியத்தில் புதிது புதிதான இசை கணக்கின்றி வெளி வந்துகொண்டிருக்கும்; அதுபோல, ஒவ்வொரு பாடத்திலும் எவ்வளவோ புதுமை பிறக்க இடம் உண்டு. குழந்தையானவன் ஒரு தொழில் கற்றுக்கொண்டிருந்ததை விட்டு மற்றொரு தொழிலைக் கற்றுக் கொள்ளத் தொடங்குவதென்றால், இது குரங்கு எங்கும் தங்க இடமில்லாமல் கிளைக்குக் கிளை தாவுவது போலாகும். அறிவியல் ரீதியாக நூற்றலைக் கற்பிப்பதென்றால், நூற்றல் மட்டுமின்றி வேறு பல பாடங்களையும் கற்பதாகுமென்று நான் விளக்கமாய் கூறியிருக்கிறேன். விரைவில் குழந்தை தனக்கு வேண்டிய தக்கிளியும் விசனமும் தானே செய்துகொள்வதற்குத் தயாராகி விடுவான். ஆதலால், உபாத்தியாயர் அறிவியல் ரீதியாக ஒரு தொழிலைக் கற்பிக்க முற்படுவாரானால், பல துறைகளில் அவர் குழந்தைகளின் அறிவைச் செலுத்தி வளர்ப்பவராவார்; இவை யாவும், குழந்தையின் திறன்களனைத்தையும் வளர்க்கப் பேருதவியாயிருக்கும்.

ஆதாரத் தொழிலும் பிற்கால வாழ்க்கையும்

வட்டிக்கடைக்காரர் மகன் வட்டிக்கடை வைப்பானென்றே மற்றோர் எதிர்பார்ப்பார்கள்; இவ்வித

மாகப் பிற்காலத்தில் வேறு தொழில் நடத்தப் போகிறவன் ஏழு வருஷகாலம் ஆதாரத்தொழில் பயில்வதில் ஏன் காலத்தை வீணுக்கவேண்டும் என்று ஒருவர் கேட்கிருர். புதிய கல்வி முறையை இவர் கொஞ்சமும் அறியவில்லை என்பதையே இது காட்டுகிறது. ஆதாரக்கல்வி பயிலவரும் பையன். தொழில் கற்பதற்காகமட்டும் பள்ளிக்கூடம் செல்வதில்லை' தனக்குரிய ஆரம்பக்கல்வி பெற, அதாவது அத்தொழில் மூலமாய்த் தன் மனத்துக்குப் பயிற்சி தரவே அவன் பள்ளிக்கூடம் போகிருன். ஆதலால், இவ்விதம் ஏழு வருஷம் புதுக்கல்வி பயின்ற பையன், சாதாரணக் கல்வி ஏழு வருஷம் பயின்ற பையனை விட உண்மையில் அதிகத் திறமையோடு பாங்கித் தொழில் செய்வானென்றே நான் திட்டமாய்க் கூறுகிறேன். சாதாரணக் கல்வி பயின்ற பையன், பாங்கித்தொழில் கற்பிக்கும் பாடசாலைக்குச் சென்ருல், ஒன்றும் புரியாமல் சங்கடப்படுவான்; ஏனென்ருல், அவனுடைய பண்புகள் யாவும் ஏற்றபடி பயிற்சி பெறவேயில்லை.

நம் விருப்பு வெறுப்புக்கள் எளிதில் மாறுவதில்லை. இப் புதிய முறையானது, கொஞ்சம் எழுத்தறிவும் கொஞ்சம் தொழிற் பயிற்சியும் மட்டும் சேர்ந்தது அன்று என்பதை எல்லோரும் உணர்தல் வேண்டும். தொழிலைக் கருவியாக வைத்து ஆரம்ப நிலை வரையில் அளிக்கிற பூர்த்தியான கல்வியே இப் புதிய கல்வி.

ஹரிஜன், 25-2-1939, 3-4-1939

கரு

சேவாகிராமக் கல்வி முறை.

கிஷோரிலால் மஷ்ருவாலா

க. காந்தியடிகள், கல்வி சம்பந்தமாய்ச் சில புதிய கருத்துக்களை வெளியிட்டு ஒரு திட்டத்தையும் வகுத்திருக்கிறார்; இக்கருத்துக்களும் திட்டமும், சேவா கிராமக் கல்வி முறை என்ற பெயரால் வழங்கு கின்றன.

உ. குழந்தையானவன், பெரியவனான பின், உலகத்தில் சிறந்த பிரஜையாக விளங்கவேண்டும்: இதன் பொருட்டு, அவனுக்குப் பயிற்சியளிப்பதில், அஹிம்சா தத்துவத்தைக் கடைப்பிடிப்பதுதான் இந்தக் கல்வி முறையாகும்.

ந. போரிடும் மனப்பான்மையை நீக்கி விட்டு, சாந்தமாக வாழும் மனப்பான்மை வளரச் செய்ய வேண்டும். இதன் பொருட்டு எல்லா நாட்டுக் குழந்தைகளுக்கும், எல்லா வகுப்புக் குழந்தைகளுக் கும், இந்த முறையைக் கைக்கொள்ளலாம். சந்தர்ப் பத்துக்கேற்ற சொற்ப மாறுதல்களை இம்முறையில் செய்யவேண்டியிருக்கும்.

ச. கொஞ்சமேனும் பகுத்தறியும் திறன் குழந் தையிடம் என்று வெளிப்படுகிறதோ அந்த இளம் பிராயம் முதல், நாட்டுப் பிரஜைக்குரிய கடமைகளில் குழந்தையையும் தனக்குரிய பங்கு கொள்ளச் செய் வதே இந்த முறையின் நோக்கமாகும்.

ரு. ஏதேனுமோர் ஆக்குந் தொழிலே இந்த முறைக்கு அச்சாணி போன்றது. அந்தத் தொழிலையே முக்கியமாக வைத்து, அதன் மூலமாய், அதனோடு சம்பந்தப்பட்ட வகையில் குழந்தைக்கு எல்லா விஷயங்களிலும் பயிற்சி அளிக்கப்பெறும். சரித்திரம், பூகோளம், கணிதம், பௌதிக சாஸ்திரங்கள், சமூக நூல்கள், பொது இலக்கியம் முதலான பாடங்கள் யாவும் இந்தத் தொழிலையே மையமாகக் கொண்டு நடைபெறும். யாவும் இதனோடு தொடர்புடையனவாகவே இருக்கும். அப் பாடங்களில், இத் தொழிலுக்குத் தொடர்பில்லாத விஷயங்களை விட்டு விடுவதில்லை; அவைகளும் கற்பிக்கப்பெறும்; ஆனால், தொடர்புடைய விஷயங்களே முதன்மை பெறும்.

சா. இவ்விதமாக, தொழிலே கல்வி போதிப்பதற்குரிய வழியாகவும், கருவியாகவும் இருக்கும். இது மட்டுமன்று. மனித வாழ்வு செம்மையாக நடைபெறுவதற்குத் தொழில் செய்யாமல் முடியாது; ஆகவே, இந்த அளவுக்கு, தொழிலே கல்வி போதிப்பதன் லக்ஷ்யமாகவும் இருக்கு. எவ்விதமான உடலுழைப்பாயிருந்தாலும் - குப்பை வாருந் தொழிலாயிருந்தாலுஞ் சரியே - அந்தத் தொழிலும் கௌரவமுடையது; பாடுபட்டுத்தான் ஒவ்வொருவரும் நேர்மையான முறையில் தம் வாழ்க்கைக்கு வேண்டியதைத் தேடிக்கொள்ள வேண்டும். இந்த எண்ணங்களைக் குழந்தையின் உள்ளத்தில் பதியச் செய்வதே இக் கல்வி முறையின் நோக்கமாகும்.

எ. கற்பிக்கும் தொழில் மூலமாய், குழந்தையிடம் உள்ள சீலம், அறிவு, உடல் திறன் ஆகிய

பண்புகள் வெளிப்பட்டு விளக்கமெய்துமாறு செய்வதே ஆசிரியரின் நோக்கமாயிருத்தல் வேண்டும்.

அ. சமூகக் கலைகளையும் சுகாதாரத்தையும் வெறும் ஏட்டுப் பாடமாகப் பிள்ளை அறிந்தால் போதும் என்ற கருத்தோடு போதிக்கவில்லை. ஆனால், கிராமம் முழுமைக்கும் - மனிதன் மட்டுமன்றி வாயில்லாப் பிராணிகளையும் சேர்த்து - தொகுப்பான பொதுத் திட்டங்களையும், தனி அம்சங்களுக்குரிய தனியான திட்டங்களையும் வகுத்துச் சேவைபுரிவதன் மூலமே இந்தப் பாடங்கள் போதிக்கப்பெறும் பள்ளிக்கூடமானது, சுற்றிலுமுள்ள சமூகமெங்கும் சிறந்த பண்பாடு பரவுவதற்குரிய மத்திய நிலைக்களனாக விளங்கும்.

௯. இந்த முறையைச் சுருக்கமாய்க் கூறுவதானல், பின்வருமாறு கூறலாம்; "கை கால்களையும் புலன்களையும் பழக்குவது மூளைக்கும் இதயத்துக்கும் பயிற்சி தரவேண்டும்; பள்ளிக்கூடப் பயிற்சியானது, குழந்தையைச் சமூக சேவையிலும் இறையுணர்ச்சியிலும் செலுத்த வேண்டும்."

௧௦. பள்ளிக்கூடத்தில் குழந்தைகள் வாழும் கூட்டு வாழ்க்கையில், அவர்கள் நாள்தோறும் மூன்று அல்லது நான்கு மணிநேரம் உடல் வருந்தி உழைக்க வேண்டும். சிறுவராயினும் சிறுமியாயினும் சரி, அவர்கள் எந்தவகுப்பில் படித்தாலும்சரி, இத்தகைய உழைப்பே அவர்களுக்கு ஆரோக்கியத்தையும் கல்வியையும் அளிக்கவல்ல பாடம் என்பதே இம் முறையின் மூலதத்துவம். "பூர்த்தியான ஏதேனுமொரு

தொழிலறிவுடன் கூட, பூர்த்தியான விஞ்ஞான அறிவும் உண்டாகக்கூடிய விதமாக ஒவ்வொருகுழந்தைக்கும் கல்வி போதிக்க வேண்டும். இக் கல்வியானது ஆண் பெண் என்ற வேறுபாடோ, சாதி செல்வம் பற்றிய வேறுபாடோ இல்லாமல், மக்களாய்ப் பிறந்தோர் எவருக்கும் உரியதாகும். சமூகம் முழுமைக்கும் இதுவே நல்லது; விஞ்ஞானக் கலைக்கும் தொழிற் கலைக்குமே இதுதான் நன்மை தரவல்லது" என்று கூறுகிருர் குரோபாட்கின்.

கக. தற்போதுள்ள கல்வி முறைப்படி பிள்ளைகளுக்குத் தங்கள் படிப்பு பூர்த்தியான பின் என்ன செய்யப் போகிருர்கள் என்பது கல்லூரி (காலேஜ்) படிப்பை முடித்த பிறகுங்கூடத் தெரியாது. நம் நாட்டில் இப்போது இளம்பிள்ளைகளும் பெண்களும் ஆரம்பப் பாடசாலைப் படிப்பை முடித்துப் பின் உயர்தரப் பாடசாலையில் படிக்கிருர்கள்; உயர்தரப் பாடசாலையில் படித்து முடித்த பின் கல்லூரிக்குப் படிக்கச் செல்லுகிருர்கள்; ஏராளமான பொருட் செலவில்தான் இவர்கள் இப்படிப்படிக்கிருர்கள். பொருள் வசதி மிகவும் குறைவாயுள்ள குடும்பத்துக் குழந்தைகள் மட்டுமே இப்படிப் படிக்க இயலாதிருக்கின்றன. பொருள் வசதியிலிருந்து படிக்கிற குழந்தைகள் பாடசாலைகளிலும் கல்லூரிகளிலும் கலாசாரம் பற்றிய பயிற்சியும் வேறு உயர்தரக்கல்வியும் கிடைக்கும் என்று சொல்லுகிருர்களே, இவற்றைப் பெற வேண்டும் என்ற ஆசையால் அங்குப் போய்ப் படிக்கவில்லை; அவர்கள் வேறு என்னதான் செய்யவேண்டும் அல்லது என்னதான் செய்வது என்று வழி எது

வும் புலப்படாமல், இவ்வாறு உயர்தரப் பாடசாலைக்கும் கல்லூரிக்கும் போகிறார்கள். வாழ்க்கையில் என்ன வேலை செய்வது என்ற சிக்கலான பிரச்னைக்கு முடிவு காணத் தெரியாமல் இவர்கள், 'ஏதோ இப்போதைக்குப் படித்துக்கொண்டு போனால் பிற்பாடு நடப்பது நடக்கிறது' என்ற மனப்பான்மையோடு தான் பள்ளிக்கூடத்தில் படிக்கச் செல்கிறார்கள். இவ்வாறு, எவ்விதக் குறிக்கோளும் இல்லாத முறையில், குழந்தை வளரும் இளம்பருவத்தில் இருபது வருஷ காலத்துக்கும் அதிகமாய்க் கழிந்துபோகிறது; இதன் பயனாய்ச் சிறு பிள்ளையினிடம் வாழ்க்கையில் எதிலும் வீண்கால விளம்பம், தயக்கம், மனவுறுதியில்லாத சபலசித்தம், விரைந்து ஒன்றை முடிவு செய்யுந் திறனின்மை ஆகிய பழக்கங்கள் உதிக்கின்றன. இந்த நிலைமைக்கு மாறாக, சேவாகிராமக் கல்வி முறையின் நோக்கமானது, குழந்தை தன் பிற்கால வாழ்வில் என்னவித வாழ்க்கை அல்லது வேலையை மேற்கொள்ள நேரும் என்பதை எவ்வளவு இளம் பருவத்தில் நிர்ணயிக்க இயலுமோ அவ்வளவு இளம் பருவத்தில் நிர்ணயிக்க உதவுவதாயிருக்கும்; அன்றியும், இக் கல்வி முறையில் பயின்ற குழந்தை, தன் வாழ்க்கையில் கைக்கொள்ளத்தக்க ஒரு தொழிலையேனும் இங்கே கற்றிருக்கும்; இந்தத் தொழில் மூலம் கிரமமான முறையில் வாழ்க்கை நடத்துவதற்குப் போதுமான வருவாயும் அக் குழந்தைக்குக் கிடைக்கும்.

கஉ. சேவா கிராமக் கல்வி முறைப்படி, எழுத்துப் படிப்பை அறிவென்றோ, அறிவு பெறுவதற்கான கருவியென்றோ கொள்வதில்லை. (எழுத்துப் படிப்பு

அல்லது எழுத்தறிவு என்பது, எழுதுவதாலும் படிப்பதாலும் பல விஷயங்களையும் பற்றிய செய்திகளைத் தெரிந்துகொள்வதாயும், தர்க்க ரீதியான வாதத்தையோ போலித் தர்க்கத்தையோ புரிந்துகொள்ளும் திறமையையும் குறிக்கும்.) ஆனால், அறிவு, நாகரிகமான அறியாமை என்ற இரண்டையுமே காட்டக் கூடிய ஓர் அடையாளம் என்றுதான் எழுத்துப் படிப்பைக் கொள்வார்கள். இந்த அறிவு எதிலிருந்து உதிக்கிறதோ அந்த மூலத்தை உண்மையாக உணர்ந்தால்தான், இவ்வடையாளத்தை அறிவது அவசியமாகும், அறிவதற்கும் பயனுண்டு. அந்த மூலத்தை உண்மையாக உணரச்செய்வதே சேவாகிராம முறையின் நோக்கமாகும். உழைப்பு, கூர்ந்த கவனம், அனுபவம், சோதனை, சேவை, அன்பு முதலியன இதற்கு வழிகள். இவையில்லாமல் வெறும் புத்தகங்களை மட்டும் கொண்டு படிப்பது, படிக்கும் பிள்ளையின் ஆன்மப் பண்புகளும் விவேகத் திறனும் ஓங்குவதற்குத் தடையாயிருக்கிறது; அன்றியும், அவனுடைய உடல் வளர்ச்சியையும் இது கெடுத்து விடுகிறது.

கரு. சேவாகிராம முறைப்படி ஒரு மாணவன் பயில்கிற பாடத்தில், தாய்மொழியில் சிறந்த அறிவு பெறுகிறான்; அதன் இலக்கிய வளத்தையும் சுமாராய் அறிந்துகொள்கிறான். இந்திய நாட்டின் பொது மொழியான ஹிந்துஸ்தானியில் விவகாரத்துக்கு வேண்டிய அளவு தேர்ச்சி பெறுகிறான். கணிதம், சரித்திரம், பூகோளம், பௌதிக நூல்கள், சமூக நூல்கள், சித்திரம், சங்கீதம் முதலிய பாடங்களிலும்,

கவாத்துப் பழகுதல், ஆட்டங்கள் விளையாடுதல், உடற்பயிற்சி அப்பியாசங்கள் செய்தல் முதலியவற்றிலும் இவன் பொதுவான அறிவு பெறுகிறான். இவற்றோடு கூட, ஒரு தொழில் துறையையும் கற்றுக்கொள்கிறான். குறித்த மாணவன், சாமானியப் புத்தி கூர்மையுடையவனாயிருந்தால், கற்றுக்கொண்ட இந்தத் தொழிலைக்கொண்டே சாமானியமான வாழ்க்கை நடத்துவதற்குப் போதிய திறமை இதில் அவனுக்குக் கைவந்திருக்கும். பையன் இன்னும் அதிகப் புத்தி கூர்மையும் உற்சாகமு முடையவனாயிருக்கும் பட்சத்தில், அவன் விரும்பினால், இக் கல்விக்கும் மேலாக, பொதுவான உயர்தரக் கல்விப் பயிற்சியோ அல்லது உயர்தரத் தொழிற் பயிற்சியோ பெற்றுக்கொள்ள வசதியுண்டு. ஆதாரக்கல்வி என்ற நிலையில், ஆங்கில மொழிக்கோ, வாழ்க்கையில் அனுபவ சாத்தியமில்லாத அல்லது பொதுவாய்த் தேவையாயிராத வேறெந்தப் பாடத்துக்குமோ, இடங் கிடையாது; மாணவனது புத்தியைத் தொழிற் படுத்திப் பயிற்றுவதற்கு இன்றியமையாதது என்று சொல்வதற்கில்லாத பாடமாயினும் சரி, மேலும் தேவையாயிருப்பதை அவன் தானாகவேபயிலுவதற்கு ஆதாரமாய் அமையாத பாடமாயினும் சரி, இதற்கும் அந்த ஆதாரக்கல்வி நிலையில் இடங் கிடையாது.

கஎ. அந்தச் சேவாகிராமக் கல்வி முறையில், ஆதாரத் திட்டமென்பது, ஏழு வருஷத்துக்குக் குறையாமல் நடக்கிற பாடத் திட்டமாகும்; அவசியமானால், காலம் இன்னும் கொஞ்சம் அதிகமாகலாம். இத் திட்டத்துப் பாடசாலைகள் தங்களுக்

காகும் செலவை, பின்னால் விவரித்திருக்கிறபடி, தாங்களே வகித்துக்கொள்ள முடிந்து, குழந்தைகளின் பெற்றோர் அல்லது பாதுகாப்பாளர் முதலானோருக்கும் இதனால் கொஞ்சம் நன்மை ஏற்பட்டால், குழந்தைகள் இன்னும் அதிகக் காலம் பாடசாலையில் படிக்கலாம்; படிப்பதில் பெற்றோருக்குக் கஷ்டமெதுவும் இருக்க முடியாது.

கரு. அரசாங்கத்தின் கடமையையும் பொறுப்பையும் குறித்தும், ஒருவர் வாழ்க்கை நடத்துவதற்குரிய குறைந்தவிதக் கூலி என்னவாகும் என்பதைக் குறித்தும் சேவாகிராம முறையில் சில அடிப்படையான கொள்கைகள் இருக்கின்றன. இவை கீழே சொல்லப்பெறும்.

கசு. உழைப்பதற்கு மனமுள்ள யுக்த வயதினர் அனைவருக்கும், அரசாங்கமானது ஓரளவு கட்டாயத்தின் மேலேனும் பயிற்சியளித்து, பயனுள்ள வழியில் அவர்களை வேலையிலமர்த்திக்கொண்டு ஆரோக்கியமாக உயிர் வாழ்வதற்கு அவசிமான குறைந்தபட்ச சம்பளத்தையேனும் அவர்களுக்குத் தரவேண்டும். இவ்விதம் செய்யத் திறமையற்ற ஓர் அரசாங்கம், அரசாங்கம் என்ற பெயருக்கே தகுதியற்றது.

கஎ. கிலவாசிகள் * தற்போதுள்ள நிலையில் உயிர் வாழ்வதற்கான குறைந்த சம்பள விதம், இந்தியாவைப் பொறுத்த வரையில், கிரமமான சாதாரண வேகத்தில் வேலை செய்யும் நேரம் ஒரு மணிக்கு ஓரணாவுக்குக் குறைவாயிருக்கக் கூடாது என்று நிர்ணயிக்கப்பட்டிருக்கிறது.

* இது 1937 ம் வருஷத்தைய நிலை, இன்றுள்ள நிலையில் இதைப் பலமடங்கு பெருக்கிப் பார்க்கவேண்டும், பின்வரும் உ௰ ஆம் பாராவில் கண்ட சம்பள விகிதத்துக்கும் இதுவே பொருந்தும்.

௧௮. இன்றைய அரசாட்சி முறையும் சமூக அமைப்பும், இந்தத் திட்டத்துக்கு ஒத்த மாதிரியில் இல்லை எனவே, "அரசாங்கம்" என்ற பெயர் நமக்குத் தகுதியானதன்று. இதிலுள்ள குறைபாடு நம்மால் வந்ததாயினும் சரி, அன்னியர் ஆதிக்கத்தால் விளைந்ததாயினும் சரி, இதற்குப் பரிகாரம்செய்தாகவேண்டும். சேவாகிராமக் கல்வி முறையைச் செவ்வையாகவும் தைரியமாகவும் ஏற்று நடத்தினால், அரசாங்கத்திலும் சமூகத்திலும் அவசியமாயிருக்கும் மாறுதல்களைச் செய்வதற்கு நமக்குப் போதிய தைரியமும் வரும், வழியும் புலப்படும்என்று காந்தியடிகள் சொல்லுகிறார்.

௧௯. இது நிறைவேறும் பொருட்டு, இப்படிப் பட்ட ஒரு தொழிலேனும் பூரணமாய் அரசாங்கத்தார் வசத்திலிருக்கவேண்டும்; இத் தொழிலானது எத்தனை தொழிலாளர் கிடைத்தாலும் அத்தனை பேரையும் அரசாங்கத்துக்கு எவ்வித நஷ்டமோ செலவோ நேராதபடி அதில் ஈடுபடுத்தத் தக்கதாயிருக்கவேண்டும்.

௨௦. இந்தியாவைப் பொறுத்தவரையில், கையால் நூல் நூற்றலும் கையால் நெய்தலுமே இத்தகைய தொழில் ஆகும். உற்பத்தித் தொழிலுக்குரிய மூலப் பொருள் வசதிபற்றிய வரையில், பருத்தி முதலியன நம் நாட்டில் இயற்கையாய் ஏராளமாகக் கிடைக்கின்றன. சிறப்பாக இத் தொழிலேயே செய்து வருவதற்கு வேண்டியிருக்கும் ஆள்பலமும் இங்கு மிக அதிகம். தவிர இதற்குரிய ஆரம்பப் பொருட் செலவோ மிகவும் குறைவு; மேலும், எத்தனையோ நூற்றாண்டுகளாக உலகெங்கும் பருத்தி நூலால் செய்த துணிகளை இந்தத் தேசந்தான் நெய்து வழங்கி வந்தது. ஆகவே, இந்த நாட்டின் பரம்பரையான தொழில் இதுவே என்ற அனுகூலமும் இதற்கு இருக்கிறது.

உக. இருந்தபோதிலும், நூற்பவனுக்குத் தரும் கூலியானது, என்றுமே இங்குப் போதுமானதாக இருந்ததில்லை. இன்றைய நிலையில், ஆலைச் சரக்குடன் கையால் நூற்று நெய்த துணி போட்டிபோட நேர்ந்த போது, அக் கூலி பின்னும் குறைந்துவிட்டது. எனவே, அதற்கு விமோசனம், அரசாங்கமும் பொது மக்களும் சேர்ந்து இந்தப்போட்டியை ஒழிப்பதாகும்; ஒழித்தாகிற வரையில், என்ன சம்பளம் கொடுத்தால் உழைப்பவன் சுமாரான வாழ்க்கை நடத்தக்கூடுமோ அந்தச் சம்பளம் அவனுக்குக் கிடைக்கக்கூடிய படி கையால் நூற்று நெய்த துணியாகிய கதர்த் துணிக்கு விலையை நிர்ணயித்து, ஆலைத் துணியை அடியோடு ஒழித்துவிட்டு, கதர்த்துணியையே அவர்கள் ஆதரித்து வரவேண்டும்.

உஉ. இதுமட்டும் போதாது. வாழ்க்கை நடத்துவதற்குரிய குறைந்த வீதக் கூலி கிடைக்கிற அளவுக்காவது, எல்லா வேலைக்கும் கூலித்திட்டம் உயரவேண்டும். இப்படி உயர்த்துவதற்கு அரசாங்கம் மக்களின் ஆதரவைப் பெறவேண்டும்; பொது மக்களும் இவ்விஷயத்தில் ஒத்துழைக்கவேண்டும்.

உங. முன்னமே கூறிய குறைந்த வீதக் கூலி யென்பது, வயதுவந்த முழு ஆளுக்குரிய கூலியாகும். ஆரம்பப் பாடசாலையில் படிக்கும் பிள்ளைக்கு இக்கூலி மணிக்கு அரையணு வீதம் என்று கொள்ளலாம்.

உச, சேவாகிராம முறைப் பாடசாலையில், எல்லா வகுப்புக்களும் பூர்த்தியாக இருக்கின்றன என்று வைத்துக் கொள்வோம். இந்நிலையில் இதில் ஏழு வகுப்புக்கள் இருக்கும். ஒரு வகுப்பில் சராசரி 25 பிள்ளைகள் இருப்பார்கள். ஆசிரியர் எட்டு அல்லது ஒன்பதுபேர் இருப்பார்கள். பிள்ளைகள் நாள்தோறும்

சராசரி மூன்று மணி நேரம் வேலை செய்யக்கூடும்; இப்படி வருஷத்தில் சுமார் ஒன்பது மாதம் வேலை நடக்கலாம் இந்தப்பிள்ளைகள் பாடசாலையில் செய்கிற பொருள்களை விற்பனை செய்வதனால் கிடைக்கும் வருவாயானது, ஆசிரியர்களுக்காகும் வருஷச் செலவைச் சரிக்கட்ட வேண்டும். ஆசிரியருக்குரிய குறைந்த சம்பளம் மாதம் 25 ரூபாயாகும். எக்காரணம் பற்றியும் இது 20 ரூபாய்க்குக் குறைவாயிருத்தலாகாது. வருவாய் இவ்விதம் செலவுக்குச் சரிக்கட்டி வருகிறதா என்பதுதான், இந்த முறைப் பாடசாலை திறம்பட நடப்பதைச் சோதிப்பதற்குரிய அடையாளமாகும். சரிக்கட்டவில்லையானால் பாடசாலை திறம்பட நடைபெறவில்லை என்பதே பொருள்.

உரு. பாடசாலை நடப்பதில் இந்த அளவு திறமை யாவது வருகிற வரையில், பிள்ளைகளின் தொழில் திறமையைப் பெருக்கவேண்டும்; போதனா முறைகளையும் அபிவிருத்தி செய்யவேண்டும்.

உசு. இன்று கிராமங்களில் சாமான்கள் தயார் செய்யும் கைவினைஞர்கள் மிகச் சொற்பக் கூலிக்கு வேலை செய்கிறார்கள். எனவே, மேற்கூறிய கணக்குப் படி கூலி கொடுத்துப் பள்ளிக்கூடப் பிள்ளைகள் தயார் செய்த சாமான்கள், இவர்கள் செய்தவற்றோடு போட்டியிட வந்துவிடுமோ என்ற அச்சம் ஏற்பட நியாயமில்லை. மேலே நாம் எதிர் பார்க்கிற அளவுக்கு, கிராமத்தின் கூலித் திட்டமே உயர்ந்து வருமானால், நாட்டுப்புறத்துக் கைவினைஞர்களுடைய தொழில் திறமையிலும் கருவிகளின் தன்மையிலும், அதற்கேற்ற அபிவிருத்தி ஏற்பட்டிருப்பது நிச்சயம். எனவே, போட்டி ஏற்படுமோ என்ற அச்சம் தோன்ற எவ்வகையிலும் ஆதாரமில்லை.

உஎ. மேற்குறித்தபடி பாடசாலையில் கூலி கிடைக்குமென்பதைத் தற்போதைக்கு அரசாங்கமே உறுதி செய்யவேண்டும். ஆதாரப் பாடசாலையைப் பொறுத்த மட்டும், மணியொன்றுக்கு அரையணு என்ற அளவுக்குக் கூலி வீதம் உயர்கிற வரையில், இக் கூலியானது அகில இந்தியக் கிராமக் கைத் தொழிற் சங்கத்திலும் நிர்ணயித்துள்ள கூலி விகிதத்தை ஒத்திருக்கவேண்டும். இது ஒரு விதத்தில் மறைமுகமாய் இப் பாடசாலைக்கு உதவியளிப்பது போல இப்போதைக்குத் தோன்றும்; விலைவாசிகள் இன்றுள்ள நிலையில், இப்படிச்செய்வது அரசாங்கத்துக்குப் பண விஷயத்தில் பாரமாகவும் தோன்றும். ஆயினும், தொழில் செய்பவர்களின் திறமையை வளர்க்கப் பெரிதும் இடமிருக்கிறது; கருவிகளையும் வேலைக்கு இன்னும் அதிகத் தகுதியுடையனவாக்க இடமிருக்கிறது. இவ்விதம் செய்வதன் மூலம், தொழில் செய்பவர்கள் என்ன குறைந்த விதப்படி கூலி பெறவேண்டுமென்று விரும்புகிறோமோ அந்தக் கூலியைப் பாடசாலையில் தொழில் செய்யும் பிள்ளைகளும் (அவர்களை யொத்த பயிற்சிபெற்று, அவர்கள் உபயோகிக்கும் கருவிகளை உபயோகிக்கிற) தொழிலாளர்களும், ஐந்து வருஷ காலத்துக்குள் சம்பாதிக்கும் நிலைக்கு வரமுடியும்; இந்தக் கூலியை இவர்கள் பெறுவதனால் உற்பத்தியாகும் பொருள்களின் விலை இப்போதிருப்பதைவிட விசேஷமாய் உயர்ந்துவிட அவசியமில்லை.

உஅ. மேலே விவரித்தபடி, பாடசாலையானது தனக்காகும் செலவைத் தானே வகித்துக்கொள்ள வேண்டும் என்பது, கல்வி பற்றிய ஒரு முக்கியமான

கொள்கை; செல்வ நிலையை மட்டும் கருதி இக் கொள்கையை வலியுறுத்தவில்லை. மற்றப்படி பாடசாலையானது, அதன் தொழிற் பகுதி சம்பந்தப் பட்ட வரையில், ஒரு கல்வி நிலையம் என்ற முறையில் திறமையாக வேலை செய்கிறதா என்று சோதிக்கவும் இக்கொள்கையே சரியான அளவுகோலாகும்.

௨௯. மேலே சுருக்கமாய்க் கூறிய இக் கல்வி முறை யானது, கதர்த் தொழிலை வைத்துத்தான் ஆதாரக் கல்வி பற்றிய வரையில் விளக்கமாக வகுக்கப்பட் டிருக்கிறது. இதனால், மற்றத்தொழில்கள் வேண்டாம் அல்லது அவற்றைப் புறக்கணிக்கலாம் என்பது அர்த்தமன்று: மற்றக் கைத்தொழில்களைப் பற்றிய விவரங்கள் விளக்கமாய் வகுக்கப் போதுமான அனுபவமும் அவைபற்றிய புள்ளி விவரங்களும் இன்னும் தயாராகவில்லை.

௩௦. பொருத்தமான மாறுதல்களைச் செய்து இந்தச் சேவாகிராமக் கல்வி முறையின் தத்துவங்களை அனுசரித்தே இன்னும் உயர்தரக் கல்விக்குரிய திட்டத்தையும் அமைக்கலாம். எந்தத் திட்டமாயிருந் தாலும், அதில் தன் செலவைத் தானே வகித்துக் கொள்ள வேண்டுமென்ற நிபந்தனை அவசியம் இடம் பெற வேண்டும். உயர்தர வகுப்புக்கள் பொறுத்தவரையில் பிள்ளைகள் செய்யும் தொழிலால் வரும் வருமானத்தைக் கொண்டோ, அல்லது அவர்கள் செலுத்தும் சம்பளத்தைக் கொண்டோ கல்லூரிக்குரிய செலவு நடைபெறவேண்டும்; மாணவ னொருவன் சம்பளம் செலுத்தாவிட்டால், எப்படியும் அவன் தன் செலவுக்கு, பள்ளிக்கூடத்தில் செய்யும் தொழில்மூலமாகவோ அல்லது வேறிடத்தில் தொழில் செய்தோ, வகை செய்துகொள்ளவேண்டும்.

ஹரிஜன், 4-12-1937.

சங்கத்தின் இதர தமிழ் வெளியீடுகள்.

1. ஆதாரக் கல்வி புதிய பாட திட்டம்:

(1-முதல் 5-வகுப்பு வரை)

ஆதாரக் கல்வி பாடசாலைகளுக்கு (Basic Schools) திருத்தி அமைக்கப்பட்ட பாடதிட்டங்களின் தொகுப்பு (Syllabus) ஒவ்வொரு மத்தியதர ஆசிரியருக்கும் அவசியமானது.

மொழிபெயர்ப்பு: மு. அருணாசலம் விலை ரூ. 1—4—0

2. ஆதாரக் கல்வி ஆசிரியர் பயிற்சி பாட திட்டம்:

ஆதாரக் கல்வி ஆசிரியர் பயிற்சி பாடசாலைகளுக்கான (Basic Training Schools) திருத்தி அமைக்கப்பட்ட பாடதிட்டங்களின் தொகுப்பு. டிரெயினிங் ஸ்கூல் ஆசிரியர்களுக்கு இன்றியமையாதது.

மொழிபெயர்ப்பு: மு. அருணாசலம் விலை ரூ. 1—8—0

3. உழைப்பின் தத்துவம்:

இது தேர்ந்தநிர்மாண ஊழியர்களும், இயற்கை வாழ்வில் பற்றுடையோரும் தம்கருத்தில் தெளிவு பெறச்செய்ய வல்ல சிறந்த புத்தகம்.

ஜே. ஸி குமரப்பா விலை ரூ. 1—4—0

4. சர்வோதய திட்டம்:

காந்தியடிகள் வகுத்துக் காட்டிய சர்வோதய லட்சியத்திற்கு அவருடைய பிரதம சிடர்களால் அமைக்கப்பெற்ற வேலை திட்டம். சர்வோதயக் கமிட்டியாரின் அநுமதியின்பேரில் ஆங்கிலத்திலிருந்து மொழி பெயர்த்து வெளியிடப் பெற்றிருக்கிறது.

விலை ரூ. 1—4—0

5. ஆதாரத் தொழில்: நூற்றல்.

நாடெங்கும் நடைபெறும் ஆதாரப் பாடசாலைகளுக்கு அடிப்படைத் தொழிலாக விளங்கும் நூற்றல் சம்பந்தமான அறிவு தத்துவங்களை விளக்கும் நூல். ஸ்ரீ வினோபா அவர்களின் ஹிந்துஸ்தானி மூலத்தின் மொழிபெயர்ப்பு.

மொழிபெயர்ப்பு: க. அருணாசலம் விலை ரூ. 1—8—0

தேவைக்கு

நிர்வாகி, காந்தி ஆசிரமம், திருமுங்கிலடி, சிதம்பரம்.